3 பொக்கிஷங்கள்




ஏஜண்டுகள் :

ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், கூதனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா, பேர்ஹாம்பூர் & செகந்திராபாத்; ஸ்ரீஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி

ஸிலோன் ஏஜண்டுகள் :

M. A. ப கனி & கோ., 96, சதாம்ஸ் ரோடு, கோட்டை, கொழும்பு



அசோஸியேடட் மெர்க்கன்டைல் கார்ப்பரேஷன், (மதராஸ்) லிமிடெட் என்ற சென்னையின் பிரபல ஏற்றுமதி இறக்குமதி கம்பெனியின் மானேஜிங் டைரக்டரான நெற்குப்பை திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார், பி. ஏ. அவர்கள் தொழில் சம்மந்தமாகச் சுற்றுப் பிரயாணம் செய்ய சமீபத்தில் விமானத்தில் லண்டனுக்குச் செல்லுவார். அமெரிக்காவில் பத்திரிகை நிருபர் கூட்டங்களில் பேசுவார். கானடாவில் சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சிக்கு இவர் விஜயம் செய்வார். பின்னர் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்விடன், ஸ்விட்சர்லாந்து முதலிய நாடுகளுக்கும் சென்று பிரபல தொழில் பிரமுகர்களையும் வர்த்தக நிபுணர்களையும் சந்திப்பார். பல தொழிற் சாலைகளையும் பார்வையிடுவார்.

ஸ்ரீ

யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்ஜ் ப்ளேஸ், கல்கத்தா

•

செலுத்தப்பட்ட மூலதனம்

ரூ. 2 கோடிகள்

ரிஸர்வ் நிதி

ரூ. 40 லக்ஷங்கள்

•

G. D. பிர்லா

சேர்மன்

•

B. T. தாகூர்

ஜெனரல் மானேஜர்

•

இந்தியா, பர்மாவில் எல்லா முக்கிய நகரங்கள் டவுன்களில் பிராஞ்சுகளும் உலகம் முழுவதும் ஏஜென்ஸி ஏற்பாடுகளும் உள்ளன.


"ஸ்ரீ தௌராலா சுகர் ஒர்க்ஸ்" உற்பத்தியை அதிகப்படுத்தி விருக்கிறார்கள்.
தௌராலா
க்யூப்
சர்க்கரை
உங்கள் வியாபாரியிடம் அல்லது டிபார்ட்மெண்ட்
கடைக்காரரிடம் விசாரியுங்கள்:
வியாபார விசாரணைகள் : ஸ்ரீ டில்லி க்லாத் & ஜெனரல் மில்ஸ் கம்பெனி லிட். டில்லி.
ADARTS (DELHI) LTD.
DCM. 75 TM.


சந்திரா
707
சோப்புகள்
CHANDRA
CHANDRA BAR SOAP
சலவைக்கு
மிகச் சிறந்தது
ஜெனரல் ஏஜென்ஸீஸ் (சேலம்) லிமிடெட்
திருச்சி ரோடு, குகை, சேலம்.
விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஸாம்பிள்கள் வேண்டுவோர் ரூ. 3. மணியார்டர் மூலம் அனுப்பவும்.

ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொசைட்டி லிட்.

தலைமை ஆபீஸ் :
ஆஜ்மீர் - இந்தியா

ஸ்தாபிதம் :
1907

மதராஸ் டிவிஷனல் ஆபீஸ் :
304, தம்புச் செட்டி தெரு, மதராஸ் 1.

முற்றிலும் தேசிய ஸ்தாபனம் :

அமுலில் உள்ள வியாபாரம்	சுமார்	ரூ.	20,00,00,000
ஆயுள் நிதி	,,	ரூ.	2,00,00.000
மொத்த ஆஸ்திகள்	,,	ரூ.	2,20,00,000
கொடுக்கப்பட்ட கிளெயிம் தொகை	,,	ரூ.	1,00,00,000

சேர்மன் : ஸ்ரீ B. N. ஜாலன், (சுராஜ்மல் நகர்மல் கம்பெனி), கல்கத்தா

தென்னிந்தியாவில் கிளைகள் : மதராஸ், மதுரை, திருச்சினாப்பள்ளி, கோயமுத்தூர், கொழும்பு, பெங்களூர், பெல்லாரி, பெஜவாடா

எல்லா முக்ய நகரங்களிலும் இன்ஸ்பெக்டர் ஆபீஸுகள் உள்ளன.

நீங்கள் மிகவும் விரும்பும் புகையிலை சிவபுரி புகையிலைதான்!



காற்றுப் புகாதபடி மின்சார வசதியால் செய்யப்பட்ட ஈயத் தகடு சுற்றிய பாக்கெட்டுகளில் கிடைக்கும்.

- குணம்
- சுத்தம்
- கலப்பின்மை
- உத்தரவாதம்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

கால் பவுண்டு பாக்கெட் ரூ. 1

ரூ. 1 பாக்கெட்டுகளைத் தவிர அணு 8, 4, 2, 1, அரையணு, காலணு, பாக்கெட்டுகளும் கிடைக்கும்

எல்லா முக்கிய நகரங்களிலும் ஏஜண்டுகள் தேவை

தி சிவபுரி புகையிலை லிமிடெட்

சிவபுரி :: சிதம்பரம் (வழி)



நீங்கள் உரிக்கும் ஒவ்வொரு
வாழைப்பழத்தோலிலுமிருக்கும்
அழுக்கினாலும் கிருமிகளாலும்
அபாயம் ஏற்படும்!
LIFEBUOY
SOAP
லைப்பாய் சோப்பினால் அடிக்கடி
சுத்தம் செய்துகொள்ளுங்கள்!
லைப்பாய் சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களைக் காப்பாற்றுகிறது



செய்திகளை முந்தித்தருகிற தினப் பத்திரிகைகள்

தினத்தந்தி சென்னை

தினத்தந்தி திருச்சி

தந்தி -மதுரை

தினத்-தாள் கோயமுத்தூர் - சேலம்

"தினத் - தந்தி" ஆபீஸ்,
41, கச்சேரி ரோட், மைலாப்பூர், சென்னை



மதராஸ் ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி, ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு:
B. பாலபட்டாபி
வைசியாள் தெரு, கோயமுத்தூர்


ஜூபிடர்
அபிமன்யு
மே 6வ முதல்
CINEMA
மதுரை - சிந்தாமணி
கோயமுத்தூர் - கர்னாடிக்
" - எடிஸன்ஸ்
பெங்களூர் - வெராஜி
" - ஸெலக்நிக்
திருச்சிராப்பள்ளி - ஸ்டார்
திருநெல்வேலி - ராயல்
சேலம் - அம்பிகா
கும்பகோணம் - ராஜா
தஞ்சாவூர் - யாகப்பா
காரைக்குடி - ஸ்ரீராமவிலாஸ்
காஞ்சீபுரம் - ராஜா
புதுச்சேரி - ரத்னா
சிதம்பரம் - வடுகநாதன்
கரூர் - அம்பிகா
விருதுநகர் - நியூ முத்து
நாகப்பட்டினம் - ஸ்டார்
ஆண்டர்ஸன்பேட்டை - மாடர்ன்
ஈரோடு - மினர்வா
புதுக்கோட்டை - பிரஹதாம்பாள்
ராஜபாளையம் - தனலட்சுமி
மாயவரம் - சுந்தரம்
விழுப்புரம் - சக்திவேலம்
திருவனந்தபுரம் - சித்ரா
பாலக்காடு - கெனடச் பிக்சர் பாலஸ்
கொல்லம் - ஸ்ரீமூலம் பிக்சர் பாலஸ்
14-5-48 முதல் திருப்பூர் — ஜூபிடர் & கஜலக்ஷ்மி
சீனரில் ஆரம்பம்!
சென்னை - பிராட்வே
மைசூர், வேலூர், திருப்பாப்புலியூர் முதலிய இடங்களிலும் ஆந்திரா, சீடட் ஜில்லாக்களிலும் உள்ள முக்கியமான இடங்களிலும் சீக்கிரம் திரையிடப்படும்
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா & புதுக்கோட்டை சமஸ்தானம்:
ராயல் டாக்கீ டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், மதுரை
மலபார் உரிமைகள்: வர்மா பிக்சர்ஸ், திருப்பணித்துறை
புக்கிங்குகளுக்கு: சந்துரு பிலிம்ஸ், எர்ணாகுளம்
ஆந்திராவுக்கு: பூர்ணா பிக்சர்ஸ், பெஜவாடா.

கல்கி

பொருளடக்கம்

மலர் 7
இதழ் 42

மே 16

சர்வதாரி
வைகாசி 3

இந்தியாவின் அரசியல் தலைமையைக் காந்தி மகான் ஏற்றுக் கொண்ட அதே சமயத்தில் சென்னையில் 'ஜஸ்டிஸ்' கட்சி தலையெடுத்தது. தமிழ் நாட்டிலுள்ள 'பாமர' மக்கள் மிகப் பெருந் திரளாக மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார்கள்; சாத்விக மறியல் செய்தார்கள்; சிறை சென்றார்கள். ஆனால் ஆங்கிலம் படித்த பட்டதாரிகளும், ஜமீன்தார்களும், மிராசுதார்களும் பெரும்பாலும் 'ஜஸ்டிஸ்' கட்சியில் சேர்ந்தார்கள். காங்கிரஸ் பகிஷ்கரித்த சட்ட சபைகளைக் கைப்பற்றினார்கள். இரட்டை ஆட்சியில் மந்திரி பதவி வகித்தார்கள்.



அத்தகைய சூழ்நிலையில் தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்களில் ஒரு சிலர் தீவிர தேசியக்கொள்கையில் நிலை பெற்று நின்றார்கள். அவர்களில் ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியார் ஒருவர். ஜமீன்தார்; மிராசுதார்; பி. ஏ. பட்டதாரி. எனவே ஸ்ரீ முத்துரங்க முதலியார் ஜஸ்டிஸ் கட்சியிலே சேர்ந்திருந்தால் பல பெரிய பதவிகளையும் பட்டங்களையும் இலகுவில் பெற்றிருக்கலாம். ஆயினும் தேச பக்தி குடி கொண்ட அவருடைய உள்ளம் பட்டத்தையும் பதவியையும் நாடவில்லை. தாய்நாட்டின் சுதந்திரத்தையே பெரிதாகக் கருதியது. காங்கிரஸில் சேர்ந்தார்; கதர் இயக்கத்தில் பற்றுக் கொண்டார்; காந்தி மகானிடம் பக்தி கொண்டார். இந்த மூன்று வித பக்தியிலும் அன்றிருந்து இன்று வரையில் சலியாமல் நிலைத்து நின்று வருகிறார்.

1930-ம் வருஷத்தில் ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியார் சென்னைக் கடை வீதியில் மறியல் செய்ததும் தடியடிபட்டதும் சிறை சென்றதும் என்றும் மறக்கமுடியாத சம்பவங்கள்.

ஸ்ரீ முத்துரங்க முதலியார் கள்ளங்கபடு அறியாதவர். மனதில் ஒன்று வைத்துக் கொண்டு வெளியில் ஒன்று பேச அவரால் முடியாது. நினைத்ததை நினைத்தபடி பேசுவார். வெட்டு ஒன்று துண்டு இரண்டுதான். அதோடு அபிப்பிராய பேதத்தைச் சிக்கட்டிக் கொண்டு போகும் வித்தை அவருக்குத் தெரியாது. இந்த சுபாவத்தினால் "முதலியார் முன் கோபக்காரர்" என்று நெருங்கிப் பழகாதவர்கள் எண்ணுவார்கள். ஆனால் நெருங்கிப் பழகியவர்களுக்கு அவருடைய உள்ளத்தின் விசாலமும் பெருந்தன்மையும் நன்கு தெரியும்.

ஸ்ரீ முத்துரங்க முதலியார் அழுத்தமான ஆஸ்திகர்; பரம பக்த வைஷ்ணவர்; தமிழ் நாட்டின் மிக அழகிய ரம்மியமான திருநீர்மலைப் பெருமாள் கோயிலின் தர்மகர்த்தா.

ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியார் அவர்களின் ஆதரவைக் கொண்டு தாம்பரத்தில் "வள்ளுவர் குருகுலம்" என்னும் ஆதாரக் கல்வி நிலையம் நடைபெற்று வருகிறது. அந்த அரிய ஸ்தாபனத்தைப் பற்றிய கட்டுரை இந்தக் "கல்கி" இதழில் வெளியாகியிருக்கிறது.

போட்டோ: நாகராஜ ராவ்.

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 42

என்ன சேதி?

அழிக்க முடியாது

இந்தியாவிலே ஐக்கிய மாகாணம் தான் சோஷலிஸ்டுகளின் கோட்டையாக இருந்து வந்தது. ஆனால் அந்த மாகாணத்திலேயே அவர்கள் கோட்டை விட்டு விட்டார்கள்! மேற்படி மாகாண ஜில்லா போர்டுகளுக்கு நடந்த தேர்தலில் காங்கிரஸ் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. மொத்தம் உள்ள சுமார் 2150 ஸ்தானங்களில் காங்கிரஸ் 2000 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது. தேர்தலுக்கு நின்ற 800 சோஷலிஸ்டுகளில் 100 பேர்கள் தான் வெற்றி பெற்றனர். அங்கு காங்கிரஸ் பெற்றுள்ள வெற்றிக்குக் காரணம் சோஷலிஸ்டுகளின் பலவீனமான நிலைமையல்ல. அவர்கள் அங்கு மிகுந்த பலத்துடன் தான் இருந்து வருகிறார்கள். ஆனால் ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் அவர்களைக் காட்டிலும் அதிக செல்வாக்குடன் இருக்கிறது. உழைப்பிலோ பிரசாரத்திலோ மேற்படி மாகாண காங்கிரஸ் வாதிகள் சிறிதும் சளிப்பதில்லை. பொய்ப் பிரசாரங்களைத் தகர்த்தெறிந்து ஜனங்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவதில் ஜரூராக இருக்கின்றனர். எனவே, அந்த மாகாணத்தில் வேறெந்தக் கட்சியின் பிரசாரமும் எடுபடவில்லை அதுபோலவே மற்ற மாகாண காங்கிரஸ் வாதிகளும் தூங்காது கர்மமே கண்ணாக இருப்பார்களாயின், பாரத நாட்டை உய்வித்த புனித ஸ்தாபனமான காங்கிரஸ் மீது ஜனங்களுக்குள்ள அபிமானத்தை யாராலும் அழிக்க முடியாது.

தனக்கு ஒன்று......

அரசாங்கம் ஜனங்களுடையதாக இருக்க வேண்டும்; ஜனங்களை ஆட்டி வைப்பது அரசாங்கமாக இருக்கக் கூடாது என்கிறார் சர்ச்சில். இதே சர்ச்சில் தான், முன்பு இந்தியாவிலுள்ள நாற்பதுகோடி ஜனங்களையும் ஆட்டி வைத்த பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தலைவராக இருந்து வந்தார். இந்தியாவுக்குச் சுதந்திரம் அளித்தால் குடி முழுகிப் போய்விடுமென்று கடைசி வரையில் கூக்குரலிட்டு வந்த கன்சர்வேடிவ் கட்சித் தலைவர்களில் ஒருவரான பட்லர், இப்போது ஹைதராபாத்துக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று பலமாகச் சிபார்சு செய்கிறார்! ஹைதராபாத் ஜனங்களை ஆட்டி வைக்கவே ஹைதராபாத் சர்க்கார் சுதந்திரம் கேட்கின்றனர். எனினும் ஐரோப்பாவின் இன்னல்கள் தீர கலப்பற்ற ஜனநாயகம் தான் உற்ற மருந்தென்று கூறும் இந்தச் சுயநலவாதிகள், இந்தியாவின் ஜனநாயக உரிமையை ஆட்சேபிக்கவோ, இந்திய ஜனநாயக ஆட்சியின் விரோதிகளைத் தூண்டி விடவோ தயங்குவதில்லை.

மிரட்டல் பலிக்கவில்லை!

சமீபத்தில் காயிதே ஆஜம் ஜின்னா "ஒரே கட்சி ஜனநாயக"த்தைப் பற்றிக் குறிப்பிட்டாரல்லவா? அந்தக் கூற்றுக்கு வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தின் ஒப்பற்றத் தலைவரான கான் அப்துல் கபார்கான் சரியான பதில் அளித்திருக்கிறார். தனி மனிதனின் சுதந்திர உரிமையை மறுக்கும் முஸ்லிம் லீகுடன் தம்முடைய கட்சி சேர முடியாது என்று கூறியிருக்கிறார். அரசியல் அபிப்பிராய பேதமுடையவர்கள் யாவரும் தங்களுக்கு விரோதிகள் என்று கருதும் முஸ்லிம் லீகர்களின் கொள்கையை எல்லைப்புற மாகாணத் தலைவர் கண்டித்திருப்பதுடன், தம்முடைய செஞ்சட்டை இயக்கத்தைப் பாகிஸ்தான் பூராவும் பரப்பப் போவதாகவும் அறிவித்திருக்கிறார். மற்றும் பாகிஸ்தான் தலைநகரிலே அப்துல் கபார் கான் தலைமையில் பாகிஸ்தான் பொதுஜனக் கட்சியின் முதலாவது மகாநாடும் வெற்றிகரமாக நடந்திருக்கின்றது. பாகிஸ்தானிலுள்ள "விரோதிகளுக்கு" ஜனாப் ஜின்னா விடுத்த மிரட்டல் ஒன்றும் பலிக்கவில்லை என்பதற்கு இவற்றைக் காட்டிலும் வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

கைக்கும் எட்டவில்லை! வாய்க்கும் எட்டவில்லை!



ஜவுளிக் கொள்ளை

இங்கிலீஷ்காரர்கள் எழுதி வைத்த இந்தியா தேசத்தின் சரித்திரத்தில் 'தக்'குகள், 'பிண்டாரிகள்' முதலிய கொள்ளைக் கூட்டத்தாரைப் பற்றிப் படித்திருக்கிறோம்.

நம்முடைய பழங் கதைகளில் அரைத் திருடன், முக்கால் திருடன், பக்காத் திருடன் முதலியவர்களைப் பற்றிப் படித்திருக்கிறோம்.

சிக்காகோ நகரின் பாதாள உலகத் திருடர்களைப் பற்றியும் துப்பாக்கி முனைக் கொள்ளைக்காரர்களைப் பற்றியும் தற்காலப் பத்திரிகைச் செய்திகளிலே படித்திருக்கிறோம்.

அவர்களை யெல்லாம் தோற்கடிக்கக்கூடிய கொள்ளைக்காரர்கள் — திருடர்கள் யார் என்று கேட்டால், இந்தியாவில் நூல் ஜவுளி உற்பத்தி செய்யும் ஆலை முதலாளிகள் என்று சொல்லத் தோன்றுகிறது.

சில காலத்துக்கு முன் இந்திய சுதந்திர சர்க்கார் ஜவுளிக் கட்டுப்பாடுகளை ரத்து செய்தபோது ஆலை முதலாளிகளுக்கு எச்சரிக்கை செய்தார்கள். "நியாயமான விலைக்குத் துணியை விற்பனை செய்யுங்கள்; அதிக லாபம் அடிக்கப் பார்க்காதீர்கள்; அப்படி நேர்மையாக நடந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையின் பேரிலேதான் ஜவுளி விற்பனைக் கட்டுப்பாடுகளை எடுக்கிறோம்!" என்று ஸ்பஷ்டமாகச் சொன்னார்கள்.

என்ன ஸ்பஷ்டமாகச் சொல்லி என்ன பயன்? எல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதியதாக முடிந்தது. கொஞ்ச காலம் வரையில் ஏதோ யோக்யமாக நடப்பது போல நடந்தார்கள். அப்புறம் தங்கள் உண்மை ஸ்வரூபத்தைக் காட்டத் தொடங்கினார்கள். ஜவுளி விலை வரம்பின்றி உயர்ந்து கொண்டே வந்தது. இப்போது எந்த நாளிலும் இல்லாத அதிக விலைக்கு ஜவுளி விற்கிறது.

"இது என்ன அநியாயம்?" என்று ஆலை முதலாளிகளைக் கேட்டால், நம்முடன் சேர்ந்து அவர்களும் "ஐயையோ! அநியாயம்! மொத்த ஜவுளி வியாபாரிகள் செய்யும் அநியாயம்!" என்று கூச்சலிடுகிறார்கள். மொத்த ஜவுளி வியாபாரிகளைக் கேட்டால், "இல்லவே இல்லை! எங்கள் பேரில் தப்பே இல்லை! நாங்கள் அரிச்சந்திரனுடைய அடுத்த வீட்டுக்காரனுடைய சந்ததியில் வந்தவர்கள்! அநியாயம் செய்கிறவர்கள் சில்லரை ஜவுளி வியாபாரிகள்!" என்கிறார்கள்.

இதெல்லாம் நம்பக் கூடிய சால்ஜாப்புகளாக இல்லை. ஜவுளிக் கொள்ளைக்கு முதன்மையான பொறுப்பு ஆலை முதலாளிகளின் தலையிலேயே விழுகிறது. ஜவுளி வியாபாரிகள் அந்தக் கொள்ளையில் கூட்டுச் சேர்ந்து லாபத்தில் பங்கு பெறுகிறார்கள்.

அடடா! இந்தியா சுதந்திரம் பெற்ற முதல் வருஷத்தில் இவர்கள் இப்படியா நடந்துகொள்ள வேண்டும்? நமது தேசத் தலைவர்களை இவ்விதமாகவா ஏமாற்ற வேண்டும்!

* * *

இரண்டு வாரத்துக்கு முன் நாம் எழுதிய தலையங்கத்தில் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்வதினால் நாட்டுக்கு ஏற்படும் தீமையை எடுத்துக் காட்டும்போது, "முதலாளிகளிடம் கொஞ்சம் அதிகப் பணம் சேர்ந்தால்தான் என்ன? அதை அவர்களிடமிருந்து கைப்பற்ற நூற்றெட்டு வழிகள் இருக்கின்றன! ஜவாஹர்லாலின் சர்க்கார் அந்த வழிகளைக் கட்டாயம் கையாளுவார்கள்" என்று குறிப்பிட்டிருந்தோம்.

ஜவாஹர் சர்க்காரிடம் நாம் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. "ஆலை முதலாளிகள் அடித்திருக்கும் அதிகப்படி லாபத்தைக் கைப்பற்றுவதற்கு இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறார்கள்" என்று ஒரு புது டில்லிச் செய்தி சென்ற வாரத்தில் அறிவித்ததல்லவா? ஆகவே, இந்திய சர்க்கார் தூங்கவில்லை! விழிப்புடனேதான் இருக்கிறார்கள். ரொம்ப சந்தோஷம்!

ஆனால் அதிகப்படி லாபத்தைக் கைப்பற்றினால் மட்டும் போதுமா? துணி

மணி திடீரென்று கிராக்கி யானதால் ஜனங்கள் அடைந்த கஷ்டம் எல்லாம் என்ன ஆவது? அதிகப்படி லாபம் முழுவதையும் சர்க்கார் கண்டு பிடித்து விட முடியுமா? ஒளித்து வைக்கும் வழிகளை முன்னதாகவே ஆலை முதலாளிகள் கண்டு பிடித்திருக்க மாட்டார்களா? மேலும் எத்தனை நாளைக்கு இம்மாதிரி ஆலை முதலாளிகளின் அநியாயத்தைச் சகித்துக்கொண்டிருப்பது? தேச மக்களின் பொருளாதாரத்தைச் சின்னாபின்னப் படுத்தும் இத்தகைய கொள்ளைக் காரர்களின் அட்டூழியங்களை விட்டுக் கொண்டே இருப்பதா?

கூடவே கூடாது!

பின், ஆலை முதலாளிகளின் அநியாயங்களையும் அட்டூழியங்களையும் அடக்குவதற்கு என்ன வழி?

கட்டுப்பாடு விதிகளை மறுபடி அமுலுக்குக் கொண்டுவருவது மிகவும் சிரமமான காரியம். மேலும் அதில் வேறு வகை ஊழல்கள் பெருகி வளருவதற்கு இடமிருக்கிறது.

பிறகு என்ன செய்வது?

துணி ஆலைகளையும் நூல் ஆலைகளையும் சர்க்கார் எடுத்துக் கொள்வதுதான் சரியான வழி; எடுத்துக்கொண்டு தேச மக்களின் பொது உடைமையாக்குவதுதான் நல்ல வழி.

• • •

சென்னை மாகாணத்தில் ஸ்ரீ பிரகாசம் காருவின் ஆட்சி ஏற்பட்ட காலத்திலேயே இதைப் பற்றி நாம் எழுதியிருக்கிறோம். சர்க்கார் எடுத்து நடத்த வேண்டிய தொழில்கள் மூன்றைக் குறிப்பிட்டிருக்கிறோம். அவை வருமாறு:— (1) நூல் ஜவுளி ஆலைத் தொழில்; (2) மோட்டார் பஸ் போக்கு வரவு; (3) இன்ஷியூரன்ஸ்.

இந்த மூன்று பெருந் தொழில்களையும் சர்க்கார் எடுத்துக் கொண்டு நடத்துவது அவசியம். அதனால் சமூகத்துக்கு நன்மை உண்டு; சுதந்திர சர்க்காருக்கும் பண வருவாய் உண்டு.

மோட்டார் பஸ் போக்குவரவைச் சென்னை சர்க்கார் தேசியத் தொழிலாக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சர்க்கார் பஸ்கள் சென்னை நகரில் ஓடுகின்றன. நிர்வாகத்தில் பல குறைபாடுகள் இருக்கத்தான் இருக்கின்றன. பல குறைபாடுகள் இருந்தும் மோட்டார் பஸ் தொழிலைச் சர்க்கார் நடத்துகிற வரையில் சர்க்காருக்கு லாபகரமாக இருக்கிறது. ஜனங்களுக்கும் சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது.

சென்னை மாகாணம் முழுவதிலும் சர்க்கார் பஸ்கள் ஓடும்போது சென்னை சர்க்காருக்கு அதன் மூலம் பல கோடி ரூபாய் வருமானம் வரக் கூடும். அந்த வருமானத்தை நாட்டின் முன்னேற்றத் துறைகளில் உபயோகிக்கலாம். ஏன்? அந்த வருமானத்தைக் கொண்டு வருஷத்தில் பத்து என்ஜினியரிங் காலேஜுகள் புதிதாக ஆரம்பிக்கலாமே!

மூன்றாவது சொன்ன இன்ஷியூரன்ஸ் தொழில் இருக்கிறதே, மற்ற எந்தத் தொழிலைக் காட்டிலும் இதைச் சர்க்கார் எடுத்துக் கொள்வதற்குக் காரணங்கள் இருக்கின்றன. இன்ஷியூரன்ஸ் மூலம் கோடி கோடியான பணம் பொது ஜனங்களிடமிருந்து வசூலிக்கப் படுகிறது. அந்தப் பணத்தில் ஒரு சிறு பகுதியைச் சர்க்கார் சட்டத்தின்படி சர்க்கார் கடன் பத்திரங்களில் போடுகிறார்கள். மற்றத் தொகையை யெல்லாம் இன்ஷியூரன்ஸ் முதலாளிகள் இஷ்டப்படி பற்பல துறைகளில் போடுகிறார்கள். பல இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளை யொட்டிப் பாங்கிகளே ஏற்படுகின்றன! பணத்தை நேரடியாகச் சூறையாடுவதைக் காட்டிலும் பாங்கி மூலம் கணக்குக் காட்டிச் சூறையாடலாம் என்று உத்தேசம். மற்ற எந்த வியாபாரமாயிருந்தாலும் நிர்வாகம் சீர்கேடாக இருந்தால் உடனே அதன் பலனை அநுபவிக்க நேரிடும். 'இன்ஸால்வென்ட்' கொடுத்துக் கடையைக் கட்டும்படி ஏற்படும். ஆனால் இன்ஷியூரன்ஸ் விஷயத்தில் இந்தத் தொல்லை கிடையாது. இன்ஷியூரன்ஸுக்கு இன்றைக்கு ரூபாய் கட்ட ஆரம்பிக்கிறவர்கள் இருபது அல்லது இருபத்தைந்து வருஷம் பணம் கட்டுவார்கள். அதற்குப் பிறகுதான் கட்டிய பணத்தை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதுவரையில் பணத்தை என்ன வேணுமானாலும் செய்யலாம். அப்படி இருபது வருஷம் கழித்துப் பணம் கொடுக்க நேரும்போது அந்த வருஷத்தில் புதிதாகச் சேரும் பிரீமியத் தொகைகள் இருக்கின்றன அல்லவா? அவற்றைக் கொண்டு கொடுத்து விடலாம். மற்றப்படி இடை நடுவில் இன்ஷியூர் செய்தவர்களில் நூற்றுக்கு ஒருவர் வீதம் செத்துப் போகக் கூடும். அவர்களுடைய குடும்பத்தாருக்குப் பணம் கொடுக்க வேண்டியதுதானே! இதில் கஷ்டம் ஒன்றும் கிடையாது.

ஆகக்கூடி இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் வருஷந்தோறும் கோடிக் கணக்கான ரூபாய்கள் சேருகின்றன. அதை இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் எப்படி உபயோகித்தாலும் கேள்வி முறையில்லை. சர்க்காரே இன்ஷியூரன்ஸ் கம்பெனி நடத்தினால் இவ்வளவு மூலதனத்தையும் தேச முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான புதிய தொழில்களை ஆரம்பிக்க உபயோகிக்கலாமல்லவா?

இரும்பைக் காய்ச்சி உருக்கவும் இயந்திரங்கள் வருக்கவும் ஆயுதங்கள் செய்யவும் காகிதங்கள் செய்யவும் இன்னும் ஆயிரம் வகைத் தொழில்கள் நடத்தவும் மேற்படி மூலதனத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒவ்வொரு மோட்டார் வண்டியையும் இன்ஷியூரன்ஸ் செய்ய வேண்டுமென்று சர்க்கார் சட்டம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு மோட்டாருக்கும் வருஷத்துக்குக் குறைந்த பட்சம் சராசரி ரூபாய் 100 பிரீமியம் கொடுக்கப்படுகிறது. கார்களைச் சர்க்கார் இன்ஷியூரன்ஸ் இலாகாவிலேயே இன்ஷியூர் செய்யவேண்டும் என்று சட்டம்செய்தால் எவ்வளவுவருமானம் சர்க்காருக்குக் கிடைக்கும் பாருங்கள்!

ஆலைத் தொழில், மோட்டார் போக்குவரவு, இன்ஷியூரன்ஸுக்கு அடுத்தபடி மற்றும் பல தொழில்களைச் சர்க்கார் தேசியத் தொழில்கள் ஆக்கலாம். சர்க்காருக்கும் சமூகத்துக்கும் அதனால் நன்மை உண்டு.

* * *

இதெல்லாம் ஜவாஹர்லாலைத் தலைவராகக் கொண்ட இந்திய சர்க்காருக்குத் தெரியாத விஷயங்களா? எல்லாம் தெரிந்தவைதான்! ஆயினும் காரியத்தில் கொண்டு வருவதில் ஏன் அவர்கள் தயங்குகிறார்கள்?

எத்தனையோ கஷ்டமான பொறுப்புக்களை ஏற்கெனவே இந்திய சர்க்கார் வகிப்பதால் புதிய பொறுப்புக்களை ஏற்றுத் திறமையாக நடத்த முடியுமா என்பது பற்றித் தயங்குகிறார்கள்.

தவிர, இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கிறது.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் பொது ஜனங்களும் தொழிலாளிகளும் சுதந்திர இந்தியாவில் தங்களுடைய கடமையையும் பொறுப்பையும் நன்கு உணர்ந்து காரியம் செய்யவில்லை.

இந்திய சர்க்காரின் உத்தியோகஸ்தர்கள் கல்கத்தாவில் வேலை நிறுத்தம் செய்ததை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதைப்பற்றி வங்க மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நம் அருமைத் தலைவர் ராஜாஜி சொன்னது நினைவிருக்கிறதா?

"ஜவாஹர்லால் சொல்லைக் கேட்டுக் காஷ்மீரில் நமது இந்திய வீரர்கள் உயிரைக் கொடுத்து வருகிறார்கள்! நீங்கள் இங்கே வேலை நிறுத்தம் செய்கிறீர்களே!" என்றார். இந்த இரண்டு வாக்கியங்களில் கல்கத்தாவில் நடந்த இந்திய சர்க்கார் உத்தியோகஸ்தர் வேலை நிறுத்தம் அடிபட்டுப் போயிற்று. உத்தியோகஸ்தர்கள் வேலைக்குத் திரும்பினார்கள்.

ஆனால் ஒரு வாரம் வரையில் வேலையெல்லாம் நின்றது நின்றதுதானே? தேசத்தில் எத்தனை காரியங்கள் அதனால் குந்தகமாகியிருக்கும்? எவ்வளவு அவசர வேலைகள் தடைப்பட்டிருக்கும்? எத்தனை ஜனங்களுடைய காலம் வீண் விரயமாகியிருக்கும்?

இப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களைக் கொண்டுதானே சர்க்கார் எடுத்துக்கொள்ளும் ஆலைத் தொழில் முதலியவற்றை நடத்த வேண்டும்? இவர்களை நம்பி எப்படி நடத்துவது? 'முதலாளிகள் நடத்தியதே தேவலை' என்று ஆகிவிட்டால் என்ன செய்வது? — இவ்வித எண்ணத்தினால் இந்திய சர்க்கார் பெருந் தொழில்களை எடுத்துக் கொள்ளத் தயங்குகிறார்கள்.

அடுத்த படியாகத் தொழிலாளர்களும் தொழிலாளர் தலைவர்களும் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வது தொழில்களைப் பொது உடைமையாக்குவதற்கு ஒரு பெரும் முட்டுக்கட்டையாயிருக்கிறது.

சென்ற வாரத்தில் ஒரு நாள் நடந்த ரயில்வே ஸ்ட்ரைக்கைப் பாருங்கள்! ஏதாவது அதனால் பிரயோஜனம் உண்டா? அதற்குக் காரணம்தான் யாருக்காவது தெரியுமா?

என்ஜின் டிரைவர்கள்—பயர்மேன்கள் கட்சியில் ஓரளவு நியாயமிருக்கிறது. 13 மணி நேரம் சேர்ந்தாற்போல் என்ஜினில் வேலை செய்வது கஷ்டமான காரியந்தான். அதை அவசியம் மாற்ற வேண்டும்! ஆனால் அவர்கள் கட்சி நியாயமானபோதிலும் கையாண்ட முறை சரியல்ல. "நமது சொந்த சர்க்கார் நடக்கிறது; சுதந்திர சர்க்கார் நடக்கிறது" என்ற எண்ணமிருந்தால் அவ்விதம் செய்திருக்க மாட்டார்கள். வேறு கிளர்ச்சி முறைகளைக் கடைப்பிடித்திருப்பார்கள்.

ஆனால் மற்ற ரயில்வே சிப்பந்திகள் ஒரு நாள் ஸ்ட்ரைக் செய்ததற்கு எவ்விதக் காரணமும் கிடையாது. லவலேசமும் கிடையாது. அதனால் எத்தனை பேருக்கு எத்தனை அசௌகரியம்? எத்தனை காரியம் குந்தகம்? எத்தனை பேருக்குப் பணம் நஷ்டம்?

நல்ல வேளையாகப் பெரும்பாலான ரயில்வே சிப்பந்திகள் இந்தத் திடீர் வேலை நிறுத்தத்தில் சேரவில்லை யென்பது மகிழ்ச்சி தரும் விஷயம்.


*   *   *

உத்தியோகஸ்தர்களையும் தொழிலாளர்களையும் பற்றிச் சொன்னோம். பொது மக்களின் விஷயம் என்ன? ''சுதந்திர இந்தியாவில் நாம் வாழ்கிறோம்; நம்முடைய சொந்த அரசாட்சி நடைபெறுகிறது'' என்பதை உணர்ந்து நடக்கிறோமா? நம்முடைய சொந்த நன்மையை விடத் தேசத்தின் பொதுநலம் முக்கியமானது என்பதை அறிந்து நடக்கிறோமா? மந்திரிகளும் மற்ற சர்க்கார் ஊழியர்களும் நம்முடைய வேலையையே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்திருக்கிறோமா? லஞ்சம் கொடுத்துக் காரியத்தை நடத்திக் கொள்ளும் வழக்கத்தை அடியோடு கைவிட்டு விட்டோமா?

இவ்விதம் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்கள், பொது ஜனங்கள் எல்லாரும் சுயராஜ்ய இந்தியாவில் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். தொழிலாளரும் உத்தியோகஸ்தரும் வேலை நிறுத்தம் என்ற பேச்சையே மறந்து ''நம் சொந்த சர்க்காருக்கு வேலை செய்கிறோம்'' என்று பெருமையோடு செய்யவேண்டும். வரி கொடுக்கும் பொது ஜனங்கள் ''நம்முடைய சர்க்காருக்குக் கொடுக்கிறோம்'' என்று மகிழ்ச்சியுடன் கொடுக்க வேண்டும்.

அப்போது ஜவாஹர்லாலின் இந்திய சர்க்காரும் சரி, மாகாண மந்திரிகளும் சரி, மேலும் மேலும் பல முக்கிய கைத்தொழில்களை எடுத்து நடத்த முன் வருவார்கள். தேசம் சுபிட்சம் அடையும். தேசத்தைச் சேர்ந்தவர்களான சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்கள், பொது ஜனங்கள் எல்லோருமே நன்மை யடைவார்கள்.

பீதி!



நைஜாம் சர்க்கார் பத்திரிகைகளின் மீது பல பாணங்கள் தொடுத்திருப்பதுடன், கார்ட்டூன் போடுவதற்கு முன் அநுமதி வேண்டுமென்று கடைசி உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

வள்ளுவர் குருகுலம்

ரா.கி.


அந்தச் சிறு பிள்ளையினுடைய பெயர் என்னவோ எனக்குத் தெரியாது. அவனுடைய 'சாதி' இன்னதென்று தெரியாது. அவனுடைய பெற்றோர் யார் என்று தெரியாது. குலம் கோத்திரம் ஒன்றும் தெரியாது. ஆனால் அந்தச் சிறுவனுடைய முகம் மட்டும் என் மனக்கண் முன்னால் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது. அடாடா! அது எத்தகைய முகம்! ஆயிரம் ஜன்மத்தில் ஒருவன் அநுபவிக்கக்கூடிய துன்பங்களையெல்லாம் பிரதிபலித்த அந்த முகம்! பிரஹ்லாதனையும் துருவனையும் சிறுத்தொண்டரின் மகன் சீராளனையும் நினைவூட்டிய அந்தப் பாலனுடைய முகம்!—அதை எப்படி மறக்க முடியும்?

'பெற்றோர் யார் என்று தெரியாது' என்று சொன்னேன் அல்லவா? எனக்கு மட்டும் தெரியாது என்பதல்ல; யாருக்குமே தெரியாது; அந்தச் சிறுவனுக்கும் அது தெரியாது. பர்மாவின் மீது ஜப்பான் படையெடுத்த காலத்தில் அங்கிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டார்களே ஆயிரக்கணக்கான இந்திய மக்கள்,—அவர்களிலே இந்தச் சிறுவனும் ஒருவன். புறப்படும் போது அவனுடைய அப்பாவும் அம்மாவும் அவனோடு புறப்பட்டிருக்கலாம். இன்னும் பல உறவினரும் கிளம்பியிருக்கலாம். வழியிலே அவர்கள் எல்லாரையும் அவன் இழந்து விட்டான்! எப்படியோ இந்தச் சின்னஞ் சிறு சிசு மட்டும் அத்தனை கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு உயிரோடு இந்தியாவின் எல்லையை அடைந்தது. இவனைப்போன்ற எத்தனையோ அநாதைப் பிள்ளைகளைப்போல் இவனையும் பிரிட்டிஷ் சர்க்கார் ரயில் ஏற்றி அனுப்பினார்கள். தமிழ்நாட்டுச் சிறுவன் என்று கண்டுபிடித்துச் சென்னைக்கு அனுப்பினார்கள். வேறு ஒரு தகவலும் அவனைப்பற்றித் தெரியவில்லை. சென்னைக்கு வந்தபோது அவனுக்கு வயது நாலு இருக்கும். வந்த புதிதில் அவன் அழுதுகொண்டேயிருந்தானாம்! என்ன கேட்டாலும் எவ்வளவு அன்புடன் கேட்டாலும் அவனுடைய பதில் அழுகைதான்! 'உன் அப்பா யார்?' என்று கேட்டால் அழுவானாம். 'அம்மா யார்?' என்று கேட்டால் அழுவானாம். 'உன் பெயர் என்ன?' என்றால் அழுவானாம். 'எந்த ஊரில் இருந்தாய்?' என்றால் அழுவானாம். 'சாப்பிடுகிறாயா, தம்பி!' என்றால் அழுவானாம். சாப்பிடும்போதே அழுவானாம்! குளிப்பாட்டும்போதும் அழுவானாம்! தூங்கும்போதும் அவனுடைய கண்ணில் கண்ணீர் வந்து கொண்டேயிருக்குமாம்! தூக்கத்தில் திடீர் திடீர் என்று எழுந்து உட்கார்ந்து 'ஓ' என்று அலறுவானாம்!

ஐயோ! அந்தச் சின்னஞ் சிறு குழந்தை பர்மா தேசத்தின் மலைகளிலும் காடுகளிலும் வழி நடந்து வந்தபோது என்னென்ன பயங்கரமான காட்சிகளைப் பார்த்ததோ, என்னென்ன துன்பங்களை அநுபவித்ததோ, யாருக்குத் தெரியும்?

அந்த பர்மா அநாதைச் சிறுவனைத் தாம்பரத்தில் உள்ள 'வள்ளுவர் குருகுலம்' என்னும் ஸ்தாபனத்தில் பார்த்தேன். சிறுவனுக்கு இப்போது சுமார் பத்து வயது இருக்கும். தற்போது அவன் அழுதுகொண்டிருக்கவில்லை. அநுபவித்த கஷ்டம் ஒன்றும் அவனுக்கு நினைவில்லை. கடவுள் தம் கருணையின் மகிமையினால் மனிதர்களுக்கு ஞாபகமறதி என்னும் வரப்பிரசாதத்தை அருளியிருக்கிறார். சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் அதிகமாகவே மறதியைக் கொடுத்திருக்கிறார். அந்த வரப்பிரசாதம் எவ்வளவு மகிமை பொருந்தியது என்பதை மேற்படி பர்மாச் சிறுவனைப் பார்த்த பிறகுதான் நான் நன்கு தெரிந்துகொண்டேன். அவனுக்கு பர்மாவிலிருந்து புறப்பட்டது, தாய் தந்தையரை இழந்தது,—இவை ஒன்றும் ஞாபகம் இல்லை. வள்ளுவர் குருகுலத்துக்கு வந்து சேர்ந்ததும் நினைவில்லை; வந்த புதிதில் ஓயாமல் அழுது கொண்டிருந்ததும் அவனுக்கு நினைவில்லை.

• ஆனால் பார்க்கிறவர்களுக்கு அவனுடைய முகமும் கண்களும் அந்தக் கதைகளையெல்லாம் சொல்லுகின்றன. சொல்ல முடியாத பயங்கரங்களைப் பார்த்து, விவரிக்க முடியாத பல துன்பங்களை அநுபவித்து, அருவியைப் போல் கண்ணீர் பெருக்கிய அடையாளங்கள்




வள்ளுவர் குரு குலத்தைப் பார்க்க வரும் நண்பர்கள் வரவேற்கப் படுகிறார்கள். இடது கோடியில் நிற்கும் மாணவன் வலது கரத்தை மார்புக்கு நேராக மடித்துக்கொண்டு நிற்பதைக் கவனிக்கவும்.

★

வள்ளுவர் குரு குலத்தில் வகுப்புகள் முடிந்துவிட்டன. பிள்ளைகள் குஷியாக விளையாடக் கிளம்புகிறார்கள்.





வள்ளுவர் குரு குலத்தை நிர்வகிக்கும் ஸ்ரீ பாலசுந்தரம், பி.ஏ., எல்.டி.; ஸ்ரீ ராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்.

★

குரு குலத்தின் தாழ்வாரத்தில் வரிசையாக உட்கார்ந்து பிள்ளைகள் நூல் நூற்கும் காட்சி; காந்தி மகானுடைய சக்தி நாட்டில் இயங்குகிறது என்பதற்குச் சாட்சி!

அந்தப் பாலனுடைய பால்வடியும் முகத்திலும் கண்களிலும் காணப்படுகின்றன.

இவனைப் போன்ற பர்மா அனாதைப் பிள்ளைகள் சுமார் முப்பது பேர் தாம்பரம் 'வள்ளுவர் குருகுல'த்தில் அன்ன மிட்டு வளர்க்கப்படுகிறார்கள்; கல்வி கற்பிக்கப்படுகிறார்கள். சாதாரண ஏட்டுச் சுரைக்காய்க் கல்வி அல்ல; காந்தி மகான் காட்டிய வழியில் ஆதாரக் கல்வி முறைப்படி அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

* * *

தாம்பரம் ரயில்வே ஸ்டேஷனை உங்களில் அநேகம் பேர் பார்த்திருப்பீர்கள். அந்த ஸ்டேஷனுக்குக் கிழக்கே ஒரு பர்லாங்கு தூரத்தில் பிரசித்தி பெற்ற 'கிறிஸ்டியன் காலேஜ்' இருக்கிறது. பல லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடங்கள்; விசாலமான ஹால்கள்; குறுக்கும் நெடுக்கும் அழகழகான சாலைகள்; சாலைகளுக்கு இருபுறமும் வரிசை வரிசையான மரங்கள்; வழ வழ வென்ற தள வரிசை போட்ட விளையாடு மிடங்கள்;— இம்மாதிரி நாகரிக ஆடம்பரங்களுடன் கிறிஸ்தவக் கலாசாலை விளங்குகிறது. இந்த ஸ்தாபனத்துக்குச் சென்னை சர்க்கார் பல லட்ச ரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார்கள்; இன்னும் நன்கொடை தந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப்பெரும் பணச் செலவின் பலனாக வருஷந்தோறும் பி. ஏ. என்னும் இரண்டு எழுத்துப் பட்டத்துடன் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். இப்படி வெளியேற்றப்படுவோரில் மிகப் பெரும்பாலோர் மாதம் அறுபது ரூபாய் சம்பளத்தில் ஆரம்பித்து, மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளம் வரையில் கஷ்டப்பட்டு முன்னேறி, ஐம்பத்தைந்தாவது வயதில் 'ரிடயர்' ஆவார்கள்!

அதே தாம்பரம் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்குப் பக்கம் போகும் சாலையோரமாக 'வள்ளுவர் குரு குல'த்தின் சின்னஞ் சிறு கட்டிடம் இருக்கிறது. 'கட்டிடம்' என்று மரியாதைக்குத்தான் அதைச் சொல்லவேண்டும். கள்ளிக் கோடு ஓடு போட்ட கொட்டகை. அதற்கெதிரே பத்தடி தூரத்துக் கப்பால் முள் வேலி. பிரதான கட்டிடத்தை யொட்டிக் கூரைக் குச்சுகள் இரண்டு. இந்தக் கூரைக் குச்சுகளில் பர்மா அகதிப் பிள்ளைகளுக்கும் இன்னும் சில ஹரிஜனக் குழந்தைகளுக்கும் சமையல் சாப்பாடு நடை பெறுகிறது. மொத்தம் சுமார் நூற்றைம்பது பிள்ளைகள் வள்ளுவர் குரு குலத்தில் கல்வி பயிலுகிறார்கள்.

தாம்பரம் ஸ்டேஷனுக்குக் கிழக்கே உள்ள மகத்தான கிறிஸ்டியன் காலேஜைக் காட்டிலும் மேற்கே உள்ள இந்தச் சின்னஞ் சிறு வள்ளுவர் குருகுலம் முக்கியமான ஸ்தாபனம் என்று நான் கருதுகிறேன்.

ஏனெனில், கிறிஸ்டியன் காலேஜில் இன்னமும் மெக்காலேயின் கல்வி முறைதான் நடைபெற்று வருகிறது.

வள்ளுவர் குருகுலத்திலோ காந்தி மகாத்மாவின் ஆதாரக் கல்வித் திட்டத்தின்படி கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

ஆகையால் கட்டிடம் மிக அற்பமானதாயிருந்த போதிலும், பிள்ளைகளின் தொகை சொற்பமாயிருந்தபோதிலும், செலவுக்குப் பணம் போதாமல் கஷ்டப்பட்ட போதிலும் வள்ளுவர் குருகுலம் செய்துவரும் தொண்டு மகத்தானது என்பதில் ஐயமில்லை.

இரணியகசிபு மகா பெரிய சக்கரவர்த்திதான்; அவனுடைய அதிகாரமும் பலமும் பிரமாதமானவைதான்; அவனுடைய கையிலிருந்த கதை பிரம்மாண்டமானதுதான். ஆயினும் சின்னஞ் சிறு பாலனாகிய பிரஹ்லாதனுடைய சத்தியாக்கிரஹம் அல்லவா கடைசியில் வெற்றி பெற்றது?

* * *

காந்தி மகாத்மா தம் வாழ்நாளில் பல இயக்கங்களை ஆரம்பித்தார்; பல அரிய நிர்மாண திட்டங்களை வகுத்தார். எல்லாம் பாரத மக்களின் உண்மையான க்ஷேமத்தை முன்னிட்டே செய்தார்.

காந்தி மகாத்மாவைக் கோடிக் கணக்கான ஜனங்கள் போற்றினார்கள்; லட்சக் கணக்கான ஜனங்கள் அவர் தலைமை வகித்த அரசியல் சுதந்திர இயக்கங்களில் ஈடுபட்டார்கள்: ஆயிரக்கணக்கானவர்கள் அவருடைய சொல்லைக் கேட்டு அரும் பெரும் தியாகங்களைச் செய்தார்கள்.

ஆனால் மகாத்மா காந்தியின் உண்மைச் சீடர்களாய் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் அவர் வகுத்துக் கொடுத்த திட்டங்களைப் பூரண நம்பிக்கையுடன் பின்பற்றியவர்கள் வெகு சிலரே யாவர்.

மகாத்மாவிடம் பூரண பக்தி கொண்டவர்களிலும் அநேகர் சில சமயம் சந்தேகப்பட்டதுண்டு; அவநம்பிக்கை அடைந்ததுண்டு.

ஏன்? சென்ற மகா யுத்தம் மிக நெருக்கடியான நிலைமையை அடைந்திருந்தபோது மகாத்மாவின் பக்தர்களில் தலை சிறந்த

ஜவாஹர்லால்ஜி, சர்தார் வல்லபாய் முதலிய காரியக் கமிட்டி அங்கத்தினர்களே மகாத்மாவின் அஹிம்சா தர்மம் இந்தச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமா என்று சந்தேகப்பட்டார்கள். காரியக் கமிட்டியாருக்கும் மகாத்மாவுக்கும் இது சம்பந்தமாக மாதக் கணக்கில் விவாதம் நடந்தது. கடைசியாக மகாத்மா காந்தி "என்னுடைய கொள்கை இதுதான்; ஆனால் உங்களை நான் வற்புறுத்தவில்லை; உங்கள் அபிப்பிராயப்படி செய்யுங்கள்!" என்பதாகச் சொல்லிச் சில காலம் காங்கிரஸ் அரசியலி லிருந்து விலகி நின்றார்! — இதையெல்லாம் பண்டித ஜவாஹர்லால் நேரு தாம் எழுதியுள்ள "Discovery of India" என்னும் புத்தகத்தில் விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

எனினும், பின்னால் நடந்த சம்பவங்களிலிருந்து 'காந்தி மகான் சொன்னதுதான் சரி; மற்றவர்கள் சந்தேகித்தது பிசகு' என்று ஏற்பட்டு விட்டது.

மகா யுத்தத்தில் அடால்ப் ஹிட்லர் மகத்தான வெற்றிகளை அடைந்துகொண்டிருந்த காலத்தில் மகாத்மா ஹிட்லருக்கு ஒரு கடிதம் எழுதினார். "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க நீர் பலாத்கார வழியை மேற்கொண்டிருக்கிறீர். நான் அஹிம்சை வழியை அனுசரிக்கிறேன். இரண்டு வழிகளில் எது சரியான வழி என்பதை வருங்காலம் தெரியப்படுத்தும்" என்று அதில் எழுதியிருந்தார்.

வருங் காலம் தெரியப்படுத்தி விட்டது! ஹிட்லர் இருந்த இடம் தெரியாமல் மண்ணோடு மண்ணாகி விட்டார்! அவருடைய ஜெர்மனி இன்று மூன்று வல்லரசுகளின் காலடியில் மிதிபட்டுக் கிடக்கிறது!

ஆனால் காந்திஜியின் அஹிம்சை வழியைப் பின்பற்றிய இந்தியாவோ ஆயிரம் வருஷத்து அடிமை வாழ்வை ஒழித்துப் பூரண சுதந்திரம் பெற்று விளங்குகிறது.

இந்த அற்புதத்தைப் பார்த்த பிறகு காந்திஜியின் வழிதான் சரியான வழி என்பது பற்றி யார் சந்தேகிக்க முடியும்?

* * *

இந்திய சமூகத்தின் முன்னேற்றத்துக்காக மகாத்மா காந்தி வகுத்த திட்டங்களில் ஆதாரக் கல்வித் திட்டம் ஒன்று.

உயிரையும் உள்ளத்தையும் அறிவையும் ஆன்மாவையும் சிறைப்படுத்தி யிருக்கும் மெக்காலே கல்வித் திட்டத்தில் ஊறி வளர்ந்தவர்கள் காந்தி மகாத்மாவின் ஆதாரக் கல்வித் திட்டத்தை அறிந்து கொள்ளுதல் அவ்வளவு எளிதன்று; அதை அறிந்து கொண்டாலும் நடத்தி வைத்தல் மிகவும் கடினமான காரியம்.

காந்தி மகானிடம் பரிபூரண நம்பிக்கை கொண்டு, அவர் பணித்த தொண்டுகளுக்கே உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்ய முன் வந்தவர்களாலேதான் ஆதாரக் கல்வித் திட்டத்தை அறிந்து நடத்திவைக்க முடியும்.

அத்தகைய மகாத்மாவின் அந்தியந்த சீடர்களில் ஒருவர் ஆதம்பாக்கம் ஸ்ரீ ராமகிருஷ்ணன். காந்தி மகானுடைய உபதேசங்களிலும் அவருடைய திட்டங்களிலும் யாருக்கு என்ன சந்தேகம் தோன்றினாலும் ஸ்ரீ ராமகிருஷ்ணனுக்குச் சந்தேகமே கிடையாது. வியாஸரிடத்திலும் வால்மீகியிடத்திலும் வள்ளுவரிடத்திலும் சந்தேகம் தோன்றினாலும் காந்திஜியின் வாக்கில் அவருக்குச் சந்தேகம் கிடையாது. அத்தகைய அருமைத்தொண்டர், ஸ்ரீ பாலசுந்தரம் என்னும் இன்னொரு உண்மைத் தொண்டருடன் சேர்ந்து "வள்ளுவர் குருகுல"த்தை நடத்தி வருகிறார். இருவருக்கும் ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியார் அவர்கள் தோன்றாத் துணையாகவும் தோன்றும் துணையாகவும் இருந்து எல்லா விதமான உதவிகளும் அளித்து வருகிறார்.

* * *

பர்மா அகதிக் குழந்தைகளை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட "வள்ளுவர் குருகுலம்" இப்போது அக்கம் பக்கத்திலுள்ள மற்றக் குழந்தைகளையும் ஏற்றுக் கல்வி கற்பித்து வருகிறது. மகாத்மா காட்டிய வழியில் கல்வி கற்பித்து வருகிறது. ஆதாரக் கல்வி முறையில் பயிற்சி பெற்ற இரண்டு ஆசிரியர்கள் முதல் இரு வகுப்புகளில் அக் கல்வி முறையைப் பூரணமாகக் கடைப்பிடித்து வருகிறார்கள். மற்ற வகுப்புக்களில் சாதாரணப் புத்தகக் கல்வி தற்சமயம் கற்பிக்கப் படுகிறது. ஆனால் எல்லா வகுப்புகளையும் ஆதாரக் கல்வி முறைக்குக் கொண்டு வரத் திட்டம் இருக்கிறது. கை ராட்டையில் நூற்றல் எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுவாகக் கற்பிக்கப்படுகிறது. குழந்தைகள் நூற்கும் நூலைக் குருகுல மாணாக்கர்கள் அங்கேயுள்ள தறிகளில் நெய்கிறார்கள். நெய்த துணியைக் குழந்தைகளும் ஆசிரியர்களும் அணிந்து கொள்கிறார்கள்.

* * *

அன்றொரு நாள் சில நண்பர்களும் நானும் வள்ளுவர் குருகுலத்தைப் பார்க்கப் போயிருந்தோம். பிள்ளைகளைப் பார்க்கச்

சந்தோஷமாயிருந்தது; பார்க்க வந்தவர்களைக் குழந்தைகள் அன்புடன் வரவேற்ற முறை மிக்க மகிழ்ச்சி தந்தது. பிள்ளைகள் வரிசையாக உட்கார்ந்து நூல் நூற்ற காட்சி ஆனந்தமாயிருந்தது. நாங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பிள்ளைகள் சொன்ன பதில்கள் மகிழ்ச்சி அளித்தன. அவர்கள் விளையாட்டுகள் களிப்பு அளித்தன. ஆசிரியர்களையும் நிர்வாகிகளையும் பார்க்கச் சந்தோஷமாயிருந்தது. அவர்கள் செய்து வரும் 'நிஷ்காமிய கர்ம'த்தைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிடத் தோன்றியது. மாலை நேரத்தில் ஆசிரியர்களும் பிள்ளைகளும் இந்திய தேசியக் கொடியைச் சுற்றித் திறந்த வெளியில் வட்டமாக உட்கார்ந்து பிரார்த்தனையும் பஜனையும் செய்த காட்சி மனதுக்கு நிம்மதி தந்தது.

ஆனால் குழந்தைகள் படிக்கும் இடத்தையும், பாடும் இடத்தையும், விளையாடும் இடத்தையும், சாப்பிடும் இடத்தையும், படுத்துத் தூங்கும் இடத்தையும், அக்கம் பக்கத்தையும் பார்க்கச் சந்தோஷமாக இல்லை. இவையெல்லாம் ரொம்ப சுமாராகத்தானிருந்தன. சுருங்கச் சொன்னால் வள்ளுவர் குருகுலம் பார்ப்பதற்கு ஒரு அகதி ஸ்தாபனமாகவே தோன்றியது.

ஏன் இப்படி இருக்க வேண்டும்? சென்னைக் கல்வி இலாகா வருஷத்துக்கு எட்டுக் கோடி ரூபாயை விழுங்கிக்கொண்டு வருகிறதே? இதைப் போன்ற அருமையான ஸ்தாபனத்துக்குக் கொடுப்பதற்குப் பணம் இல்லாமலா போய்விட்டது?

சென்னை நகருக்கு இவ்வளவு சமீபமான இடத்தில் காந்தி அடிகளுக்கு உகந்த ஆதாரக் கல்வித் திட்டத்தை நடத்தி வருகிறார்களே; — இத்தகைய அருமையான ஸ்தாபனத்துக்குப் பொருளுதவி செய்யக்கூடிய புண்ணியவான்கள் சென்னையில் யாரும் இல்லாமலா போனார்கள்?

மேற்கண்ட இரண்டு கேள்விகளுக்கும் சீக்கிரத்தில் ஏதாவது திருப்திகரமான பதில் கிடைக்கிறதா என்று பார்க்கலாம்.

வட்ட மேஜை

கோயமுத்தூர்
2—5—48

★ 'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

சமீபத்தில் சென்னைச் சட்டசபையில் நிறைவேறிய வாடகைக் கட்டுப்பாடு சட்ட மசோதாவினால் பொது ஜனங்களுக்கு அவ்வளவு அனுகூலம் இருப்பதாகத் தெரியவில்லை. அநேகமாக நகரங்களில் ஒரு வீட்டில் மூன்று அல்லது நான்கு குடித்தனங்கள் இருக்கின்றன. தற்சமயம் ஒவ்வொரு குடித்தனக்காரரும் குறைந்த வாடகை 15 ரூபாய் கொடுக்கிறார்கள். இருப்பதற்குள் அவர்கள் சௌகரியம் செய்துகொண்டு இருக்கிறார்கள். நம் சர்க்காரில் லஞ்ச ஊழல்கள் நிறைந்த இலாகா ஒன்று உண்டு என்றால், அது "வாடகைக் கட்டுப்பாடு" இலாகாதான். ஒழுங்கான முறையில் ஒருவர் வீடு வேண்டுமென்று கேட்டால் அவருக்கு வீடு கிடைப்பதில்லை. மேற்படி இலாகா உத்தியோகஸ்தருக்கும், அவருடைய சிப்பந்திகளுக்கும் தகுந்த மரியாதைகள் செய்தால், உடனே வீடு கிடைத்துவிடும். லஞ்சம் கொடுக்காமல் நியாய முறையில் போகிறவருக்கு, வருஷம் இரண்டு ஆனாலும் வீடு கிடைப்பது இல்லை. இதுவரை 30 ரூபாயும் அதற்கு மேலும் வாடகையுள்ள வீடுகள் காலியானால் மட்டும், இலாகா அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று சட்டம் இருந்தது. புதுச் சட்டப்படி 15 ரூபாய் வீடு காலியானாலும் தெரியப்படுத்த வேண்டும். இதனால் அதிகமாகப் பாதிக்கப் படுவோர் ஏழைக் குடித்தனக்காரரும், வீட்டுக்காரரும்தான். இத்தனை நாள் பணக்காரர்களிடமிருந்து மட்டும் வாடகை இலாகா உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கி வந்தார்கள். இப்பொழுதோ ஏழைகளிடமிருந்தும் லஞ்சம் வாங்க நல்ல வழி ஏற்பட்டது. இதற்குப் பொறுப்புள்ள காங்கிரஸ் சர்க்காரும் லஞ்சப் பேயை வேரோடு ஒழிக்க வேண்டுமென்று சபதம் எடுத்துக் கொண்டிருக்கும் நம் பிரதம மந்திரி அவர்களும் என்னவிதமான நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

வி. நாகோஜிராவ்.

மதுரைக் காலேஜ், மதுரை
3—5—48

ஆசிரியர், 'கல்கி' சென்னை.

ஐயா, தங்கள் 24—4—48, 2—5—48, 'கல்கி' இதழ்களில் வெளியான ''எத்தனை நாள் இக்கொடுமை' என்னும் கட்டுரைகளை வாசித்தேன். ஒரு ஆசிரியன் என்ற முறையில் பொதுவாக அவற்றில் உள்ள விஷயங்களை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனாலும் ஒரு விஷயத்தை மட்டும் ஆக்ஷேபிக்காமல் இருக்க முடியவில்லை. 24—4—48 இதழில் 'பெற்றோர்' ஆசிரியர்களைத் தற்போதுள்ள பாட திட்டத்திற்குப் பொறுப்பாளிகளாக்கி இருப்பதுதான் அது. மெக்காலே தமது திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்த காலத்தில் ஆசிரியர்களைச் சம்மதம் கேட்கவில்லை. பிற்கால அதிகார வர்க்கங்களும் அதை மாற்றி யமைக்கவில்லை. ஆனால் சமீப

காலத்தில் 10, 15 ஆண்டுகளாக ஒவ்வொரு முக்கியமான ஆசிரியர்கள் சங்கத்திலும் மகாநாட்டிலும் தற்கால பாடதிட்டத்தை மாற்றியமைக்கும்படித் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அன்னிபெஸண்டு அம்மையார் தேசியக் கல்வித் திட்டத்தை வற்புறுத்தியது முதல் இப்பிரச்னை எல்லா முக்கியமான தலைவர்கள், கல்வி நிபுணர்கள் முதலியோர் மனதைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசாங்கமும் சென்னை அரசாங்கமும் பல வருஷங்களுக்கு முன்பே கல்வித் திட்டத்தைச் சீர்திருத்த யோசனைகளை வைத்துக்கொண்டு இன்னும் திக்குத் தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. பெற்றோர்களுக்கும் இதில் பொறுப்புண்டல்லவா? அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புவதால் அல்லவா இக்கல்வித் திட்டத்திற்கு ஆதரவு நீடித்துக் கொண்டு வருகிறது? சர்க்கார் கொடுக்கும் திட்டத்தை ஆசிரியர்கள் நிறைவேற்றக் கடமைப் பட்டவர்கள். ஆசிரியர்கள் அத்திட்டத்தை நிறைவேற்ற முடியாதென்றால் வேலையை விட்டு நீங்க வேண்டியதுதான். தொழிற் கொள்கையை நிர்ணயிப்பதில் தொழிலாளிகளுக்கு எப்படிப் பொறுப்பும் அதிகாரமும் இல்லையோ அப்படித்தான் கல்விக் கொள்கையை நிர்ணயிப்பதிலும் ஆசிரியர்களுக்கும் பொறுப்பும் அதிகாரமும் இல்லை. ஆனால் ஆசிரியர்கள் கல்வித் திட்டத்தை மாற்றி யமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து வற்புறுத்தியிருக்கிறார்கள். இப்பொழுதும் அவர்கள் அதில் உதவி செய்யத் தயாராக இருக்கிறார்கள். யாருடைய குற்றத்திற்காகவோ ஆசிரியர்கள் மீது பழி போடுவது நியாயமல்ல.

ஆர். கிருஷ்ணமூர்த்தி,
(பி.ஏ. எல்.டி. பி.ஓ.எல்)

திருவரங்கம்
26—4—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

தங்களுடைய 'கல்கி'யில் 25—4—48 தேதி வெளி வந்த "குமரி முனையில் தமிழர் தலம்" என்ற கட்டுரையில் 42-வது பக்கத்தில் கடைசி பாராவில் "சில கிறிஸ்தவ ஆலயங்களில் கூட, எல்லோரும் சமஸ்தான காங்கிரஸில் சேர வேண்டுமென்று பாதிரிமார்கள் பிரசாரம் செய்து வருகிறார்களாம்!" என்று எழுதியிருக்கிறது. "சில மலையாளப் பாதிரிமார்கள்" என்று குறிப்பிட்டிருந்தால் சரியாயிருந்திருக்கும். தமிழ்ப் பாதிரிமார்கள் அவ்விதம் பிரசாரம் செய்யவில்லை; அவர்கள் நடுநிலைமை வகிக்கிறார்கள். நான் ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்துவன் என்ற முறையிலும் நேரில் பார்த்த அனுபவத்திலும்தான் தங்களுக்கு இவ்வாறு எழுத முன் வந்தேன்.

அ. ப. வாஸ்.

சென்னை
5—5—48

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

"எத்தனை நாள் இக் கொடுமை?" என்ற தலைப்பின் கீழ் நீங்கள் நம் நாட்டுக் கல்வித் திட்டத்தின் ஊழல்களை வெட்ட வெளிச்சமாக்கி வருவதைக் காண நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் ஓர் வைத்தியக் கல்லூரி மாணவன். எங்கள் வைத்தியக் கல்வி முறையின் முட்டாள்தனத்திற்கு மாத்திரம் ஒரே ஒரு 'சாம்பிள்' தருகிறேன். வைத்தியக் கல்லூரி படிப்பு மொத்தம் ஐந்து வருஷம். இந்த ஐந்து வருஷப் படிப்பிற்கு முன், ஒரு ஆறு மாதப் படிப்பு உண்டு; அதை ஆறு மாதக் கடன் என்றே சொல்லலாம். அதுதான் 'ப்ரி ரிஜிஸ்ட்ரேஷன் கோர்ஸ்' (Pre-Registration Course). அதைப் பாஸ் செய்து விட்டுத்தான் வைத்திய மாணவனாக ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும். இந்த 'ப்ரி ரிஜிஸ்ட்ரேஷன்' பாட திட்டத்தில் ஒன்று பௌதிக நூல் (Physics) இதற்கும், படிக்கப் போகும் வைத்தியப் படிப்பிற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. 1946-ம் ஆண்டு கூடிய சென்னை மாகாண வைத்திய மாணவர்கள் மகாநாட்டில் (Madras Provincial Medical Students' Conference) இந்தக் 'கோர்ஸை' ஒழித்துத் தொலைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி, சர்வகலாசாலையாருக்கும் பய பக்தியுடன் அனுப்பி வைத்தோம். பலன் ஒன்றும் இல்லை. வைத்தியக் கல்லூரிப் பரீட்சையில் 35 %. மாணவர்களுக்கு மேல் பெரும்பாலும் பாஸ் கொடுப்பதில்லை. எனவே வைத்தியக் கல்லூரிகளில் 7, 8 வருஷங்கள் படிப்பவர்கள் சர்வ சாதாரணம். இந்தியனின் சராசரி வயது 26 என்று கூறுவார்கள். அப்படியானால் வைத்தியக் காலேஜில் படிக்கும் சராசரி இந்தியன் படிப்பு முடிவதற்குள் செத்துவிடுவான்! வெள்ளைக்காரன் போய் விட்டான். ஆனால் அந்தப் பாழாய்ப் போன ஆங்கில உடைமுறை இன்னும் ஆதிக்கம் செலுத்துகிறது! கோட்டு சூட்டுகளை யெல்லாம் தலை முழுகி விட்டு, ஹாய்யாக வேஷ்டி கட்டிக் கொண்டு காலேஜுக்குப் போகும் நாள் என்றோ?

எஸ். சங்கரன்

புது டெல்லி
6—5—1938

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தொன்று தொட்டுத் தமிழர்களின் வெற்றிக் கொடி இமயமலை வரை பாரத நாடெங்கும் நாட்டப்பட்ட தென்கிற செய்தி பண்டைக் காவியங்களின் வாயிலாக நமக்குக் கிடைக்கப்பெற்ற சரித்திர பூர்வமான நேர் செய்தியாகும். சிலப்பதிகாரத்தில் பத்தினித் தெய்வத்திற்குக் கோயில் சமைப்பான் வேண்டிச் சேர நாட்டு முடி வேந்தர் இமயத்திலிருந்து கல் கொணர்ந்த செய்தியும் வட நாட்டுக் குறுநில மன்னர்களை வென்ற செய்தியும் அமர கவிதையில் அழகுபடச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது.

தமிழரின் திக்விஜயம் புத்துயிர் பெற்றிருக்கிற தென்பதற்கு அறிகுறிகள் சமீப காலத்தில் அநேகம் ஏற்பட்டிருப்பதை யாவரும் கவனித்திருக்கக்கூடும். மத்திய சர்க்காரின் மந்திரி சபையில், இதர எந்த மாகாணத்தைக் காட்டிலும் அதிகப்படியான எண்ணிக்கை மந்திரிமார்கள், நம் சென்னை மாகாணத்தில் இருந்துதான் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழரின் புதிய திக் விஜயத்திற்குச் சிகரம் வைத்தது போலத் தமிழ்த்தாயின் தவப் புதல்வர் நம் ஒப்பற்ற அரும்பெருந் தலைவர் ராஜாஜியை இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் — ஜெனரலாக நியமித்திருக்கும் செய்தி தமிழர்கள் உள்ளத்தில் பண்டைய வெற்றி யாத்திரை ஞாபக மூட்டும்:

ராஜாஜியின் திக் விஜயம் பண்டைத் தமிழ் மன்னரின் வெற்றியைக் காட்டிலும் ஒரு

விசேஷம் வாய்ந்ததாயிருக்கிறது. வடநாட்டினரின் மனதையும் இருதயத்தையும் கூட ஜெயிக்க வெற்றி கொண்டுவிட்டார். போரில் பெரும் வெற்றி என்றும் சாசுவதமாயிருக்குமென்று யாரும் சொல்ல முடியாது. ஆனால் இருதயத்தை வசீகரணம் செய்வோர் வெற்றிப் பீடத்தில் சாசுவதமாய் வீற்றிருப்பாரென்பதில் ஐயம் இல்லை.

தமிழ்நாட்டில் சிலர் தமிழ்நாட்டின் மேல் வடநாடு ஆதிக்கம் செலுத்தும் என்று பூச்சாண்டி காண்பிப்பதும் அப்படி வடநாட்டினரின் ஆதிக்கம் ஏற்படாமல் முளையிலேயே எதிர்க்கவேண்டுமென்று இல்லாத பூசல்களைக் கிளப்பி விடுவதும் எவ்வளவு ஆதாரமற்றது என்பது ஆராய்ந்து பார்ப்போர் எவருக்கும் எளிதில் புலப்படும். வடநாட்டினரின் ஆதிக்கம் வந்துவிடுமோ என்று தமிழன் அச்சமுற யாதொரு காரணமும் கிடையாது. உண்மை அதற்கு எதிர்மாறாக இருக்கிறது. தமிழன் வட நாட்டின் அரியாசனத்தில் கம்பீரமாய் வீற்றிருக்கிறான்.

தமிழன் தன் பலத்தில் அவ நம்பிக்கை கொள்ளவேண்டிய அவசியம் யாதும் கிடையாது. தம் ஒப்பற்ற தலைவர் ராஜாஜியின் வழியைப் பின்பற்றி மேலும் மேலும் இந்தப் புதுமுறைத் திக் விஜய திட்டத்தில் வெற்றி பெறுவோமாக.

வி. அண்ணுஸாமி

திருப்பாப்புலியூர்
8—5—48

'கல்கி' ஆசிரியரவர்களுக்கு,

நம் பள்ளிக்கூடங்களில் கணக்குப் பரீட்சைகளில் மிக்க விநோதமான கேள்விகள் கேட்கப்படுகின்றன. விடை கண்டு பிடிக்கும்படி கொடுக்கப்படும் கணக்குகளில், மிளகாய் விலை தூக்கு நாலணுவாக இருக்கும். கடுகு படி நாலு ரூபாயாக இருக்கும். எண்ணெய் ரூபாய்க்கு முப்பது சேர் விற்கும்.

ஒருவன் தன் வீட்டிற்கு ஒரு மாத உபயோகத்திற்காக வாங்கிய மளிகை சாமான்களின் ஜாப்தா ஒன்றையும், ஒவ்வொன்றின் விலையையும் கொடுத்து மொத்த விலை கண்டு பிடிக்கும்படி ஒரு கணக்குப் பரீட்சையில் கேட்டிருந்தார்கள். அவன் ஒரு மாத உபயோகத்திற்காக வாங்கிய சாமான்கள் என்னென்ன தெரியுமா? 8 மணங்கு சர்க்கரை, 4 படி அரிசி, 1 மூட்டை ஏலக்காய், உளுந்து 4 மூட்டை, மிளகாய் முப்பது தூக்கு.

இன்னொரு கணக்கைப் பாருங்கள் :—

"ஏ என்பவன் ஓரிடத்திலிருந்து கிளம்பி, மணிக்கு 80 மைல் விதம் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்கிறான். பி என்பவன் அதே இடத்திலிருந்து புறப்பட்டு இன்னொரு மோட்டார் சைக்கிளில் ஏ யைத் துரத்திக் கொண்டு, ஏ புறப்பட்ட ஒரு மணி நேரம் கழித்துக் கிளம்புகிறான். பி யின் மோட்டார் சைக்கிள் 90 மைல் விதத்தில் போகிறது. ஏ யின் மோட்டார் சைக்கிள் வழியில் ஒர் மரத்தின்மீது மோதிவிட்டதால் அவன் வண்டி பழுதாகி விடுகிறது. அதைச் சரி பார்த்துக் கொண்டு 5 நிமிஷம் கழித்து ஏ மறுபடியும் புறப்பட்டு விடுகிறானென்றால் பி அவனை எத்தனை மணி நேரத்தில் பிடிப்பான்?"

மேற்படி கணக்கு எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது! 80 மைல் வேகத்தில் போகிறவன் மரத்தின்மீது மோதிக் காயம் ஏதும் இல்லாமல் தப்பித்துக் கொள்ளுகிறான்! மோட்டார் சைக்கிளும் மிகச் சொற்பமாகவே பழுதாகிறது! 5 நிமிஷத்தில் பழுது பார்த்துக் கொண்டு மறுபடியும் பிரயாணம் செய்ய ஆரம்பித்து விடுகிறான்!

இம்மாதிரி பரீட்சைக் கேள்விகளும், குழந்தைகளின் மூளையை வாட்டும் பாடங்களும் ஒழிய வேண்டும்.

எஸ். வைத்தியநாதன்.

மயிலாப்பூர்
8—5—1948

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

மே மாதம் 9-ந் தேதி 'கல்கி' இதழில் வெளியாகிய 'பெற்றோர்' கட்டுரையைப் படிக்கையில், எட்டாவது ஸ்டாண்டர்டு பரீட்சையில் இங்கிலீஷ் பாஷைத் தரம் எவ்வளவு கடினமானது என்பதற்கு, பரீட்சையில் கேட்டுள்ள ஒரு இங்கிலீஷ் செய்யுளை எடுத்துக் காட்டி, அதற்குப் பொருள் கேட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருப்பதைக் கண்டவுடன் நான் திடுக்கிட்டு விட்டேன். இடைக்கலை (இன்டர்மீடியட்) வகுப்புப் பரீட்சை எழுதிவிட்டு மேலும் 'பி. ஏ' வகுப்பில் சேர்ந்து படிக்க உத்தேசம் கொண்டுள்ள எனக்கு 'கல்கி'யில் குறிப்பிட்ட எட்டாம் ஸ்டாண்டர்டு இங்கிலீஷ் செய்யுளின் பொருளை ஓரளவு அறிவதற்கு அரை மணி நேரத்துக்கு மேலாகியதென்றால், நான் திடுக்கிடாமல் என்ன செய்ய முடியும்? என்னுடைய நிலையே அந்த லக்ஷணத்தில் இருந்தால், அந்தப் பரீட்சை எழுதும் மாணுக்கர்களின் நிலைமை எப்படி இருந்திருக்கும்!

இதை யெல்லாம் கவனிக்கையில் பரீட்சைகள் அடியோடு ஒழிய வேண்டுமென்று கூக்குரலிட வேண்டி இருக்கிறது. உடனடியாகப் பரீட்சையை ஒழிக்க இயலாவிட்டால், சீமையில் இருப்பது போன்று பரீட்சை விதிகளை மாற்றி அமைக்கட்டும். 'மாந்தருக்குள் ஒரு தெய்வம்' என்ற தலைப்பில், சீமையில் பரீட்சை முறையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 'பாரிஸ்டர்' பரீட்சையில், மேதாவிகளுடன் அடிக்கடி தொடர்பு வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும், சில குறிப்புகளை மட்டும் படித்திருக்க வேண்டுமென்றும், பரீட்சைக் கேள்விகளும் சுலபமாகவே கேட்டு, மார்க்குகளும் தாராளமாகப் போடுவதிலும், நூற்றுக்கு தொண்ணூற்றைந்து பேர்களுக்கு மேல் பாஸ் பண்ணி விடுகிறார்களென்றும் எழுதி இருந்தீர்கள். அதனுல் மாணுக்கர்களுக்கு மேன்மேலும் படிக்கவோ அல்லது ஆராய்ச்சி செய்யவோ ஊக்கம் இருக்கிறதென்றும் குறிப்பிட்டு இருந்தீர்கள். அப்படிப்பட்ட நிலை நம் நாட்டில் ஏன் ஏற்படக் கூடாது? நம்முடைய நாட்டில் எதற்காக நூற்றுக்கு முப்பத்தைந்து பேர்களுக்கு மேல் பாஸ் போடாமல், மாணுக்கர்களை வாட்டி எடுக்க வேண்டும்?

ந. நாராயணசாமி.

★ இந்த இதழில் வெளியாகியிருக்கும் வட்டமேஜைக் கடிதங்களில் கோயமுத்தூர் ஸ்ரீ நாகோஜீராவின் கடிதத்துக்கு ரூ. 25 பரிசளிக்கப்பட்டது.



பதினைந்தாம் அத்தியாயம்

ராஜத்தின் இரகசியம்

சீதா அப்பால் சென்றதும், ராஜம், "அண்ணா! பிற்பாடு எப்படி இருக்குமோ? என்னமோ? அவகாசம் கிடைக்குமோ? கிடைக்காதோ? நான் சொல்ல வேண்டியதை உடனே சொல்லிவிட வேண்டும். அதற்கு முன்னால் ஒரு காரியம் இருக்கிறது! பெட்டி ஏதாவது கொண்டு வந்திருக்கிறாய் அல்லவா? அதைக் கொஞ்சம் கொண்டு வா?" என்றாள். அவளுடைய பரபரப்பின் காரணத்தைச் சிறிதும் அறியாத கிட்டா வய்யர், "பெட்டி கொண்டு வந்திருக்கிறேன், ராஜம்! தாழ்வாரத்தில் இருக்கிறது. ஆனால் அதற்கு என்ன இப்போது அவசரம்? மெதுவாய்க் கொண்டு வந்தால் போச்சு. பெட்டி நல்ல கனம்; அதை யாரும் சுலபமாக எடுத்துக் கொண்டு போக முடியாது!" என்றார்.

"அதற்காகச் சொல்லவில்லை, அண்ணா! வேறு காரணம் இருக்கிறது. பெட்டியை உள்ளே எடுத்துக் கொண்டு வா! அப்படியே வாசலில் எட்டிப் பார்த்து இவர் டாக்டரோடு காரில் ஏறிக் கொள்கிறாரா என்று கவனித்து வா! அநேகமாக மருந்து வாங்கிக் கொண்டு வருவதற்காகப் போவார்!" என்றாள் ராஜம்.

"நீ எதற்காக இவ்வளவு அதிகமாய்ப் பேச வேண்டும்? நான் அடுத்த ரயிலுக்குப் போகிறதாக உத்தேசமில்லை! மெதுவாகப் பேசிக் கொள்ளலாமே!" என்று கிட்டா வய்யர் சொல்லுவதற்குள்ளே, ராஜம்மாள், "அண்ணா! உனக்குப் புண்ணியமாகப் போகட்டும். கொஞ்சம் நான் சொல்லுகிறபடி செய்! ரொம்ப முக்கியமான விஷயம். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டால் பிறகு என் மனது நிம்மதியடையும். சொல்லி முடிக்கிற வரையில் பெரிய பாரமாயிருக்கும். சீக்கிரமே போய் எட்டிப் பார்த்து விட்டுப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு வா!" என்றாள். இதற்கு மேல் அவளோடு விவகாரம் செய்வதில் பயனில்லையென்று கிட்டா வய்யர் அறைக்கு வெளியில் சென்று தாழ்வாரத்தின் ஓரமாக எட்டிப் பார்த்தார். ராஜம் எதிர்பார்த்தபடியே துரைசாமி காரில் ஏறிக் கொண்டிருப்பதைக் கண்டார். தாழ்வாரத்தில் வைத்திருந்த பெட்டியை அறைக்குள் எடுத்துக் கொண்டு வந்து வைத்தார்.

"அண்ணா! கொஞ்சம் கதவைச் சாத்து! சீக்கிரம் அண்ணா; பெட்டியை இங்கே என் பக்கத்தில் கொண்டு வா!" என்றாள்.

கிட்டா வய்யர் அப்படியே செய்தார்; செய்து விட்டு ராஜம்மாள் செய்த காரியத்தை வியப்புடனே பார்த்துக் கொண்டிருந்தார்.

ராஜம் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு தலைமாட்டில் வைத்திருந்த இரண்டு தலையணைகளில் ஒன்றை அவசரமாக எடுத்தாள். தலையணை உறையைக் கழற்றி விட்டு ஒரு பக்கத்தில் போட்டிருந்த தையலை அவசர அவசரமாகப் பிரித்தாள். தலையணைப் பஞ்சுக்குள் கையை விட்டு எதையோ எடுத்தாள். முதலில் இரண்டு கத்தை ரூபாய் நோட்டுகள் வெளி வந்தன. பிறகு மிக அழகிய வேலைப்பாடு அமைந்த ரத்தின மாலை ஒன்று வெளி வந்தது. மாலையில் தொங்கிய பதக்கத்தில் வைரங்கள் ஜொலித்தன. வைரங்களுக்கு மத்தியில் பொன்னிறக் கோமேதகம் ஒன்று கண்ணைக் கவர்ந்தது.

"அண்ணா! அண்ணா! இந்த இரண்டாயிரம் ரூபாய் நோட்டையும் இந்த ரத்தின மாலையையும் உன் பெட்டிக்குள்ளே பத்திரமாக வை! சீக்கிரம் வை!" என்றாள்.

கிட்டா வய்யர் தயங்கினார். அவர் உள்ளத்தில் என்ன வெல்லாமோ சந்தேகங்கள் உதித்தன. "ராஜம்! இது என்ன?" என்றார்.

"இது ஒன்றையும் நான் திருடிவிடவில்லை, அண்ணா! முதலில் உன் பெட்டிக்குள் பத்திரமாக எடுத்து வை! பிறகு எல்லாம் விவரமாகச் சொல்கிறேன். சொல்லித்தான் ஆக வேண்டும்!"

கிட்டா வய்யர் ஏதோ விசித்திரமான கனவு காண்கிறோம் என்று எண்ணிக்கொண்டு ரூபாய் நோட்டுகளையும் ரத்தின மாலையையும் எடுத்துப் பெட்டிக்குள்ளே வைத்தார். பெட்டியைப் பூட்டிவிட்டுத் தலை நிமிர்ந்து சகோதரியைப் பார்த்தார்.

ராஜம் மறுபடியும் ஒரு தடவை புன்னகை புரிய முயன்றாள். அந்த முயற்சியின் பலன் கிட்டா வய்யருக்கு விபரீதமாகப் பட்டது. "ராஜம்! உடம்புக்கு ஏதாவது செய்கிறதா? மறுபடியும் டாக்டரைக் கூப்பிடச் சொல்லட்டுமா?" என்று ஆத்திரமாய்க் கேட்டார்.

"வேண்டாம்! வேண்டாம்! டாக்டர் வந்து என்னத்தைச் செய்து விடுவார், பாவம்! அவர்தான் உன்னிடம் சொல்லி விட்டாரே? இனிமேல் மனோ தைரியந்தான் எனக்கு மருந்து! கதவைத் திறந்து விட்டு வா; எல்லாம் சொல்கிறேன்!" என்று ராஜம் கூறிப் பழையபடி தலையணையில் சாய்ந்து கொண்டாள். இத்தனை நேரம் உட்கார்ந்து பேசிய காரணத்தினால் அவளுக்கு மூச்சு வாங்கிற்று.

கிட்டா வய்யர் படுக்கையின் அருகில் வந்து உட்கார்ந்து கவலையுடன் அவளைப் பார்த்தார்.

"அண்ணா! நான் சொல்ல வேண்டியதை உன்னிடம் சொல்லாமல் சாக மாட்டேன். சொல்லாமல் செத்தால் என் நெஞ்சு வேகாது!......"

"ராஜம்! இப்படியெல்லாம் பேசாமல் இருக்க மாட்டாயா? நீ சும்மா இருந்தாலே போதும்! நான் ஒன்றும் உன்னைக் கேட்கவில்லை!" என்றார் கிட்டா வய்யர்.

ராஜம் சற்று நேரம் சும்மா இருந்தாள். மூச்சு வாங்கியது நின்றது. சிறிது களைப்பு நீங்கியது.

"நீ ஒன்றும் கேட்க மாட்டாய்; ஆனால் நான் சொல்லித் தீரவேண்டும். இப்போது கொடுத்தேனே, இந்த இரண்டாயிரம் ரூபாய் பணமும் சீதாவின் கலியாணத்துக்காகக் கொடுத்திருக்கிறேன். ரத்தின மாலையும் கலியாணத்தின்போது அவளுக்குப் போடுவதற்காகத்தான். அண்ணா! நீயே சொன்னாய், — இருபது வருஷமாக உன்னை நான் ஒன்றும் தொந்தரவு செய்யவில்லை என்று. அதற்கெல்லாம் சேர்த்து இப்போது தொந்தரவு கொடுக்கிறேன். சீதாவுக்கு நீதான் கலியாணம் செய்து வைக்க வேண்டும். ஊருக்கு அழைத்துக் கொண்டுபோய் அந்தப் பக்கத்திலேயே வரன் பார்த்துக் கலியாணம் பண்ணிக் கொடுக்க வேண்டும். ஆகட்டும் என்று வாயைத் திறந்து சொல்லு. சொன்னால்தான் எனக்கு நிம்மதி ஏற்படும். டாக்டர் சொன்னதுபோல் ஒரு வேளை உடம்பு குணமானாலும் ஆகும்!" என்றாள்.

"ராஜம்! இப்படி நீ என்னைக் கேட்க வேண்டுமா? சீதாவை அப்படி நிராதரவாய் விட்டுவிடுவேனா? லலிதாவைப்போல் சீதாவும் என்னுடைய பெண் என்றே நினைத்துக் கொண்

டிருக்கிறேன். கட்டாயம் நம்ம பக்கத்திலேயே வரன் பார்த்துக் கலியாணம் செய்து வைக்கிறேன். நீயும் கூட இருந்து பார்த்துச் சந்தோஷப் படப் போகிறாய். ஆனால் சீதாவின் கலியாணத்துக்காக நீ உன் அகத்துக்காரருக்குத் தெரியாமல் பணம் சேர்த்து வைத்துக் கொடுக்க வேண்டுமா? கிராமாந்தரத்து ஸ்திரீகள் இப்படியெல்லாம் செய்வார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். வீட்டுச் சாமான்களை விற்றும் செட்டுப் பிடித்தும் நாட்டுப்புறத்து ஸ்திரீகள் பணம் சேர்த்து வைப்பதுண்டு. அந்தமாதிரி நடத்தையை உன்னிடம் நான் எதிர்பார்க்கவில்லை. அந்த மனுஷருக்குத் தெரிந்தால் என்ன நினைத்துக் கொள்வார்? உன்னைப் பற்றி என்ன என்று எண்ணுவார்? என்னைப் பற்றித்தான் என்ன நினைப்பார்? எனக்குப் பிடிக்கவே இல்லை!"

"கொஞ்சம் இரு, அண்ணா! நீ பாட்டுக்குப் பேசிக் கொண்டே போகாதே! அப்படியெல்லாம் நான் தப்புக் காரியம் பண்ண மாட்டேன். அவருடைய பணத்திலிருந்து காலணா நான் எடுத்தது கிடையாது. நம்ம வீட்டில் நீங்கள் எனக்குச் செய்துபோட்ட நகைகளையும் ஆரம்பத்தில் இவர் எனக்குப் பண்ணிப் போட்ட நகைகளையும் விற்று அவருக்குக் கஷ்டம் வந்த போது கொடுத்திருக்கிறேன். வீட்டுச் செலவுப் பணத்திலிருந்து எப்படிப் பணம் மிச்சம் பிடிக்க முடியும்? இந்த பம்பாய்ப் பட்டணத்தில் குடித்தனம் பண்ணிப் பார்த்தால் உனக்கு அந்தக் கஷ்டம் தெரியும். இந்தப் பணமும் ரத்தின மாலையும் சீதாவின் கலியாணத்துக்கு என்றே தெய்வத்தின் கிருபையால் கிடைத்தவை. கேட்டால் உனக்குக் கதைமாதிரி இருக்கும். நான் குழந்தையாயிருந்த காலத்திலிருந்து எனக்குக் கதைப் புத்தகம் படிக்கப் பிடிக்கும் என்றுதான் உனக்குத் தெரியுமே! தமிழிலே வெளியான அவ்வளவு கதைப் புத்தகங்களும் நான் படித்திருக்கிறேன். ஹிந்தி பாஷையிலும் அநேக கதைப் புத்தகங்கள் படித்திருக்கிறேன். வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் இந்த மூன்றரை அறையிலேயே அடைந்து கிடக்கும் நான் வேறு என்னத்தைத்தான் செய்வது? எப்படிப் பொழுது போக்குவது? நான் படித்திருக்கும் ஆயிரம் கதைகளில் நடந்த அதிசயங்களைக் காட்டிலும் அதிசயமான சம்பவம் என்னுடைய வாழ்க்கையில் உண்மையாகவே நடந்தது. அதை உனக்குச் சொல்லப் போகிறேன். வேறு யாருக்கும் இது தெரியாது. சீதாவுக்குக் கூடத் தெரியாது......"

இந்தச் சமயத்தில் கையில் காப்பியுடன் வந்தாள் சீதா. அம்மாவும் மாமாவும் பேசிக் கொண்டிருக்கும் போது அறைக்குள் வரலாமோ கூடாதோ என்று அவள் தயங்கியதாகக் காணப் பட்டது.

"வா! அம்மா!" என்று தாயார் ஈனக் குரலில் கூறியதும் தைரியமடைந்து உள்ளே வந்தாள்.

கிட்டா வய்யர் அவளிடமிருந்து காப்பியை வாங்கிக் கொண்டு, "நீ கொஞ்சம் சாப்பிடுகிறாயா?" என்று ராஜத்தைப் பார்த்துக் கேட்டார்.

"கொஞ்சம் கொடு! இத்தனை நாளும் நான் உயிரை வைத்துக்கொண்டிருப்பது டாக்டர் கொடுத்த மருந்தினால் அல்ல; இந்தக் காப்பியினாலேதான்!" என்றாள் ராஜம்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. காப்பி அதிகமாகச் சாப்பிட்டு நீ உன் உடம்பைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாய். காப்பி ரொம்பப் பலவீனப் படுத்தும், தெரியாதா?"

"அப்படித்தான் சில பேர் சொல்லுகிறார்கள். என்னைக் கேட்டால், காப்பி சாப்பிடாமல் பத்து வருஷம் அதிகமாக உயிரோடு இருப்பதைக் காட்டிலும் காப்பி சாப்பிட்டுப் பத்து வருஷம் முன்னாலேயே செத்துப் போவது நல்லது என்பேன்."


"உன்னுடைய சுபாவம் கொஞ்சம் கூட மாறவில்லை. பன்னிரண்டு வயதில் துடுக்காகப் பேசியது போலவே இப்போதும் பேசுகிறாய். நாமெல்லாரும் இப்படிக் காப்பிப் பைத்தியம் பிடித்து அலைகிறோம் என்று தெரிந்துகொண்டுதான் காப்பித் தோட்ட முதலாளிகள்

நம்முடைய தலையிலே யெல்லாம் கூழைக் கரைக்கிறார்கள்!"

ராஜம்மாள் சீதாவைப் பார்த்து, "குழந்தாய்! வாசலில் அப்பா வந்து விட்டாரா என்று பார்! ஒரு வேளை சாப்பிடக் கூட மருந்து இல்லை. அப்பா மருந்து வாங்கிக் கொண்டு வந்த உடனே ஓடி வந்து சொல்லு!" என்றாள். அந்தக் குறிப்பைச் சீதா அறிந்து கொண்டு அறையிலிருந்து வெளியேறி மச்சுப்படிகளின் வழியாகக் கீழே சென்றாள்.

ராஜம் கிட்டா வய்யரைப் பார்த்து, "அண்ணா! இப்போது நான் சொல்லப் போகிற விஷயத்தை இவரிடம் அதாவது சீதாவின் அப்பாவிடம் நீ ஒரு நாளும் சொல்லக் கூடாது. வேறு யாரிடமும் சொல்லக் கூடாது. வீட்டிலே மன்னியிடம் கூடச் சொல்லப் படாது. சொல்லுவதில்லை என்று சத்தியம் பண்ணிக் கொடு! வேண்டாம், சத்தியம் வேண்டாம். நீ சொன்ன சொல்லை நிறைவேற்றுவாய் என்று எனக்குத் தெரியும். யாரிடமும் சொல்லா திருப்பா யல்லவா?" என்று சொல்லி நிறுத்தினாள்.

"சொல்லவில்லை; சொல்லவில்லை. நீயே என்னிடம் ஒன்றும் சொல்லாம



விருந்தால் நல்லது. பேசினால் உனக்கு இரைக்கிறது! இப்படி உனக்குத் தொந்தரவு கொடுப்பதற்குத்தானா நான் பம்பாய்க்கு வந்தேன்?"

"எனக்கு ஒரு தொந்தரவும் இல்லை; கேள்!" என்றாள் ராஜம்.

"எனக்கு இந்தத் தடவை உடம்புக்கு வந்து இருபது நாளாயிற்று. நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் படுத்துக்கொண்ட அன்றைக்கு வெள்ளிக்கிழமை. சாயங்காலம் அம்பிகையின் படத்துக்கு முன்னால் விளக்கேற்றி வைத்துவிட்டு நமஸ்காரம் பண்ணினேன். சியாமளா தண்டகம் ஸ்தோத்திரம் சொன்னேன். 'அம்மா! தாயே! பராசக்தி! நீதான் என் குழந்தை சீதாவைக் காப்பாற்ற வேண்டும். நல்ல இடத்தில் குழந்தைக்குக் கலியாணம் ஆகக் கிருபை செய்ய வேண்டும்' என்று வேண்டிக் கொண்டேன். உடம்பு ஏதோ மாதிரி இருந்தது. படபட வென்று வந்தது. தலைசுழலுவது போலத் தோன்றியது. உடனே இந்த அறைக்கு வந்து இதே கட்டிலில் சாய்ந்து படுத்துக் கொண்டேன். சீதா அவளுடைய சிநேகிதியைப் பார்த்துவிட்டு வருவதற்காகப் போயிருந்தாள். இவர் இன்னும் ஆபீஸிலிருந்து வரவில்லை. உனக்குப் போன தடவையே சொல்லியிருக்கிறேனே! சில நாளைக்கு இவர் சாயங்காலம் வீட்டுக்கு வருவார்; சில நாளைக்கு வரவே மாட்டார்; இன்றைக்கு வருகிறாரோ இல்லையோ என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது கண்ணைச் சுற்றிக்கொண்டு தூக்கம் வந்தது. அது தூக்கமா அல்லது மயக்கமா என்று எனக்குத் தெரியாது. கண்கள் மூடிக்கொண்டன. அப்புறம் கொஞ்சநேரம் ஒன்றுமே தெரியவில்லை.

இப்படி ஒரு மணி நேரம் போயிருக்க வேண்டும் என்று பிற்பாடு கடிகாரத்தைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன். மயக்கம் தெளிந்து கண்ணை விழித்துப் பார்த்த போது வெறுமனே சாத்தியிருந்த என் அறைக் கதவு திறந்தது. அந்த சத்தங் கேட்டுத்தான் என் மயக்கம் கலைந்திருக்க வேண்டும்.

கதவைத் திறப்பது சீதாவா அல்லது சீதாவின் அப்பாவா என்று எண்ணினேன். அதற்குள் கதவு நன்றாய்த் திறந்தது. சீதாவும் இல்லை அவள் அப்பாவும் இல்லையென்று தெரிந்தது. ஒரு ஸ்திரீ உள்ளே வந்தாள். கிட்டத்தட்ட என் வயதுதான் இருக்கும்.



வடக்கத்தியாள் போலத்தான் இருந் தாள். தலையில் முக்காடு போட்டிருந் தாள். கையில் ஒரு சின்னத் தோல் பெட்டி வைத்திருந்தாள். என் சமீப மாக வந்து, 'ராஜம்மாள் என்கிறது நீதானா?' என்று கேட்டாள். ஹிந்தி பாஷையில்தான். இருபது வருஷமாக இந்த ஊரில் இருந்ததினால் எனக்கு ஹிந்தி நன்றாகத் தெரியும். ஆயினும் வந்திருப்பவள் யாரோ என்னமோ என்ற தயக்கத்தினால் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை.

உடனே அவள் கொஞ்சம் பதட்டமான குரலில், 'இதோ பார், அம்மா! ஒரு முக்கியமான காரிய மாக நான் வந்திருக்கிறேன். வீண் பொழுது போக்க நேரம் இல்லை. ராஜம் பேட்டை ராஜம்மாள் என் கிறது நீதானா? துரைசாமி ஐயரின் சம்சாரம்?' என்றாள். 'ஆமாம்' என்று ஈனஸ்வரத்தில் சொன்னேன். 'அதை எப்படி நான் நம்புகிறது!' என்று சொல்லிவிட்டு அந்த ஸ்திரீ நாலு புறமும் பார்த்தாள். சுவரிலே மாட்டியிருக்கிற படங்கள் அவள் கண்ணில்பட்டன. சமீபத்தில் சென்று பார்த்தாள். அண்ணா! உனக்கு இங் கிருந்தே தெரிகிறதல்லவா? அந்தப் படங்களில் ஒன்று எனக்குக் கலியா ணம் ஆன புதிதில் நானும் அவரும் ஒன்றாக எடுத்துக் கொண்ட படம். இன்னொன்று மூன்று வருஷத்துக்கு முன்னால் நானும் அவரும் சீதாவும் எடுத்துக் கொண்டது. இரண்டாவது படத்தை உற்றுப் பார்த்து விட்டு, 'இதில் இருக்கிற பெண் யார்? உன் மகளா?' என்று அந்த ஸ்திரீ கேட் டாள். 'ஆமாம்!' என்று சொன் னேன். இன்னும் சற்றுப் படத்தை உற்றுப் பார்த்துவிட்டுச் சடார் என்று திரும்பி என் அருகில் வந்தாள். என் முகத்தை உற்றுப் பார்த்து, 'ஆமாம், நீ ராஜம்மாள்தான்!' என் றாள். அப்போது அவளை நான் உற் றுப் பார்த்தேன். அவளுடைய முகத் தில் ஜொலித்த தேஜஸையும் அவளு டைய கண்களின் காந்த சக்தியை யும் என்னால் சொல்லி முடியாது. 'இவ்வளவு அழகான ஸ்திரீயும் உல கத்தில் உண்டா?' என்று எண்ணி நான் திகைத்துப் போனேன். அந்த ஸ்திரீ தன்னுடைய கைப் பெட்டியை அதோ இருக்கிற அந்த மேஜை மேலே வைத்து விட்டுச் சட சட வென்று நடந்துபோய்க் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு வந்தபோது என் மனதில் பீதி உண்டாயிற்று. எழுந்து ஓடிப் போகலாமா வென்று தோன்றி யது. அதற்கும் துணிச்சல் ஏற்பட வில்லை. கைகாலை அசைக்கவே முடிய வில்லை. மந்திரத்தினால் கட்டுண்ட சர்ப்பம் என்பார்களே, அம்மாதிரி இருந்தேன். அந்த ஸ்திரீ கதவைத் தாளிட்டு வந்து என் பக்கமாக முது கைக் காட்டிக் கொண்டு நின்று மேஜைமேலிருந்த தோல் பெட்டியைத் திறந்தாள். எதை எதையோ எடுத்து மேஜைமேல் பரப்பினாள். எடுத்து வைத்ததில் சிலவற்றை மறுபடியும் பெட்டிக்குள் எடுத்து வைத்தாள். மற்றவைகளைக் கையில் எடுத்துக் கொண்டு எனக்கு அருகில் வந்தாள்.

'ராஜம்மா! உனக்கு நான் இப் போது சொல்லப் போவது ஆச்சரி யத்தை உண்டாக்கலாம். ஆனால் ஆச் சரியம் ஒன்றும் இல்லை. விஷயம் என்ன வென்று பிற்பாடு சொல் கிறேன். முதலில் இந்த ரூபாயை யும் ரத்தின மாலையையும் வாங்கிக் கொள். ரூபாய் இரண்டாயிரம் இருக் கிறது. ரத்தின ஹாரம் ரொம்ப மதிப் புள்ளது. பணம், ஹாரம் இரண்டும் உன்னுடைய மகளின் ஸ்ரீதனத்துக் காகக் கொடுக்கிறேன். ஒன்றும் யோசிக்காதே! வாங்கிக் கொள்!' என்றாள். ஒரே சமயத்தில் என்னை அதிசயம், ஆனந்தம், பயம் எல்லாம் பிடுங்கித் தின்றன. குழந்தை சீதா வுக்கு இந்த அதிர்ஷ்டம் வருகிறதே என்று சந்தோஷமாயிருந்தது. இவள் யார், இவள் எதற்காகக் கொடுக் கிறாள் என்று ஆச்சரியமாயிருந்தது. வாங்கிக் கொள்ளலாமோ கூடாதோ, அதனால் ஏதாவது அபாயம் வருமோ என்று பயமாகவும் இருந்தது. ஆயி னும் அவளுடைய பேச்சைத் தட்ட எனக்கு மனதிடம் இல்லை. கையிலே வைத்துக் கொண்டே, 'இந்தா! பிடி!' என்று இரண்டு தடவை சொன்ன பிறகு இரண்டு கைகளையும் நீட்டி வாங்கிக் கொண்டேன். 'பத்திரமாய் வை!' என்றாள். 'ஆகட்டும்; அப் புறம் பெட்டியில் வைக்கிறேன்' என்று

சொல்லிவிட்டுத் தலையணையின் கீழே ரூபாய் நோட்டுகளையும் ரத்தின ஹாரத்தையும் தள்ளினேன்.

பிறகு அவன், 'ராஜம்மா! இம்மாதிரி நான் பணமும் ஹாரமும் கொண்டு கொடுத்தது உனக்கு ஆச்சரியமாயிருக்கலாம். இவன் யார் முன்பின் தெரியாதவன் இம்மாதிரி கொடுப்பதற்கு என்று நினைக்கலாம். உனக்கு என்னைத் தெரியாதுதான். ஆனால் உன்னை ரொம்ப நாளாக எனக்குத் தெரியும். வெகு காலத்துக்கு முன்னால் உனக்கு நான் ஒரு கெடுதல் பண்ணினேன். வேண்டுமென்று செய்யவில்லை; ஏதோ தெய்வாதீனமாக அப்படி நேர்ந்துவிட்டது. அதற்குப் பரிகாரமாகத்தான் இந்தப் பணத்தையும் ஹாரத்தையும் கொடுத்திருக்கிறேன். இவற்றை நீ பத்திரமாய்க் காப்பாற்றி வைத்திருந்து கலியாணத்தின் போது உன் மகளுக்குக் கொடுக்கவேண்டும்! ஆனால் இப்படி நான் கொடுத்தேன் என்கிற விஷயத்தை யாரிடமும் சொல்லக் கூடாது. வேறு யாரிடம் சொன்னாலும் உன் புருஷரிடம் சொல்லவே கூடாது. தெரிகிறதா?' என்றான். நான் பதில் என்ன சொல்வது என்று தெரியாமல் பிரமித்துப் போயிருந்தேன். 'என்ன பேசாமலிருக்கிறாய், ராஜம்மா! நான் சொன்னதெல்லாம் தெரிந்ததா?' என்று சிறிது கடுமையான குரலில் கேட்டான். 'தெரிந்தது' என்று முணுமுணுத்தேன். 'நான் சொன்னபடி செய்வாயா?' என்றான். நான் சும்மாயிருந்தேன். உடனே அந்த ஸ்திரீயின் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. பத்திர காளியாக மாறினாள். கண்கள் நெருப்புத் தணலைப் போல் ஆயின. கைப் பெட்டிக்குள்ளே கையை விட்டு எதையோ எடுத்தாள். எடுத்த வஸ்து பளபளவென்று ஜொலித்தது. அது என்னவென்று நினைக்கிறாய், அண்ணா!" என்று ராஜம் கேட்டு நிறுத்தினாள்.

ராஜம் சொல்லி வந்த கதையைப் பற்றி இன்னது நினைப்பதென்று தெரியாமல் கிட்டாவய்யர் ஸ்தம்பித்துப் போயிருந்தார். ராஜம் சரியான ஞாபகத்துடன் பேசுகிறாளா என்று அடிக்கடி அவருக்குச் சந்தேகம் உண்டாயிற்று. ஆனால் இரண்டாயிரம் ரூபாய் நோட்டும் ரத்தின ஹாரமும் சற்று முன் தாம் வாங்கிப் பெட்டியில் வைத்தது என்னமோ உண்மை. ஆகையால் கதையும் ஒரு வேளை நிஜமாக இருக்கலாமல்லவா?

"எனக்கு எப்படி அம்மா, தெரியும்? தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. நீ பேச்சை நிறுத்தினால் போதும், ராஜம்! டாக்டர் சொல்லி விட்டுப் போனது நினைவில்லையா?"

"ஆகா! டாக்டர் இருக்கட்டும், டாக்டர்! இன்னும் கொஞ்சந்தான் பாக்கியிருக்கிறது. அதையும் கேட்டுவிடு! அந்த ஸ்திரீ தோல் பெட்டியிலிருந்து எடுத்தது வேறு ஒன்றுமில்லை. கூர்மையாக வளைந்திருந்த ஒரு சின்னக் கத்தி. அதை எடுத்து அவன் என்னுடைய கண் முன்னால் காட்டினான். 'பார்த்தாயா, ராஜம்மா! நன்றாய்ப் பார்த்துக் கொள். நான் நல்லவர்களுக்கு நல்லவன்; பொல்லாதவர்களுக்குப் பொல்லாதவன். நான் சொன்னபடி நீ எல்லாம் செய்ய வேண்டும். உன் அகத்துக்காரரிடம் ஒரு வார்த்தை கூட நான் வந்தது பற்றிச் சொல்லக் கூடாது. சொன்னதாகத் தெரிந்ததோ, ஒரு நாளைக்கு இந்தக் கத்தியால் உன்னை ஒரே ஒரு குத்தாகக் குத்திக் குடலைக் கிழித்து விடுவேன்! ஜாக்கிரதை' என்றான். எனக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. மின்சார விளக்கின் ஒளியில் பளபளவென்று பிரகாசித்த அந்தக் கத்தியைப் பயங்கரத்துடன் பார்த்த வண்ணம் இருந்தேன். 'பயப்படாதே, ராஜம்! பயப்படாதே! நான் சொன்னபடி செய்தால் உனக்கு ஒன்றும் வராது!' என்று அந்த ஸ்திரீ சொல்லிக் கொண்டிருக்கையில் யாரோ மாடிப்படி ஏறிவரும் சத்தம் கேட்டது. அவன் கொஞ்சம் திடுக்கிட்டுப் போனான். 'யார்? உன் புருஷனா?' என்று மெல்லிய குரலில் கேட்டான். 'இல்லை, மகன்!' என்று சொன்னேன். அவனுடைய காபரா நீங்கிற்று. சீதா அறைக் கதவின் அருகில் வந்து கதவைத் தட்டினான். 'அம்மா! காரியமா யிருக்கிறாயா? கதவைத் திற!' என்றான். நான்

படுத்திருந்தபடியே, 'சீதா! படுக்குப் பக்கத்தில் விளக்கு எரிகிறதா, பார்! இன்று வெள்ளிக்கிழமை யல்லவா? முகத்தை அலம்பிப் பொட்டு வைத்துக் கொண்டு லலிதா சஹஸ்ர நாமம் சொல்லு!' என்றேன். 'சரி, அம்மா!' என்று சீதா சமையலறைக்குள் போனாள்.

அந்த ஸ்திரீ அவசர அவசரமாகத் தோல் பெட்டியைப் பூட்டி எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். 'ராஜம்மா! ஜாக்கிரதை! நான் சொன்னதெல்லாம் நினைவிலிருக்கட்டும்!' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். கதவைத் திறந்து கொண்டு வெளித்தாழ்வாரம் சென்று அங்கிருந்து அவள் மச்சுப்படி இறங்கும் சத்தமும் கேட்டது. அப்புறந்தான் எனக்கு உயிர் வந்தது. கொஞ்சம் தைரியமும் வந்தது. இவ்வளவும் ஒரு வேளை கனவில் காண்கிறேனோ என்று தோன்றியது. தலையணையின் அடியில் கையை விட்டுப் பார்த்தேன். நோட்டுக் கத்தையும் ரத்தின ஹாரமும் இருந்தன. கனவு காணவில்லை, உண்மையாக நடந்ததுதான் என்று நம்பிக்கை பெற்றேன். இதற்குள் சீதா அறைக்குள் வந்தாள். 'அம்மா! யாராவது வந்திருந்தாளா, என்ன? சத்தம் ஏதோ கேட்டதே!—ஏன் அம்மா இந்த நேரத்தில் படுத்திருக்கிறாய்?' என்று கேட்டுக் கொண்டே வந்தவள், இந்த மேஜையைப் பார்த்ததும் பிரமித்து நின்றாள். பிரமிப்புக்குக் காரணம் மேஜையின்மேல் பள பளவென்று ஜொலித்த கத்திதான்! போகிற அவசரத்தில் அந்த ஸ்திரீ அதை எடுத்துப் போக மறந்து விட்டாள். நானும் கவனியாமல் இருந்துவிட்டேன். 'அம்மா! இது ஏதம்மா கத்தி? இதன் பிடி வெகு விசித்திரமா யிருக்கிறதே?' என்று கத்தியை எடுக்கப் போனாள் சீதா. எனக்கு ஒரே திகிலாய்ப் போய்விட்டது. 'வேண்டாம், சீதா! வேண்டாம்! அந்தக் கத்தியைத் தொடாதே!' என்றேன். என்னுடைய குரலின் படபடப்பைக் கவனித்த சீதா கத்தியைத் தொடாமல் என் முகத்தை உற்றுப் பார்த்தாள். இதற்குள் மறுபடியும் மாடிப்படி ஏறும் சத்தம் தட தட வென்று கேட்டது. கத்தியை மறைத்து வைக்கலாமா, அறைக் கதவைத் தாளிடச் சொல்லலாமா என்று யோசிப்பதற்குள் அந்த ஸ்திரீ புயற்காற்று புகுவதைப் போல் அறைக்குள் புகுந்தாள். நேரே மேஜையருகில் வந்து கத்தியை லபக்கென்று எடுத்துத் தோல்பெட்டியில் வைத்துக் கொண்டாள். பிறகு சீதாவின் முகத்தையும் என் முகத்தையும் இரண்டு மூன்று தடவை மாறி மாறிப் பார்த்தாள். 'ராஜம்மா! இந்தப் பெண் யார்? உங்கள் குமாரியா?' என்று கேட்டாள். 'ஆமாம்' என்றுசொன்னேன். உடனே சீதாவை அவள் கட்டிக்கொண்டு உச்சிமுகந்து கன்னத்திலும் ஒரு முத்தம் கொடுத்தாள்! 'கடவுள் உன்னை நன்றாக வைக்கட்டும்! ஆண் பிள்ளைகளின் கொடுமையிலிருந்து உன்னைக் காப்பாற்றட்டும்!' என்றாள். பிறகு என்னைப் பார்த்து 'ராஜம்! நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும்! ஜாக்கிரதை!' என்று சொல்லி விட்டு மறுபடியும் அறையை விட்டுச் சென்றாள். அவள் காலடிச் சத்தம் மறைந்ததும் சீதா என் அருகில் வந்து, 'இது யாரம்மா இந்தப் பைத்தியம்!' என்று கேட்டாள். 'அப்படிச் சொல்லாதே, சீதா! இவள் பைத்ய மில்லை. ரொம்ப நல்ல மனுஷி. இவளுக்கும் எனக்கும் வெகு காலைய சிநேகிதம்' என்றேன். 'சிநேகிதம் என்றால் நான் பார்த்ததே கிடையாதே!' என்றாள் சீதா. 'நீ பிறப்பதற்கு முன்னால் இவளும் நானும் ரொம்ப சிநேகிதமாயிருந்தோம். அப்புறம் பரோலுக்கு இவள் குடி போய் விட்டாள். அதிகமாக இந்தப் பக்கம் வர முடிவதில்லை' என்றேன். பொய்தான் சொன்னேன். என்னவோ அப்படிச் சொல்ல வேண்டும் என்று தோன்றியது......"

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கிட்டாவய்யர், தம் மனதிற்குள், "இது மட்டுந்தானா பொய்! இத்தனை நேரம் இவள் சொல்லிக் கொண்டிருந்த தெல்லாம் பொய்தான்! பாவம்! சீதாவுக்காகக் கணவனுக்குத் தெரியாமல் பணம் சேர்த்து வைத்து விட்டு இந்தக் கதையைக் கற்பனை செய்திருக்கிறாள்!" என்று எண்ணிக் கொண்டார். (தொடரும்)

பட்டபாடு போதும்



ஜெயமணி

"நான் விமானத்தில் இந்தியாவுக்குச் செல்லுகிறேன். என்னிட மிருக்கும் படங்களை யெல்லாம் எடுத்துச் செல்ல முடியவில்லை. சுமார் அறுபது எழுபது படங்களுக்கு மேல் இருக்கின்றன. அருமையான படங்கள். பல வருஷங்களாகச் சேகரித்த அபூர்வமான படங்கள். அவைகளை யெல்லாம் உங்களிடம் கொண்டு வந்து தருகிறேன். என்னுடைய ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார் பாங்கி ஏஜண்டு ஸ்ரீமான் லிங்கம்.

இதைக் கேட்டதும் சிவக்கொழுந்துப் பிள்ளைக்கு உண்டான ஆத்திரம் கொஞ்ச நஞ்சமல்ல. "வேண்டாம், வேண்டவே வேண்டாம்" என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பதுபோல் பதில் கூறிவிட்டார் பிள்ளை.

லிங்கத்துக்கு ஆச்சரியமாக இருந்தது. தமக்குப் படங்கள் வேண்டாம் என்று சிவக்கொழுந்துப் பிள்ளை கூறியதில் கூட அவருக்கு அவ்வளவு ஆச்சரியமில்லை. ஆனால், பிள்ளை ஏன் உள்ளூற அவ்வளவு ஆத்திரப் படுகிறார் என்பதுதான் லிங்கத்துக்குப் புரியவில்லை!

"சொல்லுகிறேனே என்று வித்தியாசமாக நினைக்காதீர்கள். என் படங்களுக்கு நீங்கள் கிரயம் எதுவும் கொடுக்க வேண்டாம். எந்தப் பண்டமாயினும் பாத்திரம் அறிந்து கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கொள்கை. உங்களுடைய பங்களாவின் சுவர்களில் ஒரு படம்கூட இல்லை, பார்த்தீர்களா? வீட்டுக்கு லட்சுமி களையாக இருப்பது படங்கள்தான்" என்று லிங்கம் சிறிய பிரசங்க மொன்று செய்துவிட்டு, "என்ன ஸார், நான் சொல்லுவது சரியில்லையா?" என்றார் என்னைப் பார்த்து.

படங்களின் விஷயத்தில் சிவக்கொழுந்துப் பிள்ளையின் மனோ நிலை எனக்கு நன்றாகத் தெரியுமாதலால், லிங்கம் கேட்ட கேள்விக்கு நான் பதில் எதுவும் சொல்லவில்லை.

பாங்கி ஏஜண்டு கூறிய ஒவ்வொரு வார்த்தையும் பிள்ளையின் ஆத்திரத்தை உந்திக்கொண்டே உச்ச நிலைக்குக் கொண்டு வந்து விட்டது!

"நீங்கள் உங்களுடைய படங்களுடன் பாங்கியிலுள்ள பணத்தைக் கொட்டிக் கொடுத்தாலும் எனக்கு அவை வேண்டாம். இப்போது புரிந்ததா? சுகமாக ஊருக்குப் போங்கள். என்னையும் இங்கு சுகமாக இருக்க விடுங்கள்" என்று கூறிவிட்டுப் பிள்ளை தமது 'வாக்கிங் ஸ்டிக்'கை எடுத்துக்கொண்டு எழுந்திருக்கவே, லிங்கம் ஒன்றும் புரியாது பேசாமல் எழுந்து சென்று விட்டார்.

அவர் வாசற் பக்கம்கூடச் சென்றிருக்க மாட்டார்; அதற்குள் சிவக்கொழுந்துப் பிள்ளை, "இவனுக்கு எவன் பாங்கி ஏஜண்டு உத்தியோகம் கொடுத்தவன்? ஆளைப் பாருங்கள்; இனாம் கொடுக்க வந்துவிட்டான், பெரிய பிரபுவைப் போல!" என்று லிங்கத்தின் காதில் விழும்படி உரக்கக் கத்தினார்.

பிள்ளையின் ஆத்திரம் அடங்க வெகு நேரம் ஆயிற்று!

* * *

படங்களில் விருப்பம் இராதவர்கள் யாருமே இல்லை. மத சம்பந்தமான படங்களில் பலருக்கு விசேஷப் பிரேமை இருக்கும். மற்றும் பலருக்குத் தேசியத் தலைவர் திலகங்களின் படங்களினால் வீடுகளை அலங்கரிப்பதில் தனி உற்சாகம் இருக்கும். இயற்கைக் காட்சிகளைச் சித்திரிக்கும் படங்களைக் கண்டு பரவசம் அடைவோரும் ஏராளமாக இருக்கின்றனர். வரிசை வரிசையாக நானாவிதக் காலண்டர்களையும், பலவிதத் தோற்றங்களில் தங்களுடைய சொந்தப் போட்டோக்களையும் சுவரில் தொங்கவிட்டு ஆனந்தம் அடைவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். சுவரில் காணப்படும் படங்களைக் கொண்டு அவரவர்களின் மனப் போக்கைக்கூட ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

ஆனால், பொதுவாகப் படங்களையே முற்றிலும் வெறுப்பவர்கள் இவ்வுலகில் யாராவது இருக்க முடியுமா? இருக்க முடியாது என்றுதான் சொல்ல வேண்டும்.

எனினும் எல்லாவற்றுக்கும் விதிவிலக்கு இருப்பதுபோல் மேற்படி விதிக்கும் ஒரு விலக்கு உண்டு! அதாவது இந்தப் பூவுலகில் படங்களையே—அவை எத்தகைய படங்களாயினும்—அடியோடு வெறுப்பவர் ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் ஸ்ரீமான் சிவக்கொழுந்துப் பிள்ளையே! ஏன், படங்களைக் கண்டாலே அவர் நடுங்குவார்!

இருந்தாலும் ஒரு விஷயம். படங்களை வெறுப்பது சிவக்கொழுந்துப் பிள்ளையின் பிறவிக் குணமல்ல. படங்கள் என்றால் அவருக்கு உயிராக இருந்த காலம் உண்டு. ஆனால் அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட சில அசாதாரண அனுபவங்களே அவரை அவ்வாறு படங்களை அடியோடு வெறுக்கும்படி செய்துவிட்டன!

படங்களைப் பற்றி யாராவது பேசினால் கூட, அவரைத் தமக்கு விரோதி என்று கருதும் அளவுக்குப் பிள்ளையின் மனம் வெறுப்படைந்து வெதும்பிக் கிடந்தது!

* * *

பல வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம்:


சிவக்கொழுந்துப் பிள்ளை மலாயா ரப்பர்த் தோட்டம் ஒன்றில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்தார். நல்ல சம்பளத்துடன் இதர வருமானங்களுக்கும் வழியிருந்தது.

வீர இளைஞன் பகவத் சிங் தூக்கு மேடையில் தனது உயிரை அர்ப்பணம் செய்து சில மாதங்களே ஆகியிருந்தன. வீர ஸ்வர்க்கமடைந்த அந்தத் தியாகியின் படமொன்று நமது பிள்ளையின் கைக்கு வந்து சேர்ந்தது. படங்களில் மிகுந்த பிரேமை கொண்ட பிள்ளை, அந்தப் படத்தையும் மற்றப் படங்களுடன் சுவரில் மாட்டியிருந்தார்.

மலாயா ரப்பர்த் தோட்ட மானேஜர்களான ஆங்கிலேயர்கள், தங்களிடம் வேலை பார்க்கும் இந்தியச் சிப்பந்திகளின் எத்தகைய தவறுகளையும் பொறுத்துக் கொண்டு மன்னித்துவிடுவார்கள். ஆனால் சிப்பந்திகள் தேசபக்தி என்ற 'பாவ'த்துக்கு மாத்திரம் ஆளாகிவிடக் கூடாது! ஆங்கில மானேஜர்களின் அகராதியில் மன்னிக்க முடியாத குற்றம் இந்தியர்களின் தேசபக்திதான்!

கதர் உடுத்திக் கொள்ளுவது, அரசியல் சம்பந்தமாக விவாதிப்பது போன்ற காரியங்களில் ஈடுபடுவோர் தோட்டங்களில் சில நாட்கள்கூடக் காலம் தள்ள முடியாது. இந்தியாவிலிருந்து தேசியப் பத்திரிகைகளைத் தருவிப்போர்கூட மானேஜருக்குத் தெரியாமல் இரகசியமாகத்தான் தருவித்து வாசிப்பார்கள்!

சிவக்கொழுந்துப் பிள்ளைக்கு அவ்விஷயங்களெல்லாம் தெரியும். இருந்தாலும் தம்முடைய வீட்டுக்குள் இருக்கும் படத்தை மானேஜர் எங்கு பார்க்கப் போகிறார் என்று நினைத்து விட்டார்.



அத்தகைய விஷயங்களை அறிந்து வரத் தோட்ட மானேஜருக்குக் கையாட்கள் இருக்கின்றனர் என்பது பிள்ளைக்கு எப்படித் தெரியும்? அந்தப் பேர்வழிகள் மேற்கொண்டு இராத கதைகளையும் சேர்த்துக் கோள் சொல்லுவர் என்பதும் அவருக்குத் தெரியாது.

பாவம், பிள்ளையின் பிழைப்புக்கு வந்தது ஆபத்து!

மானேஜர் பிள்ளையைக் கூப்பிட்டு, சம்பளத்தைக் கணக்குத் தீர்த்துக் கொடுத்ததுடன், இருபத்து நாலு மணி

நேரத்தில் தோட்டத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று உத்தரவிட்டார்!

அத்தகைய 'குற்றவாளி'யைத் தோட்டத்தில் வைத்துக் கொண்டிருந்தால் என்ன ஆபத்து நேருமோ என்பது ஆங்கிலேயரான அந்த மானேஜரின் பீதி!

* * *

சிவக்கொழுந்துப் பிள்ளை சமீபத்திலுள்ள நகருக்கு வந்து சேர்ந்தார். வந்த



வேளை நல்ல வேளைதான். ஏனென்றால் கையிலிருந்த தொகையைக் கொண்டு வியாபாரம் செய்ததில் அவருக்கு ஏராளமான லாபம் கிடைத்தது. சில வருஷங்களில் செல்வவந்தராகிப் பிராபல்யமும் அடைந்தார்.

அந்த நகரிலுள்ள சிவன் கோவிலுக்குப் பிள்ளை 'டிரஸ்டி'யாக நியமிக்கப்பட்டபோது, அவருக்கு உண்டான சந்தோஷம் அற்ப சொற்பமன்று. 'டிரஸ்டி'யாக நியமிக்கப்பட்ட பின் அவர் செய்த முதலாவது சீர்திருத்தம் என்னவெனில், கோவிலின் முன் புறத்திலுள்ள பிரதான மண்டபத்தை ஏராளமான படங்களால் அலங்கரித்ததுதான்.

சென்ற யுத்தத்துக்கு முன் பண்டித ஜவாஹர்லால் நேரு மலாய் நாட்டுக்கு விஜயம் செய்தபோது, சிவக்கொழுந்துப் பிள்ளையின் பெருமுயற்சியால் மேற்படி கோவிலுக்கும் வந்தார். எத்தனையோ அலுவல்களுக் கிடையே மாபெரும் தலைவரான ஜவாஹர்லால்ஜி தமது கோரிக்கைக்கு இணங்கிக் கோவிலுக்கு வந்தது பற்றிப் பிள்ளைக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

பண்டித நேருவும் மற்றும் பல பிரமுகர்களும் சுவாமி தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி வருகையில், நமது தலைவரின் கண்கள் நாலாபுறங்களிலும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த படங்களை நோக்கின. அந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடச் சிவக்கொழுந்துப் பிள்ளைக்கு மனமில்லை.

எனவே, "இவர்தான் விக்னேசுவரர், இவர்தான் சுப்பிரமணியர், இவர்தான் பராசக்தி, இவர்தான் மகாவிஷ்ணு" என்று படங்களை ஒவ்வொன்றாகப் பண்டித நேருவுக்குச் சுட்டிக் காட்டிக் கொண்டே வந்தார். அவ்வாறு சொல்லிக்கொண்டே வந்த பிள்ளை, குறிப்பிட்ட ஒரு படத்துக்கு அருகில் வந்ததும் திடீரென்று மென்று விழுங்கினார். அந்தப் படத்தைப் பற்றி எதுவும் சொல்லாமல், அதற்கு அடுத்த படத்தைச் சுட்டிக் காட்டி ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.

உடனே ஜவாஹர்லால்ஜி, "இந்த ஈசுவரனைப் பற்றித் தாங்கள் எதுவும் சொல்லவில்லையே? இவரும் நீங்கள் பூஜை செய்யும் கடவுள்தானே?" என்று கேட்டுப் பிள்ளையைத் திக்குமுக்காடும்படி செய்து விட்டார்.

பிள்ளைக்கு என்ன பதில் சொல்லுவதென்று தோன்றவில்லை. பக்கத்திலிருந்தவர்கள் சிரித்தது பிள்ளையின் சங்கடத்தை இன்னும் அதிகப்படுத்தியது.

"உங்களை அடிமை கொண்டு ஆண்டவரும் இந்தக் கடவுளுக்குத் தகுந்த ஸ்தானம்தான் கொடுத்திருக்கிறீர்கள்" என்று பண்டித நேரு மேலும் கூறியதும், அங்கிருந்தவர்களுடைய சிரிப்பின் எதிரொலியால் மண்டபம் முழுதும் கிடுகிடுத்தது!

பிள்ளையின் முகம் மாத்திரம் வெட்கத்தினால் வேதனைக்கு உள்ளாயிற்று.

அத்தனை பேருக்கு மத்தியில் தாம் அவமானப் படுவதற்குக் காரணமாக

இருந்த அந்தப் படத்தை மறுநாளே பிள்ளை அப்புறப்படுத்தி விட்டார்.

ஆறாம் ஜார்ஜ் மன்னர் தம்பதிகளின் படம்தான் அது!

* * *

மலாய் நாட்டிலே ஜப்பானியரின் ஆட்சி நடந்த காலத்தில், சிவக்கொழுந்துப் பிள்ளை தம்முடைய பங்களாவில் ஜப்பான் சக்கரவர்த்தியின் படமொன்றை வைத்திருந்தார். இந்திய தேசியத் தலைவர்களின் படங்களுக்குக் கீழே அந்தப் படத்தையும் மாட்டியிருந்தார்.

ஜப்பான் சக்கரவர்த்தி மீது தமக்குள்ள பக்தியை ஜப்பானிய அதிகாரிகள் மெச்ச வேண்டும் என்பது பிள்ளையின் எண்ணம்.

ஆனால், பிள்ளையின் எண்ணத்துக்கு நேர்மாறாகக் காரியம் நடந்து விட்டது! அதாவது அவருடைய பங்களாவுக்கு வந்த ஜப்பானிய ராணுவ அதிகாரி ஒருவருக்கு மேற்படி விஷயம் மிகுந்த கோபத்தை உண்டு பண்ணிவிட்டது!

இரண்டாவது மகா யுத்தம் முடிந்த பின் நிலைமை ஓரளவு மாறிவிட்டதெனினும், முன்பெல்லாம் ஜப்பானியர்களுக்கு ஜப்பான் சக்கரவர்த்திதான் நடமாடும் கடவுள். ஜப்பானியப் பத்திரிகைகள் கூட வருஷத்துக்கு ஒரு முறைதான் அதாவது சக்கரவர்த்தி பிறந்த தினத்தன்று மாத்திரமே அவரது படத்தைப் பிரசுரிக்க அனுமதிக்கப்படுவது வழக்கம். மற்ற நாட்களில் அந்தப் படத்தைப் பிரசுரிப்பது அபசாரமாகக் கருதப்படும்

ஜப்பானியர்கள் தங்களுடைய சக்கரவர்த்தியைப் பற்றிக் குறிப்பிடும்போது பலதடவை தலை வணங்குவார்கள்.

எனவே, அவர்களுடைய 'கடவு'ளுக்குப் பிள்ளையின் பங்களாவில் உயர்ந்த ஸ்தானம் கொடுக்காமல் மற்றப் படங்களுக்குக் கீழே அதை வைத்திருந்தது அந்த அதிகாரிக்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

ராணுவ வெறி பிடித்த ஜப்பானியர்களுக்குக் கோபம் வந்து விட்டால் அவர்கள் ஒரு தனி பாஷையில் பேசுவார்கள்! அவர்களுக்கு அது மிக சகஜமான விஷயம்! மேற்படி அதிகாரி சிவக்கொழுந்துப் பிள்ளைக்கு அந்த பாஷையில் புத்தி புகட்டியதால், பிள்ளையின் இரண்டு கன்னங்களும் வீங்கி விட்டன!

படம் என்றாலே சிவக்கொழுந்துப் பிள்ளை ஏன் எரிந்து விழுகிறவர் ஆனார் என்பது இப்போது விளங்குகிறதல்லவா?

காலக்ஷேபம்

கேள்வியும் பதிலும்

ஹோட்டலில் சாப்பிட்டவர் (வாசலுக்கு வந்து ஹோட்டல் சொந்தக்காரரிடம்):—ஸார், இது என்ன அக்கிரமம்! கொஞ்ச நாழிகைக்கு முன் நான் இங்கே வைத்து விட்டுப் போன குடையைக் காணவில்லையே!

ஹோட்டல் சொந்தக்காரர் :—நல்ல வேளை! இப்பொழுது மழை நின்று விட்டது, போங்கள் !

★

அவர் யார் ?

குதிரைப் பந்தய மைதானத்துக்கு வெளியே ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். அப்பொழுது ஒருவர் வாசலில் டிக்கட் வசூலிப்பவரைக் கவனியாமல் 'விடுவிடு' என்று பந்தய மைதானத்துக்குள் நுழைந்தார்.

டிக்கட் கலெக்டர் :—ஸார், உங்கள் டிக்கட் எங்கே?

அவர் :— நான் பஞ்சகல்யாணி என்னும் பந்தயக் குதிரையின் டிரைவர்!

டிக்கட் கலெக்டர்:—சரி, போங்கள் !

இன்னொருவர்:—நான் பஞ்சகல்யாணியின் சொந்தக்காரன் !

டிக்கட் கலெக்டர்:—அப்படியா? சரி, போங்கள் !

ஒரு பெரியவர் இதை யெல்லாம் தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந்துவிட்டு வேகமாக உள்ளே நுழைந்தார்.

டிக்கட் கலெக்டர்:—ஸார், நில்லுங்கள் ! டிக்கட் எங்கே? நீங்கள் யார்?

பெரியவர்:— நான் ...... நான் ....
நான்தான் பஞ்சகல்யாணி!

★

தேச சேவை

ஒரு சோல்ஜர், தனக்குக் கொடுக்கப் படும் ஆகாரத்தில் கல்லும் மண்ணும் கலந்திருந்ததாக ராணுவ அதிகாரிகளிடம் புகார் செய்தான்.

ராணுவ அதிகாரி :—இந்த மாதிரியான புகாருடன் என்னிடம் வராதே! நமது தாய் நாட்டுக்காகப் போராடும் சேவையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்; ஞாபகமிருக்கட்டும்.

சோல்ஜர் :—சரிதான், ஸார்! ஆனால் அதற்காக நான் நமது தாய்நாட்டையே சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியுமா, என்ன ?

காரணம் சரிதான் !

"ராமுவும் சரஸாவும் இணைபிரியாக் காதலர்களா யிருந்தார்களே, இப்பொழுதெல்லாம் அவர்களைச் சேர்ந்தாற் போலப் பார்க்க முடிகிறதே யில்லையே! பிரிந்து விட்டார்களா?"

"இல்லை; அவர்கள் இப்போது காதலர்கள் இல்லை......!"

"ஏன், என்ன காரணம்?"

"அவர்களுக்குக் கல்யாணமாகிவிட்டது!"

★

நல்ல ஊதல்!

பையன் :—மாமா, நீங்கள் எனக்கு வாங்கிக் கொடுத்த ஊதல் ரொம்ப நல்ல ஊதல்! அதை ரொம்ப ஜாக்கிரதையாக வைத்திருக்கிறேன், மாமா !

மாமா :—அப்படியா, ரொம்ப சந்தோஷம். அதை நீ வெளியே எடுக்கிறதே யில்லையா ?

பையன் :— ஊஹூம்! நான் அந்த ஊதலை வெளியிலே எடுக்காம லிருப்பதற்காக அம்மா எனக்குத் தினந்தோறும் ஓரணா கொடுத்து விடுகிறாள்!.

★

ஏற்பட்ட பலன் !

பெரியவர் :—நீங்கள் சிக்கன முறையை அனுஷ்டிக்கப் போவதாகக் கூறினீர்களே, அது சம்பந்தமாக என்ன செய்தீர்கள் ?

நண்பர் :—சிக்கனமாக வாழவேண்டிய தன் அவசியத்தைப் பற்றி என் மனைவியிடம் ஒரு பிரசங்கம் செய்தேன்.



பெரியவர் :—பலன் ஏதாவது ஏற்பட்டதோ, இல்லையோ?

நண்பர் :—ஆகா, ஏற்படாமலென்ன? பேஷாய் ஏற்பட்டது! கடைசியில் நான் காப்பி குடிப்பதை நிறுத்தும்படியாயிற்று!

துப்பறியும் காதலன்

"ஆஜீ"

பானு [illegible] அன்று காலை ஏழு மணிக்கே படுக்கையை விட்டு எழுந்து விட்டான். இவ்வளவு முன்னதாக அவன் ஒரு நாளும் எழுந்ததில்லை. அன்று எழுந்ததற்குக் காரணம் படுக்கையின்மேல் விரித்தவாறு கவிழ்ந்து கிடந்த புத்தகந்தான்; இன்னும்-விளக்க வேண்டுமென்றால் புத்தகத்தின் சொந்தக்காரிதான் காரணம்!

பானு அவளைப் பார்த்ததில்லை. ஆனால் அவளைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் அவன் யூகித்துக் கொண்டான். 'ஷெர்லக் ஹோம்' என்ற பிரபல துப்பறிபவரைப் பற்றிய கதைகளை நன்றாய் வாசித்தவனுக்கு இந்தச் சக்தி யில்லாமலா போய்விடும்?

முதலாவது அவன் யூகித்துக்கொண்டது, புத்தகத்தின் சொந்தக்காரரான நபர் ஒரு பெண் என்பது. புத்தகத்தின் முதல் பக்கத்தில் எழுதப்பட்டிருந்த 'கனகாம்பரம்' என்ற பெயர் அதை உணர்த்திற்று. கனகாம்பரம் ஓர் அழகிய பெண் என்பது பானு யூகித்தறிந்த இரண்டாவது விஷயம். ஒரு பெண்ணின் அழகும் அவளுடைய எழுத்தின் அழகும் எதிரிடை விகிதத்தி லிருக்கும் என்பது பானுவின் சொந்த அனுபவம். தன் கலாசாலை வாழ்க்கையில் அழகிய அச்சுப் போன்ற எழுத்துக்களை யுடைய பெண்ணின் அவலட்சணத் தோற்றங்களையும் கண்ணைப் பறிக்கும் அழகிகளான பெண்களின் அஷ்டகோணலான எழுத்துக்களையும் பலதடவை பார்த்ததின் பயனாக, அவன் இந்த உண்மையைக் கண்டுபிடித்திருந்தான். 'கனகாம்பரம்' என்ற வார்த்தையை வாசிக்க அவன் பட்ட பாடு ஒன்றே போதாதா, அவள் மகா அழகி என்பதைக் காட்ட?



அவள் ஒரு லேடி டாக்டரா யிருக்கலாம். இல்லையென்றால் நிச்சயம் அவள் பின்னால் ஒரு லேடி டாக்டராகலாம். கனகாம்பரம் சமூக சேவையிலும் ஆர்வம் கொண்டவள் என்பதைப் புத்தகத்தின் தலைப்பு எடுத்துக் காட்டிற்று. "கிராம வாழ்வே தேச வாழ்வு" என்ற தலைப்புடைய அந்தப் புத்தகத்தை மனங்கொண்டு விலை கொடுத்து வாங்கி அதில் தன் பெயரையும் ஆசையுடன் பொறிக்க வேண்டுமானால் அவள் எத்தகைய தேச சேவியா யிருக்கவேண்டும்!

அவள் சதா சர்வ காலமும் தேச சேவையிலேயே ஈடுபட்டிருந் திருக்க வேண்டுமாதலால், புத்தகத்தைப் பிரித்துப் பார்க்கவும் அவளுக்கு நேரமில்லை என்பதை அந்தப் புத்தகத்தின் புத்தம் புதிய தோற்றம் எடுத்துக் காட்டியது. எனவே ஒரு சிலரைப்போல் "தேச சேவை செய்ய வாரீர்!" என்ற சினிமாப் பாட்டுப் பாடுவதோடு அவளுடைய சேவை முடிந்திராதல்லவா?

அது எப்படியிருந்தாலும் அவள் கட்டழகி என்பதில் சந்தேகமில்லை. அவளுடைய கையெழுத்தின் அலங்கோலந்தான் அந்த உண்மையைக் கோடிட்டுக் காட்டுகிறதே!

இப்படி யெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே தூங்கிய பானு, இரவு முழுவதும் ஒரே சொப்பனங்களாகக் கண்டான். அந்தச் சொப்பனங்கள் அனைத்தையும் அன்றே எப்படியாவது உண்மைச் சம்பவங்களாக்கி விடவேண்டுமென்ற துடியால், அவன் உடனே எழுந்து தன்னை அலங்கரித்துக் கொண்டான்.

அன்றைக்கு முதல் நாள் சாயந்திரம் 'டாஸ் அன் கோ'வில் 'டூத் பேஸ்ட்' வாங்கிக்கொண்டு திரும்புகையில் கடைக்காரப் பையன், "ஸார்! புத்தகத்தை மறந்து வைத்து விட்டுப் போகிறீர்களே!" என்று சொல்லி, பானுவின் கையில் அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான். "இது என்னுடைய தல்ல!" என்று திருப்பிக் கொடுக்கப் போன பானு, முதல் பக்கத்தில் எழுதியிருந்த 'கனகாம்பரம்' என்ற பெயரைப் பார்த்ததும் அவள் மீது அந்த க்ஷணமே காதல் கொண்டு விட்டான். அப்புறம் புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்க முடியுமா? தானே கனகாம்பரத்தைக் கண்டு


பிடித்து, அவளிடம் அந்தப் புத்தகத்தையும், அத்துடன் தன் இருதயத்தையும் ஒப்படைத்து விடுவதென்று தீர்மானித்தான்.

வீட்டை விட்டுக் கிளம்பி ஒரு தெரு முழுவதையும் கடந்து இன்னொரு தெருவுக்கு வந்த பிறகுதான், தான் எந்தத் திசையில் திரும்புவது என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது என்று பாலு யோசித்தான். 'கனகாம்பரத்தின் வீட்டுக்குப் போகும் வழி' என்று ரஸ்தாவில் கை காட்டி ஒன்றையும் காணோம். ஆகவே, மீண்டும் 'டாஸ் அன் கோ'வுக்குப் போய், புத்தகம் தன்னுடைய தல்லவென்பதைச் சொல்லி, அதைப் போக்கடித்த பெண் யார் என்பதை விசாரித்து அறியலாமென்று யோசித்தான். ஆனால் அடுத்த கணமே அவன் அந்த யோசனையைக் கை விட்டு விட்டான். புத்தகம் நம்முடைய தல்லவென்றால், அதைப் பிடுங்கிக் கொண்டு அவர்கள் நம்மை அனுப்பி விடுவார்கள். அப்புறம் என்ன காரணத்தைச் சொல்லி அவளுடைய வீட்டுக்குப் போவது?

யாருடைய உதவியுமில்லாமல் கனகாம்பரத்தின் வீட்டைக் கண்டுபிடிக்க முடியா விட்டால் நாம் ஷெர்லக் ஹோம் கதைகளை வாசித்துத்தான் என்ன பயன்?—இவ்வாறு தனக்குள் சொல்லிக் கொண்டே, அவன் தன் மனம் போனபடி நடந்தான்.

★

சிக்கலான சமயங்களில் உண்மையை அறிய, அந்தப் பிரபல துப்பறிபவர் தமது சுங்கானின் உதவியை நாடுவதுண்டு. சுங்கானை வாயில் வைத்து இரண்டு இழுப்பு இழுத்துப் புகையை விட்டால்தான் அவருடைய மூளை ஜரூராக வேலை செய்யுமாம். பாலுவுக்குச் சுங்கான் அவசியமில்லை. ஒரு கப் காப்பி சாப்பிட்டு விட்டால் போதும்—'சரி, ஒரு கப் காப்பி சாப்பிடுவோம். நாலு எட்டிலே கனகாம்பரத்தின் வீட்டை எட்டிப் பிடித்து விடுவோம்' என்று எண்ணியவனாய் அவன் பக்கத்திலிருந்த ஹோட்டலுக்குள் உடனே நுழைந்தான்.



ஒரு கப் காப்பி உள்ளே சென்றது. அப்போதும் பாலுவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவன் 'என்ன செய்யலாம்?' என்று தலையைச் சொறிந்து கொண்டிருந்தபோது, அவனுடைய நண்பன் தனசேகரன் ஹோட்டலுக்குள் வந்தான். அவனைக் கண்டதும், "டேய், தனம்!" என்றான் பாலு. தனசேகரன் வந்து பாலுவின் முன்னால் உட்கார்ந்தான். பட்சணங்களெல்லாம் வரவழைக்கப்பட்டதும் பாலு அவனைப் பார்த்து, "டேய், சும்மா தின்றுவிட்டுப் போய்விடலாம் என்று நினைக்காதே! காரியத்தோடு தான் இந்த உபசாரமெல்லாம். எனக்கு நீ ஒரு யோசனை சொல்ல வேண்டும், தெரியுமா?" என்றான்.

"என்ன?" என்று கேட்டான் தனசேகரன்.

பாலு விஷயத்தைச் சொன்னான்.

"கனகாம்பரம் என்ற பெயரை அந்தப் புத்தகத்தில் எழுதியது அவளுடைய காதலனாக இருந்தாலும் இருக்கலாமல்லவா?" என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பி வைத்தான் தனசேகரன்.

பாலுவின் முகம் சுண்டியது. "நீ ஒரு மடையன்டா! ஆறுதலாக ஏதாவது சொல்லுவாய் என்று பார்த்தால் எரிகிற தீயில் எண்ணெய் விட்டமாதிரி அபசகுனமாகப் பேசுகிறாயே!—நீ சாப்பிட்ட டிபனுக்கு நான் காசு கொடுக்கப் போகிறதில்லை! உண்ட வீட்டுக்கு........." என்று மேலே பழமொழியை முடிக்கத் தெரியாமல் அவன் பல்லைக் கடித்தான். தனசேகரன் சிரித்துக் கொண்டே ஹோட்டலை விட்டு வெளியேறினான்.

★

துப்பறிபவர்கள் எடுத்துக் கொள்ளும் கருமங்களில் அடையும் வெற்றிக்கு நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு அவர்களுடைய மனோ சக்திதான் காரணம் என்றாலும் பத்து சத வீதமாவது தெய்வச் செயல் என்று சொல்லப்படும் அதிர்ஷ்டமும் உதவுகிறது என்பது நாவல் வாசித்தவர்கள் அறிந்த உண்மை. இந்த அதிர்ஷ்டம் பாலுவுக்கும் கிட்டியது. எங்கிருந்தோ வந்த கீழ்க்கண்ட சம்பாஷணை அவன் காதுக்கு எட்டியது.

"நான் பார்த்தேண்டா கனகாம்பரத்தை!"

"எங்கேடா?"

"பவானி பார்க்கில்தான்!

இதைக் கேட்டதும் பாலு பிரமை பிடித்தவன் போல் நெடுநேரம் நின்றான். கடவுள் தன்னுடைய காதலை ஆதரித்துத்தான் இவர்களை அனுப்பியிருக்கிறார், இந்த அசரீரி வாக்கை நாம் கேட்கும்படிச் செய்திருக்கிறார் என்று அவன் நம்பினான். உடனே அந்தச் சம்பாஷணையை நடத்திய இரண்டு பயல்களையும் உரசிக் கொண்டு ஓட்டமாய் ஓடினான். பார்க்கிலே யாரையும் காணோம். புற்றரையிலே ஒருவேளை உட்கார்ந்திருப்பாள் என்று ஒரு இடம் விடாமல் தேடினான். எங்கும் காணாமற் போகவே, 'அதற்குள் அவள் பார்க்கை விட்டு வெளியேறி விட்டாள் போலிருக்கிறது!' என்று எண்ணியவனாய்த் தலை தெறிக்க மறுபடியும் ஓட ஆரம்பித்தான். அப்படி ஓடுகையில் அவன் கையிலிருந்த புத்தகம் நழுவிக் கீழே விழுந்து விட்டது. அதை அவன் கவனிக்கவில்லை. தெருவில் அவனுடைய ஓட்டத்தை ஆதரிப்பதைப்போல் ஒரு லாரியும் ஒரு பிளஷரும் 'க்ரீச்' சென்று 'பிரேக்' போட்டு நின்றன. ஒரு சைக்கிள் விளக்குக் கம்பமொன்றின் மேல் மோதியது. இரண்டு சிறுவர்கள் உருண்டனர். ஒரு நாய் மிதிபட்டுக் கத்தியது. இரண்டு பெண்கள் வசை புராணம் பாடினர். சோடாவைக் குடிக்கப் புறப்பட்ட ஒருவர் தம்மை அபிஷேகம் செய்து கொண்டார். இப்படியாக ஊர் முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கி விட்டான் பாலு.



இந்தச் சமயத்தில்தான் திடீரென்று தன் கையில் புஸ்தகம் இல்லையென்பதை அவன் கண்டான். 'அடடா! என்ன பிசகு செய்துவிட்டோம்?' என்று திகைத்தான். ஆனால் அந்தத் திகைப்பு ஒரு கணம்தான். மறு கணம் தான் ஓடிவந்த திசையை மாற்றினான். அதாவது, மறுபடியும் பார்க்கை நோக்கி ஓடினான். உள்ளே நுழைந்ததும் அவன் கண்ட காட்சி சகிக்கக் கூடாததாயிருந்தது. தான் கைநழுவவிட்ட புஸ்தகத்தை ஒருவர் கையில் எடுத்து வைத்துத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்! அவருடைய பக்கத்தில் இன்னொருவர் நின்று அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்!

புஸ்தகத்தை வைத்திருந்தவருக்கு வயது நாற்பதுக்கு மேலிருக்கும். ஆகவே, அவர் கனகாம்பரத்தின் காதலனாக இருக்க முடியாது. 'ஒருவேளை அவளுடைய தந்தையாயிருக்கலாமோ? அப்படியிருந்தால் நமக்கு அதிர்ஷ்டந்தான்! அவர் பின்னாலேயே சென்று கனகாம்பரத்தின் வீட்டை அடைந்துவிடலாம்!' என்று எண்ணினான். ஆனால், அடுத்த நிமிஷம் அவர்களுக்குள் நடந்த கீழ்க்கண்ட சம்பாஷணை பாலுவின் நம்பிக்கையை உடைத்தெறிந்தது.

"எப்படி ஸார், இந்தப் புஸ்தகம் இங்கே வந்தது?" என்று கேட்டார் ஒருவர்.

"எந்தத் திருட்டுப் பயலாவது இங்கே போட்டிருப்பான்!" என்றார் இன்னொருவர்.

"என்ன புஸ்தகம் ஸார், அது?"

"புஸ்தகம் சுத்த 'யூஸ்லஸ்' ஸார்! இதைத் தொலைக்கப் போய்த்தான் நேற்று என் வீட்டுக்காரியிடம் ஏகப்பட்ட பேச்சு கேட்க வேண்டியிருந்தது!"

"ஏன் ஸார், இது உங்கள் சம்சாரத்திற்குப் பிடித்தமான புஸ்தகமோ?"

"என் சம்சாரத்திற்குப் புஸ்தகம் வாசிக்கிற வழக்கமே கிடையாது, ஸார்! விஷயம் வேறே! நேற்று நான் ஜவுளிக் கடைக்குப் புறப்படும்போது, அவள் தனக்கு ஜாக்கெட் துணி வாங்கிக்கொண்டு வரச் சொன்னாள். 'இன்ன கலரிலே வாங்கவேணும்' என்று ஒரு பேரும் சொன்னாள். பெண்கள் சொல்லுகிற கலர் பெயர் நம் மனசிலே தங்குகிறதா? அதனாலே அவள் சொன்ன பேரை இந்தப் புஸ்தகத்திலே குறித்து வைத்துக்கொண்டு கிளம்பினேன். வழியிலே 'டால் தன் கோ'விலே சோப் வாங்கும்போது இதை ஞாபக மறதியாக அங்கு வைத்துவிட்டேன். எந்தப் பயலோ இதை அடித்துக்கொண்டு போய் விட்டான். பிறகு, ஏதோ ஒரு நல்ல கலராகப் பார்த்து ஒரு துணியை வாங்கிக்கொண்டு போனேன். வீட்டுக்காரி பெரிய கூச்சல் போட்டாள்......!"

"உங்க சம்சாரம் சொன்ன கலர் என்னவோ!"

"அந்த இழவுதான் மறந்தே போச்சே! இந்தப் புஸ்தகத்திலே குறித்து வைத்திருக்கேன், ஸார்! இதோ பாருங்கோ, நேற்று எழுதினது அப்படியே இருக்கிறது. கனகாம்பரம் கலர், ஸார்!"

அவ்வளவுதான்; துப்பறியும் காதலனான பாலு கல்லாய்ச் சமைந்து நின்றான்!



வளரும் தமிழ்

இன்ப நிலைய வெளியீடுகள்

பண்டைத் தமிழர் வாழ்ந்த சிறப்பான வாழ்க்கை முறையை, ஆசிரியர் ம. பொ. சிவஞானம் சிலப்பதிகாரத்தை அரசியல் நோக்குடன் பார்த்து சிலப்பதிகாரமும் தமிழரும் என்ற நூலில் கூறுகிறார். பண்டைத் தமிழர்கள் திங்களையும் ஞாயிற்றையும் மழையையும் போற்றினார்கள். மங்கல விழாக்களில் நாட்டையும் நாட்டையாளும் மன்னனையும் போற்றினார்கள். அரசனைக் கடவுளாகவே மதித்தார்கள். ஆனால் அரசன் தவறிழைத்தால் புரட்சி செய்தார்கள். இதைப் போன்ற பல விஷயங்களைக்கூறி, சிலப்பதிகாரத்தில் காணும் சிறப்பான வாழ்க்கையை இன்று தமிழர் அடைய வேண்டும் என்கிறார். விலை: அணா 8.

ஸ்ரீ கிராமணியார் தம்முடைய தமிழன் குரல் என்ற மற்றொரு நூலில் தமிழகத்தில் தனியரசைக் காண வேண்டும் என்று கூறுகிறார். பண்டைக் காலத்தில் தமிழகம் இருந்த நிலையை வாசகர்களுக்குப் படம் பிடித்துக் காட்டி, பின்னர் இன்றைய நிலையையும் விவரிக்கிறார். கடைசியில் 'சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசு வேண்டுமென்பதே தமிழன் குரல்' என்று கூறி முடிக்கிறார். விலை ரூ. 2.

இன்ப நிலையத்தாரின் இன்னொரு வெளியீடு, மனித வாழ்க்கையின் துன்பத்தைச் சித்திரிக்கும் 'விடுதலையா ?' என்பது. தமிழ்ப் பேராசிரியர் திரு மு. வரதராசனாரின் சிறு கதைத் தொகுதி. பழந்தமிழ் நூல்களில் ஊறித் திளைத்த திரு வரதராசனார் புதுமைத் தமிழில் சிறு கதை எழுதி வளரும் தமிழுக்குத் தொண்டு செய்ய முன்வந்தது குறித்துப் பெரிதும் மகிழ்கிறோம். ஏழையின் ஏக்கத்தையும், பாட்டாளியின் பரிதாபத்தையும், முதலாளித்துவத்தின் மோசக் கருத்தையும் பற்றிச் சிந்தனையைத் தூண்டும் ஆறு சிறு கதைகள் இப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. பணக்காரர்களும் பாமரர்களும் மட்டுமின்றிப் பண்டிதர்களும் அவசியம் படித்துப் பார்க்க வேண்டும். விலை: ரூ. 1—8—0.

புதுமுறை வெளியீடுகள்

சென்ற வருஷ ஆரம்பத்தில் காந்தி மகான் தம்முடைய தள்ளாத வயதில் நவகாளியில் கிராமம் கிராமமாகச் சுற்றுப் பிரயாணம் செய்து, அங்கு மதவெறி மூண்டிருந்த மக்களுக்கிடையே அஹிம்சா தர்மத்தையும் அன்பு மதத்தையும் போதித்துக் கொண்டு வந்தார். மேற்படி சரித்திரப் புகழ் பெற்ற சமாதான யாத்திரையில் கலந்து கொள்ளக் கூடிய பாக்கியம் 'சாவி'க்குக் கிடைத்தது.

'சாவி' நவகாளிக்குப் போய்விட்டு வந்து தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகளைப் புதுமுறை வெளியீட்டார் தொகுத்து நவகாளி யாத்திரை என்ற புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

காந்தி மகானுடைய யாத்திரையைச் 'சாவி' இந்தப் புத்தகத்தில் வெகு ரசமாகவும் தெளிவாகவும் எழுதியிருக்கிறார்.

ஸ்ரீ சாம்ராஜ் எழுதிய அமுத கீதம் என்ற ஒரு சிறு கதைத் தொகுதியும் புது முறை வெளியீடாக வெளி வந்திருக்கிறது. நாமக்கல் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை இதற்கு முகவுரை எழுதியிருக்கிறார். விலை: ரூ. 1. புது முறை வெளியீடு, மாம்பலம், சென்னை.

வரப்பெற்றோம்

ஸ்ரீ கே. ஏ. காசிவிசுவநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு சுதந்திரம் என்ற பத்திரிகை பல வர்ணப் படங்களுடனும் சிறந்த கட்டுரைகளுடனும் திருச்செங்கோட்டிலிருந்து வெளிவந்திருக்கிறது. விலை: அணா 4.

விருதுநகரிலிருந்து வெளி வரும் தமிழ்த் தென்றல் என்ற மாதப் பத்திரிகையின் முத்தமிழ்ச் சித்திர மலர் ஒன்று கிடைக்கப் பெற்றோம். ரசிகமணி டி. கே. சி., கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ஸ்ரீ டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலிய அறிஞர்கள் பலர் எழுதிய ஏராளமான கட்டுரைகளும் கதைகளும் இதில் அடங்கியிருக்கின்றன. படங்களுக்கும் குறைவில்லை. விலை ரூ. 2.

'விபுலானந்தர் நினைவு மலர்'ஆக வெளி வந்திருக்கும் ஈழ மணியின் தை—மாசி இதழ் கிடைக்கப் பெற்றோம். தமிழ்ப்பேரறிஞரும் தவயோகியுமான சுவாமி விபுலானந்தருடைய வாழ்க்கை வரலாற்றையும் அவருடைய மேதையையும் தெரிந்து கொள்ள இந்த மலர் பெரிதும் உதவியாக இருக்கும்.



முனிவரின் தந்திரம்

பி. ஸி. பலராமன்

அந்த நகர் ராஜாவுக்குத் தம்மைத் தவிர வேறு யாரும் பணக்காரனாக இருக்கக் கூடாது என்று எண்ணம். அவர் தம்மிடத்திலுள்ள சாமான்களைப்போல் வேறு யாரிடமாவது இருக்கக் கண்டால் "ராஜாவும் பிரஜையும் ஒரே வஸ்துவை வைத்திருப்பதா? என்ன அநீதி!" என்று ஆத்திரப்படுவார். அந்த வஸ்துவை எப்படியாவது சூழ்ச்சி செய்து வாங்கிக் கொண்டு விடுவார்.

அந்த ராஜாவின் ராஜ்யத்தில் ஒரு முனிவர் இருந்தார். அவருக்கு ஒரே ஒரு மகள். அவளை உயிருக்கு உயிராக அவர் வளர்த்து வந்தார். அவருடைய அருமை மகளுக்குப் பிறந்த தினம் வந்தது. அவள் ரொம்ப நாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்த இரண்டு தங்கக் கிண்ணங்களை அந்தப் பிறந்த நாளுக்குப் பரிசாக வாங்கிக் கொடுத்தார் முனிவர். முனிவரின் மகள் அந்தத் தங்கக் கிண்ணங்களை எங்கே போனாலும் தன்னுடன் கொண்டு போவாள். படுக்கும்போது கூடக் கிண்ணங்கள் அவளுக்குப் பக்கத்தில் தான் இருக்கும்.

ஒரு நாள் ராஜா அந்தத் தெரு வழியாகக் குதிரைமேல் போகும்போது முனிவர் மகள் வைத்திருந்த தங்கக் கிண்ணத்தைப் பார்த்து விட்டார். ராஜாவுக்குக் கோபமும் துக்கமும், வெட்கமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டு வந்தன. "ஆ! இதென்ன அநீதி! நம்மிடம் இல்லாத ஒரு வஸ்துவை இந்த முனிவரது மகள் வைத்திருப்பதா? மந்திரி மதனரே! அந்தக் கிண்ணத்தை நம் அரண்மனை சேர்க்க என்ன வழி?" என்று மந்திரியைப் பார்த்துக் கேட்டார்.

மந்திரி சிறிது நேரம் யோசித்து விட்டு, "மகாராஜா! அந்த முனிவரின் மகளை நம் இளவரசருக்கு மணம் செய்து வைக்கத் தாங்கள் ஆசைப் படுவதாகச் சொல்கிறேன். முனிவர் அதை நிஜம் என்று நம்பித் தங்களைப் பார்க்க வேண்டும் என்று சொல்லுவார். 'ஒரு விருந்து ஏற்பாடு செய்து அரசரை அழைத்தால் அவர் வரக் காத்திருக்கிறார்' என்று சொல்லுகிறேன். அப்படியே செய்வார். தாங்கள் அவரை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் அந்தத் தங்கக் கிண்ணத்தில் தங்களுக்குப் பால் வைப்பார். பாலை அருந்திவிட்டுக் கிண்ணத்தை மடியில் மறைத்துக் கொண்டு வந்து விடுங்கள்!" என்றார்.

"ரொம்ப சரி, ரொம்ப சரி! மதி மிகுந்த மதனரே! அப்படியே செய்யும்" என்றார் ராஜா.

மந்திரி மதனர் நேரே முனிவரிடம் போய், "தங்களுடைய மகளை இளவரசருக்கு மணம் செய்து வைக்க அரசர் ஆசைப்படுகிறார். தங்கள் உத்தேசம் என்னவோ?" என்றார்.

முனிவருக்குச் சந்தோஷத்தினால் சிறிது நேரம் பேசக்கூட முடியவில்லை. மந்திரி மதனரின் யோசனைப்படி அவர் மறுநாளே விருந்துக்கு ஏற்பாடு செய்தார்.

குறிப்பிட்ட தினத்தில் முனிவரின் ஆசிரமத்துக்கு முன்னால் விருந்து ஆரம்பமாயிற்று. சொல்லி வைத்தபடி ராஜாவுக்கு மட்டும் அந்தத் தங்கக் கிண்ணத்தில் பால் வைத்திருந்தது. ராஜா மற்ற பக்ஷணங்களைச் சாப்பிடாமல் பாலை மட்டும் அவசர அவசரமாகக் குடித்துவிட்டுக் கிண்ணத்தைத் தம் மடியில் மறைத்து வைத்துக் கொண்டார். ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! அந்தச் சமயத்தில் முனிவரது கண்கள் ராஜாவைப் பார்த்து விட்டன. உடனே தம் ஏமாற்றத்தை எண்ணி வருந்தினார் அரசர். ஆனால் முனிவருக்கோ அவ்வளவும் சூழ்ச்சி என்று தெரிந்து விட்டது.

இருந்தாலும் என்ன செய்வார் முனிவர்? அரசர் திருடினார் என்று சொல்லத் தைரியம் வரவில்லை; அதற்காகக் கிண்ணத்தை விட்டு விடவும் அவருக்கு மனம் வரவில்லை.



சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்ற முனிவர் அவசர அவசரமாகத் தம் ஆசிரமத்துக்குள் போனார். தம் மகள் வைத்திருந்த இன்னொரு கிண்ணத்தை மறைத்து எடுத்துக் கொண்டுவந்து பழைய இடத்தில் உட்கார்ந்து கொண்டார்.

விருந்து முடிந்தது; எல்லோருக்கும் தாம்பூலம் கொடுக்கப்பட்டது. உற்சாகமான பேச்சுக்களும் கிளம்பின. இந்தச் சமயத்தில் முனிவர் எழுந்து, "பெரியோர்களே! எனக்குக் கொஞ்சம் மந்திர வித்தை தெரியும். அதில் ஒரே ஒரு வித்தையை இந்தச் சமயத்தில் செய்து காட்டினால் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள் என்று நம்புகிறேன்" என்றார்.

எல்லோரும் "பேஷாகச் செய்யுங்கள்!" என்றார்கள்.

முனிவர் தம் கையில் வைத்திருந்த தங்கக் கிண்ணத்தை எல்லோருக்கும் காட்டினார். "பெரியோர்களே! இந்தக் கிண்ணத்தை உங்களுக்கு எதிரில் இதோ என் மடிக்குள் வைத்துக் கொள்கிறேன். அடுத்த கணம் இதை வேறொருவர் மடியில் போய் இருக்கச் செய்யட்டுமா?" என்றார்.

அனைவரும் "சரி, சரி" என்று தலை ஆட்டினார்கள்.

"ஓம், மந்திரக் காளி! ஓம்—ஓம்—போ! ஓடிப்போய் ராஜாவின் மடியில் இரு!" என்று சொல்லி, கிண்ணத்தைத் தம் மடியில் வைத்து மறைத்தார் முனிவர். எல்லோரும் முனிவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். "பெரியோர்களே! இப்பொழுது அந்தக் கிண்ணம் நம் அரசரது மடியில் இருக்கிறது. வேண்டுமானால் மகா ராஜாவின் மடியைப் பாருங்கள், கிண்ணம் இருக்கும்!" என்றார் முனிவர்.

பாவம், ராஜா என்ன செய்வார்! அசட்டுச் சிரிப்புடன், "ஆம், ஆம்; இதோ இருக்கிறது!" என்று சொல்லிக் கிண்ணத்தை முனிவரிடம் எடுத்துக் கொடுத்து விட்டார்.

விருந்து முடிந்து எல்லோரும் போன பிறகு ராஜா முனிவரை நமஸ்கரித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். மந்திரி மதனரின் முகத்தையோ பார்க்கவே முடியவில்லை!



லால்குடி
பெண்கள் உயர்நிலைப்பள்ளி
உதவி நிதிக்காக

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

சங்கீதரத்ன ஸ்ரீ சௌடய்யா - பிடில்
கல்பாத்தி ராமனுதன் - மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் - கடம்

6-6-48 ஞாயிறு மாலை 6 மணிக்கு
லால்குடி போர்டு உயர்நிலைப் பள்ளியில்

சென்னை மாராமத்து இலாகா மந்திரி
கனம் பக்தவத்ஸலம் அவர்கள்
தலைமையில் நடைபெறும்.

★

டிக்கெட்டுகள் :
ரூ. 500, ரூ. 250, ரூ. 100
ரூ. 50, ரூ. 25, ரூ. 10

★

மைக் & ஒலிபெருக்கி
ஏற்பாடு : திருச்சி ரேடியோ
சேல்ஸ் & சர்வீஸ்

★

லால்குடி பெண்கள் கல்விக் கழகத்தார்
(Lalgudi Girls Education Society)

கல்யாணமா?

2000 டிசைன்களில் — பட்டுச் சேலைகள்
விலை ரூ. 15—0—0 முதல் ரூ. 600—0—0 வரை

பெனாரஸ், பெங்களூர், பெங்கால், கொள்ளேகாலம், ஆரணி, காஞ்சீபுரம் முதலிய ஊர்களில் நெசவுக் கலை நிபுணர்களின் மேற்பார்வையில் திறமை மிகுந்த நெசவாளர்களால், தேர்ந்தியாக நெய்யப்பட்டு அழகான பார்டர்கள், அற்புத முந்திகளுடன் கொண்டு வந்து குவித்துள்ளோம்.

400 டிசைன்களில்—வெண்பட்டு அங்க வஸ்திரங்கள், துப்பட்டாக்கள், வேஷ்டிகள்
விலை ரூ. 15—0—0 முதல் ரூ. 150—0—0 வரை

4000 டிசைன்களில் — நூல் சேலைகள்
விலை ரூ. 5—0—0 முதல் ரூ. 50—0—0 வரை

1500 டிசைன்களில் — வேஷ்டிகள், டவல்கள், அங்க வஸ்திரங்கள்
விலை ரூ. 1—0—0 முதல் ரூ. 100—0—0 வரை

கோயமுத்தூர், உறையூர், சேலம், துனிலி, புல்லம்பேட்டை, ஜம்மலமடுகு, வங்காரம் பேட்டை முதலிய ஊர்களிலிருந்து ஏராளமாக கொண்டு வந்து குவித்துள்ளோம். முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் கல்யாணங்களுக்கும் வேண்டிய பல ரகங்கள் வந்துள்ளன

இன்றே வந்து பார்வையிடுங்கள்!

கஸ்தூரிபாய் கம்பெனி

உயர்தர பட்டு நூல், ஜவுளி வியாபாரிகள்

மேல வீதி :: சிதம்பரம்

காசுமாலை

அமுதா



நான் எவ்வளவு சொல்லியும் கேளாமல் அப்பா அந்தக் காசுமாலையை என்னிடம் கொடுத்து அனுப்பினார். புக்ககம் வந்த பிறகு ஒரு நாள் கூட அதை நான் அணிந்துகொள்ளவில்லை. அவருக்குத் தான் சாதாரணமாக எல்லோரும் அணிந்து கொள்ளும் வளை, சங்கிலி, தோடு முதலிய நகைகளை அணிந்து கொள்ளுவது கூடப் பிடிக்கவில்லையே, காசுமாலையை எங்கே போட்டுக் கொள்ளுகிறது? ஆகவே, அந்தக் காசுமாலை சுகமாகப் பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்தது!

'நகை போட்டுக் கொள்ளுவது அநாகரிகம்; பணத்தை வீணாக்குவது' என்கிற கட்சியைச் சேர்ந்தவர் அவர். சமயம் நேரும்போதெல்லாம் நகையால் வரும் தீங்கை ஒன்றுக்குப் பத்தாகக் கூறத் தயங்க மாட்டார். அவருக்கு இஷ்டமில்லாத காரியத்தைச் செய்ய நானும் விரும்பவில்லை.

ஒரு நாள் நாங்கள் கடற்கரைக்குப் புறப்பட்டோம். நான் காசுமாலையைத் தவிர மற்ற எல்லா நகைகளையும் அணிந்து கொண்டு சென்றேன். இந்தக் கோலத்தில் என்னைப் பார்த்ததும் அவர் 'கொல்' லென்று சிரித்து விட்டார்.

"உலகமே தலைகீழாக மாறினாலும் இந்தப் பெண்களின் நகையாசை மட்டும் போகாது போலிருக்கிறது. இவ்வளவு தானா நகை? இன்னும் ஏதாவது பெட்டியில் பாக்கியிருக்கிறதா?" என்று கேட்டார்.

எனக்கு வெட்கமாகப் போய் விட்டது. அதற்குப் பிறகு நான் வெளியே போகும் போதுகூட நகை போட்டுக் கொள்ளுவது கிடையாது.

எங்கள் வீட்டில் அவரையும் என்னையும் தவிர ஒரு வேலைக்காரன் உண்டு. அவர் வருமானம் நாங்கள் தாராளமாகச் செலவு செய்து கொண்டு சௌக்கியமாக இருக்கப் போதுமானதாயிருந்தபடியால், கஷ்டம் எப்படி இருக்கும் என்றே எனக்குத் தெரியாது.

ஒரு நாள் சாயந்திரம் அவரும் ஏறக்குறைய அவர் வயதுடைய இன்னொருவருமாகக் காரில் வந்து இறங்கினார்கள். அவர் உள்ளே வந்து, "சுலோசனா! சட்டென்று கொஞ்சம் காப்பி போட்டுக் கொடு!" என்றார். உடனே நான் போட்டுக் கொடுத்தேன். விருந்தாளி காப்பி சாப்பிட்டு விட்டுக் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் போய் விட்டார். அவர் போன பிறகு, "யார் அவர்?" என்று கேட்டேன்.

அவர் ஒரு வங்காளி என்றும், அவர் பெயர் ஸென் என்றும், அவரைக் கல்கத்தாவிலிருந்து புதிதாகத் தங்கள் ஆபீஸில் வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள் என்றும் அவர் சொன்னார். அத்துடன் இருவரும் ஏறிக்கொண்டு வந்த கார் அவருடையது என்றும் சொன்னார்.

அதன் பிறகு ஸென் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார். சில சமயங்களில் இரு

வரும் காரில் ஏறிக்கொண்டு உலாவப் போவார்கள்.

★

சென்னுடைய ஜோஸியத்தினுல் சில நாட்களுக்கெல்லாம் என் கணவருக்கு மோட்டார் கார் மோகம் ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே அவர் வைத்திருந்த மோட்டார் சைகிளை அவருக்குப் பிடிக்கவில்லை. அதை விற்றுவிட்டுத் தானும் ஒரு கார் வாங்கிக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. இதைக் கவனித்த நான், "சரி, அப்பாவுக்கு மூவாயிரம் ரூபாய்க்குச் சனியன் பிடித்திருக்கிறது. பாவம், அப்பா!" என்று எண்ணி வருந்தினேன்.

ஆனல், நான் சற்றும் எதிர்பாராத விதமாக அவர் ஒரு நாள், "கமலேசனு! உன்னுடைய காசுமாலையைக் கொடு, ஒரு நல்ல கார் ரொம்பக் குறைந்த விலைக்கு வருகிறது—அதை வாங்கலாம் என்று பார்க்கிறேன்!" என்றார்.

எனக்கு எப்படி இருந்ததென்று இங்கே என்னமாய் எழுதுவது? சிறிது நேரம் பேச்சு மூச்சு ஒன்றுமே வரவில்லை; சிலை போல நின்று விட்டேன்.

"என், காசுமாலையைக் கொடுக்க மனசு வரவில்லையா? அப்படியானல் வேண்டாம்!" என்றார் அவர் கோபத்துடன்.

அவர் சொல்வதுபோல் எனக்குக் காசு மாலையைக் கொடுக்க மனசு வராமல் இல்லை. ஆனல் உண்மையை அப்பொழுது அவரிடம் கூறத் தைரியம் வராமல் நான் தயங்கினேன்.

"பின் அப்பாவைக் கேட்க வேண்டுமோ? சரி, சரி; வேண்டவே வேண்டாம்! நான் வேறு ஏதாவது ஏற்பாடு பண்ணிக் கொள்ளுகிறேன்!" என்று கடுகடுப்புடன் கூறிவிட்டு அவர் வெளியே போய்விட்டார்.


எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேறு என்ன ஏற்பாடு அவர் செய்ய முடியும்? எங்கள் ஸாதாரிக் குடித்தனத்தின் பயனுகப் பாங்கியில் பணமே கிடையாது. கார் வாங்குவதாக இருந்தால் ஒன்று நகையை விற்கவேண்டும்; இல்லாவிட்டால் கடன் வாங்க வேண்டும். இரண்டும் முடியாதென்ருல் அப்பாவைக் கேட்க வேண்டும். இதைத் தவிர வேறு வழியே கிடையாது. இந்த மூன்றில் எது நல்லதென்று எனக்குத் தெரியவில்லை. ஒரே கவலையில் ஆழ்ந்தேன்.

புருஷனுக்குக் கோபம் வந்து விட்டால் வீடு எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா? நான் சாதம் போட்டால் அவர் சாப்பிடுவதில்லை; மடித்து வைத்த வெற்றிலையோ எடுப்பாரில்லாமல் வாடிப்போயிற்று. எல்லா வேலைகளையும் வேலைக்காரர்களைக் கொண்டோ அவர் செய்து கொண்டார். மொத்தத்தில் நான் இனி அவருக்குத் தேவையே இல்லை என்னும்படி இருந்தது அவர் நடத்தை.

இது எனக்குப் பெரிய துக்கமாக இருந்த போதிலும் நடு நடுவே அவர் செயல் எனக்குச் சிரிப்பையும் மூட்டிவிட்டது. "இதெல்லாம் எதற்காக? கார் வாங்குவதற்குக் காசுமாலை கொடுக்கவில்லை என்பதற்குத்தானே? எப்படி இருக்கிறது, கதை? 'எனக்கு நகை எதற்கு?' என்று உபதேசம் செய்கிருரே, இவருக்குக் கார் எதற்காம்? பெண்களுக்கு நகையில் ஆசை, புடவையில் ஆசை, அதில் ஆசை, இதில் ஆசை என்றெல்லாம் பழி சுமத்துகிருர்களே இந்தப் புருஷர்கள், இவர்களுக்கு மட்டும் எதிலுமே ஆசை கிடையாதா? இவர்களுடைய ஆசையுடன் நம்முடைய ஆசையை ஒத்திட்டுப் பார்க்கும்போது எங்கேயோ அல்லவா இருக்கிறது?" என்று எண்ணி நான் சிரித்துக்கொள்ளுவேன்.

★

நாட்கள் பறந்து கொண்டிருந்தன. ஒரு வாரத்திற்கு அப்புறம் திடீரென்று ஒரு நாள் அப்பா ஊரிலிருந்து வந்தார். எக்கச்



சிக்கலான சமயத்தில் வந்திருக்கிறாரே என்று நான் கவலைப் பட்டேன். ஆனால் அப்பாவைக் கண்டதும் அவர் நடத்தையே மாறிவிட்டது. ரொம்ப ரொம்ப உற்சாகத்துடனும் சுறுசுறுப்புடனும் அன்றையக் காரியங்களை எல்லாம் அவர் செய்தார். “சுலோசனா! அப்பாவுக்குக் காப்பி கொடுத்தாயா? ஸ்நானத்திற்கு வெந்நீர் போட்டாயா?—டேய், ராமு! கடைக்குப் போய் நல்ல கறி காய்களாக வாங்கிக் கொண்டு வாடா!” என்றெல்லாம் உத்தரவுக்கு மேல் உத்தரவாகப் போட ஆரம்பித்து விட்டார். இதனால் எங்களிடையே இருந்த மனஸ்தாபம் மாயமாய் மறைந்து விட்டது. நான் அப்பாவை மனமாற வாழ்த்தினேன்.

என் அக்காவுக்கு வளை காப்பு செய்வதற்காக அப்பா என்னை அழைத்துக் கொண்டு போக வந்தார். அவர் வந்தவுடன் முதல் முதலாக என்னைப் பார்த்துக் கேட்டது இதுதான் :—

“எங்கே அம்மா, உன்னுடைய நகைகளெல்லாம்?”

“இருக்கிறது, அப்பா! எல்லாவற்றையும் பெட்டியில் கழற்றி வைத்திருக்கிறேன்!” என்றேன்.

“முதலில் அவற்றையெல்லாம் எடுத்துப் போட்டுக்கொண்டு வா, அம்மா! பார்த்தால் என்னமோ மாதிரியிருக்கிறது!” என்றார். நானும் அப்படியே செய்தேன்.

அப்பாவும் பிறருக்கு எளிய வாழ்க்கையைப் பற்றிப் போதிப்பவர்தான். ஆனால் அவருடைய வழியே வேறு. அவருக்கு நேர் விரோதம் மாப்பிள்ளை.

மறு நாள் அப்பா ஊருக்குப் புறப்படும் போது நான் பெட்டியிலிருந்த காசமாலையை எடுத்து அணிந்துகொண்டேன். அப்போது அவருடைய முகத்தைப் பார்க்க வேண்டுமே! அதில் தோன்றிய கோபமும் அருவருப்பும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. ‘சரி, இனியும் விஷயத்தை மூடி வைப்பது சரியல்ல; போகுமுன் எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும்’ என்று தீர்மானித்தேன். ஆனால் அதற்கு வேண்டிய தைரியம் வரவில்லை.

மனசு நிம்மதி இல்லாமலே நான் அப்பாவுடன் ஊருக்குப் போனேன். அங்கே ஒரு வாரம் வரை எனக்கு வேலை சரியாக இருந்தது. அதற்குப் பிறகு ஒரு நாள் வேறு வழியின்றி நான் காசமாலையைப் ‘பார்ஸல்’ பண்ணி அவருக்கு அனுப்பி விட்டுப் பின் வருமாறு ஒரு கடிதமும் எழுதினேன்.

நமஸ்காரம்.

காசமாலையைக் கொடுக்கவில்லை என்று உங்களுக்கு என்பேரில் கோபம். ஆனால் உண்மை வேறு. அந்தக் காசமாலை என்னுடையதல்ல; என் அக்காவுடையது. கல்யாணத்தின்போது எனக்குப் போடுவதாகச் சொன்ன காசமாலையை அப்பா இது வரை எனக்குச் செய்து போடவில்லை. இப்பொழுது நான் அவசரமாகக் கேட்டதின் பேரில் பண்ணிக் கொடுத்தார். அந்தப் புதுக் காசமாலையைத்தான் இன்று உங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். அதை விற்று நீங்கள் கார் வாங்கிக் கொள்ளலாம். இந்த விஷயத்தை முன்பே உங்களிடம் சொல்ல எனக்கு அச்சமாயிருந்ததால் சொல்லவில்லை. மன்னிக்கவும்.

என்றும் உங்கள்,
சுலோசனா.

இந்தக் கடிதமும் காசமாலையும் போன சில தினங்களுக்கெல்லாம் அவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

அன்புள்ள சுலோசனா,

காசமாலை வந்து சேர்ந்தது. நான் இப்பொழுது கார் வாங்கவில்லையாகையால் உன்னுடைய காசமாலையை விற்கவில்லை. அது பத்திரமாக இருக்கிறது. நீ அங்கிருந்து புறப்பட்டு வர இன்னும் எவ்வளவு நாட்கள் பிடிக்கும்?

என்றும் உன்னுடைய,
சௌந்தரராஜன்.

அவர் கடிதத்தைப் பார்த்தபிறகு, பிறந்த வீட்டில் இருப்புக் கொள்ளுமா எனக்கு? உடனே புறப்பட்டு வந்து விட்டேன்.

அவர் கார் வாங்காததற்குக் காரணம் என்னவாம் தெரியுமா? நான் ஊரில் இல்லாதபோது மௌன் தன்னுடைய வீட்டில் இருக்கும்படி அவரை மிகவும் வற்புறுத்தினாராம். அவரும் அப்படியே செய்தாராம். அந்தச் சில தினங்களில் காரினால் ஏற்படும் கஷ்டங்களை அவர் தெரிந்து கொண்டாராம். தன்னுடைய காருடன் மௌன் படுகிற கஷ்டத்தை நேரில் பார்த்துவிட்டு, “கார் வாங்கினால் மட்டும் அதில் ஜோராகச் சவாரி செய்து கொண்டிருக்க முடியாது; நாம் எவ்வளவோ பாடுபட்டால்தான் அதில் கொஞ்சமாவது சவாரி செய்ய முடியும்” என்று நினைத்துத் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டாராம்.

எது எப்படியான போதிலும் நானும் காசமாலையும் தப்பினோம். வீட்டிலும் வழக்கம்போல் பழைய இன்பம் நிலவிற்று; காசமாலையும் பெட்டியில் சுகமாகத் தூங்கிற்று!

மேற்கு வங்காள கவர்னர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சர்வதாரி வருஷப் பிறப்பன்று தமிழ் நாட்டுக்கு வழங்கிய கவியரசர் பாரதியாரின் திருஉருவப் படம் சென்ற மாதம் 25-ந் தேதி யன்று எட்டயபுரம் பாரதி மண்டபத்துக்கு அனுப்பப் பட்டது. அங்கு எட்டயபுரம் மகா ராஜா அவர்கள் மேற்படி படத்தைத் திறந்து வைத்து மாலை சூட்டி அஞ்சலி செய்து ராஜாஜி தமிழ் நாட்டை மறக்காமல் செய்து வரும் சேவையைப் பெரிதும் பாராட்டிப் பேசினார்.



சுயம்வரம்

விதூஷகன்

'ஸ்திரீ சுதந்திரா' என்ற பத்திரிகையின் ஆசிரியை உமா ஒரு கட்டுரையில் கீழ்க் கண்டவாறு எழுதினாள்:

"பெண்கள் பிறக்கும்போதே அடிமைகளாகப் பிறந்து விடுவதில்லை. சுயநலம் மிக்க ஆண்கள் பிறகுதான் அவர்களை அடக்கி ஆளுகிறார்கள். முக்கியமாக ஒரு பெண்ணின் சுதந்திரம் அவளுடைய விவாகத்தின் மூலம் பறிபோய் விடுகிறது. அதாவது, விவாகம் பெண்ணைப் புருஷனிடம் அடிமைப் படுத்தும் சடங்கு என்று ஆகிறது. ஸ்திரீயின் அடிமைத்தளை துண்டிக்கப்பட வேண்டுமானால் நம் போன்ற இளம் பெண்கள் கன்னிகைகளாகவே காலம் கழிக்க முன்வரவேண்டும். இந்த முயற்சியில் நண்பர் சங்கர் தீவிரமாகத் தொண்டாற்றி வருவதை நாம் பாராட்டாமலிருக்க முடியாது? 'பிரம்ம சரியா' என்ற அவருடைய பத்திரிகையின் வாயிலாக அவர் ஆண்களின் கொட்டத்தை ஓரளவு அடக்கியே விட்டார் என்று கூடச் சொல்லலாம். ஸ்திரீயின் சுதந்திரத்தை ஆக்ரமிக்க விரும்பாத அந்த மகானுபாவர் தனது தேதி வரை பிரம்மசாரியாகவே வாழ்க்கை நடத்துவது இங்கு குறிப்பிடத்தக்கது."

உமாவின் கட்டுரையைப் பாராட்டி சங்கர் தன்னுடைய பத்திரிகையில் கீழ்க் கண்டவாறு எழுதியிருந்தான்:

"புராண காலத்திலேயே பெண்கள் கௌரவமாக நடத்தப்பட்டு வந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும். ஜனக மகாராஜன் சீதைக்கு அவளுடைய விவாக விஷயத்தில் பூர்ண சுதந்திரம் அளித்திருந்தான். அவளை ராமன் 'எதிர் ஜாமீன்' வாங்கிக் கொண்டு கல்யாணம் செய்து கொள்ளவில்லை. சுயம்வர மண்டபத்தில் தான் மணந்தான். 'ஸ்திரீ சுதந்திரா' ஆசிரியை ஸ்ரீமதி உமா சொல்லுவது போல, விவாகம் பெண்களை மட்டுமின்றி ஆண்களையும் கூடக் கட்டுப் படுத்தி விடுகிறது. ஸ்திரீகளின் சுயம்வரமே அவர்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்க வழி? ....உமாவின் சேவையை நாம் பாராட்ட வேண்டியது நம்முடைய கடமையாகும். இளம் கன்னிகையான அவள் மன உறுதியுடன் ஸ்திரீ சுதந்திரப் போராட்டத்தில் இறங்கி இருப்பது ரொம்ப ஆச்சரியம் அல்லவா? நம்முடைய பத்திரிகையில் அவளுடைய எழில் மிக்க போட்டோவை வெளியிடுவதன் மூலம் நாம் பெருமை யடைகிறோம்."



'ஸ்திரீ சுதந்திரா' ஆசிரியை உமா சங்கரின் பாராட்டுரையைத் திருப்பித் திருப்பிப் படித்தாள். பிறகு மேலும் அவள் கட்டுரை எழுதிக்கொண்டிருக்கவில்லை; சங்கருக்கு நேராக ஒரு கடிதமே எழுதிவிட்டாள்!

"ஐயா,

தங்கள் பாராட்டுரையை இதுவரை நூற்றுத் தொண்ணூற்று ஒன்பதரைத் தடவை படித்து விட்டேன். 'அரைத் தடவை என்ன?' என்று சந்தேகப் படுகிறீர்களா? இரவு பன்னிரண்டு மணிக்கு பாதி வாசித்துக்கொண்டிருந்தபோது அப்படியே அசந்து தூங்கிப் போய் விட்டேன்! எத்தனை தடவை வாசித்தால் தான் என்ன? அலுப்பு சலிப்பு என்பதே கிடையாது. அடுத்த 'ஸ்திரீ சுதந்திரா' இதழ் தங்கள் திருவுருவத்தை மேலட்டையில் தாங்கிக் கொண்டு வெளிவர வேண்டுமென்பது அடியாளின் அவா. நல்ல 'ஸ்டை'லில் ஒரு போட்டோ எடுத்து உடனே அனுப்பவும்... ...ஹும்......நான் ஒன்று கேட்கிறேன். கோபித்துக் கொள்ளமாட்டீர்களே! உங்கள் விருத்தாந்தத்தை அறிய வேண்டுமென்று ஏனோ இந்தப் பேதை மனம் ஆசைப்படுகிறது. அவ்வளவுதான்!

தங்கள்

அடியாள்—உமா"

உமாவின் கடிதம் சங்கரை மயக்கியது. அதை இருநூறு தடவை படித்து விட்டு அவன் பதில் எழுத உட்கார்ந்தான்.

"அன்புள்ள உமாவுக்கு,

உங்கள் கடிதம் பார்த்து மது உண்ட தேனீபோலானேன். என்னுடைய புகைப் படம் ஒன்றை இத்துடன் அனுப்பி யிருக்கிறேன்!...... ஒரு விஷயம்...உங்கள் கடி

தத்தில் 'அடியாள்' என்று தவறாக எழுதியிருக்கிறீர்கள்! யார் யாருக்கு அடிமை? இதை யெல்லாம் தொலைத்துத் தலைமுழுகத் தானே நாம் பாடுபடுகிறோம். நீங்கள் கேட்டபடி என்னுடைய 'சுய சரித'த்தைத் தனியே எழுதி அனுப்பியுள்ளேன். அம்மாதிரியே தங்களுடைய விருத்தாந்தங்களையும் அறிய ஆசைப்படுகிறேன்.

தங்கள் ஊழியன்,
சங்கர்"



இதற்கு உமா எழுதியிருந்த பதிலை சங்கர் மிக்க ஆவலுடன் படித்தான்.

"அன்புள்ள சங்கர்,

தங்கள் கடிதத்தின் இனிமை சொல்லி முடியாது. என் கடிதத்தைப் பார்த்துவிட்டு நீங்கள் மதுவுண்ட தேனீயைப் போலாகி யிருக்கிறீர்கள் என்பதைத் தாங்கள் சொல்லாமலேயே நான் தெரிந்து கொண்டேன். எனக்கு உபதேசம் செய்துவிட்டு, கடைசியில் தாங்களும் 'ஊழியன்' என்று போட்டுக் கொண்டு விட்டீர்கள்! தங்கள் 'சுய சரிதம்' படிக்க ரசமாயிருந்தது. போட்டோவை 'ஸ்திரீ சுதந்திரா'வின் அட்டையில் பிரசுரிக்க வில்லை; என் மேஜை மேலேயே வைத்துக் கொண்டு விட்டேன்! தங்கள் இஷ்டப்படியே என்னுடைய விருத்தாந்தத்தைத் தனியே இத்துடன் எழுதி வைத்துள்ளேன் .... ஒரு சமாசாரம்.........மனதுக்குப் பிடித்தவராக, பெண்களின் சுதந்திரத்துக்குப் பங்கம் விளைவிக்காதவராக, ஒரு யுவன் கிடைத்தால் எந்தப் பெண்ணும் விவாகம் செய்து கொள்ளலாம் என்ற என்னுடைய பழைய அபிப்பிராயத்துக்குப் புதுமெருகு கொடுத்திருக்கிறேன். தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

அடியாள்,
உமா"

இந்தக் கடிதத்தைப் படித்ததும் சங்கருக்கு இந்த உலகத்தில் இருப்பதாகவே தோன்றவில்லை. மறு தபாலில் அதற்கு பதில் பறந்தது!

"என் உமாவுக்கு,

நான் புதிதாக என்ன சொல்லப் போகிறேன்? இல்லிற் கிசைத்தொழுகும் பெண்ணாகக் கிடைத்தால் எந்தப் புருஷனும் கலியாணம் செய்து கொள்ளலாம். பிறகு அந்த இல்லாள் கல்லாளாக விட்டால், ஓடிக் கொண்டே சந்நியாசம் வாங்கிக் கொள்ளலாம்! ஆனால் எந்த விதத்திலும் ஸ்திரீயின் சுதந்திரத்துக்கு மட்டும் விலங்கு ஏற்படுத்தக் கூடாது என்று நான் ஏன் திருப்பித் திருப்பி 'பிரம்மசரியா'வில் எழுதி வந்திருக்கிறேனே!......உம்......ஒரு உதாரணம்......இப்போது நான் ஒரு பெண்ணை மணக்க விரும்புவதாக வைத்துக் கொள்வோம். உங்களைப் போன்ற ஒரு வனிதாரத்தினத்தை மணப்பதைப் பற்றி முன்பின் யோசிப்பானேன்?

சங்கர்

குறிப்பு - 'பிரம்மசரியா'விலிருந்து விலகிக் கொண்டு விட்டேன்!"

சங்கரின் கடிதம் உமாவை மெய்மறக்கச் செய்து விட்டது. உடனே அவள் பதில் எழுதினாள்.

"அன்பரே,

நான் என்ன சொல்லுவேன்? தங்கள் மனதை அறிந்துகொண்ட பிறகு என்னால் பொறுமையாயிருக்க முடியுமா? 'ஸ்திரீ சுதந்திரா' ஆபீஸையே மூடிவிட்டேன்! ஒரு புருஷனின் ஆத்மார்த்தமான அன்புக்கு எந்தப் பெண்ணின் இருதயமும் அடிமையாகத் தான் ஆகிவிடும். என்றும் தங்கள் அடியாள்,

உமா

குறிப்பு:—முகூர்த்தம் எப்போது?"



பிரசித்தி பெற்ற மிருதங்க வித்வான் தஞ்சாவூர் ஸ்ரீ வைத்தியநாதய்யர் சர்வதாரி சித்திரை மீ 1 உ இறைவன் திருவடி அடைந்தார்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

210. அடடா என்ன சிரிப்பு!

மனக புண்பட்டு உலைந்துகொண்டிருக்கிறாள் சீதை. அந்த நிலையில் ஒரு வெறி, துன்ப வெறி, அதன் காரணமாகப் பழைய நிகழ்ச்சிகள் வந்து மனசில் உருவெடுக்கின்றன.

∴

ராஜ்யமென்றால் சாமானிய ராஜ்யமா! முறியடிக்கப் பட்டு மடங்கிப் போன பகைவரல்லாமல் வேறு பகையே இல்லாத ராஜ்யமல்லவா? எவ்வளவு விசாலமான ராஜ்யம்! அந்த ராஜ்யத்தை 'உனக்கில்லை பரதனுக்குத்தான்' என்று கைகேயி சொன்ன மாத்திரத்தில் முகத்தில் வருத்தம் என்பது ஒரு துளியாவது இருந்ததா, இல்லை.

தெம்ம டங்கிய
  சேணிலம், கேகயர்
தம்ம டந்தை,உன்
  தம்பிய தாம்என,—
மும்ம டங்குபொ —
  லிந்தமு கத்தினன்
வெம்ம டங்கலை
  உன்னிவெ தும்புவான்.

[தெம்மடங்கிய: பகைவர் அனைவரும் மடங்கிப் போன; சேண்நிலம்: விசாலமான ராஜ்யம்; கேகயர் தம் மடந்தை: கைகேயி; என: என்று சொல்லவும்; மும்மடங்கு பொலிந்த முகத்தினன்: இயற்கையாக உள்ள சோபையைவிட மும்மடங்கு சோபை கொண்ட முகத்தினன் ஆன; வெம்மடங்கலை: வீர சிங்கத்தை (ராமனை); உன்னி வெதும்புவான்: எண்ணி வருந்துவான்.]

தசரதன் முன்பின் தெரிவிக்காமல் ராமனைக் கூப்பிட்டு 'நீ சக்கரவர்த்தியாக வேண்டும்' என்று சொன்னான். அப்போது அவன் முகம் எப்படியிருக்கிறது என்று ஜனங்கள் பார்த்துக் கொண்டார்கள். இது மாலையில் நடந்தது. அடுத்த நாள் காலையிலேயே கைகேயி கூப்பிட்டு 'இந்த ராஜ்யம் உனக்கில்லை' என்றாள். அப்போதும் அவனுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டார்கள். அதிசயத்திலும் அதிசயமாக இருந்தது.

மெய்த்தி ருப்பதம்
  மே(வு)என்ற போதினும்,
இத்தி ருத்துறந்(து)
  ஏகென்ற போதினும்,
சித்தி ரத்தின்
  அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த
  முகத்தினை உன்னுவாள்.

[மெய்த்திருப்பதம் மேவு என்ற போதினும்: நிலையான சக்கரவர்த்திப் பதவியை ஏற்றுக் கொள்வாயாக என்ற போதினும்; இத்திருத் துறந்து ஏகு: இந்தச் செல்வத்தை விட்டு காட்டுக்குப் போ; சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை: ஒரு செந்தாமரைப் புஷ்பத்தைப் பார்த்தால் அனுபவிப்போம். சிறிது நாழிகை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். வாடாமல் இருக்கும் வரையில் அனுபவித்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால் ஒரு செந்தாமரைப் பூவை அனுபவித்த உண்மையான சித்திரக் கலைஞன் அதைச் சித்திரமாக எழுதும்போது அதில் ஒரு கோட்டை அழுத்துகிறான். அங்கொரு இதழை விரிக்கிறான். இங்கொரு இதழை மடக்குகிறான். இப்படி விட்டு விட்டு எழுதுவதாலும் அழுத்தம் கொடுப்பதாலும் கலைஞனது அனுபவ ஆனந்தம் சித்திரத்தில் கலந்து கொள்ளுகிறது. அந்த அனுபவ ஆனந்தத்தை நாமும் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறோம். ஆகவே இயற்கை தருகிற தாமரை

யைவிட சித்திரத்திலுள்ள தாமரை அதிகமான அழகையும் ஆனந்தத்தையும் கொடுக்கிறது. இது கலைக்குரிய சிறப்பு—அத்தகைய அழகு ராமனது முகத்தில் இருக்கிறது.]

∴

சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையும் ராமனது முகமும் நினைவுக்கு வந்தன. அந்த முகத்தில் வேறொரு பாவம் வந்து விளங்குவது நினைவுக்கு வருகிறது.

ராஜ்யத்தைத் துறந்து காட்டுக்குப் போகிறான் ராமன். ராஜாங்கம் அல்லாமல் இளவரசனான நிலைமையில் எவ்வளவோ சொத்துக்கள் அவனுக்கு உண்டு. அவைகளில் பசு மந்தைகள் ஏராளமாக இருந்தன. அவைகளையெல்லாம் வைதிகத் தொழிலில் இருப்பவர்களுக்குத் தானமாகக் கொடுத்து விட்டான். மிச்சம் ஒன்றும் இல்லை. "வேறு ஏதேனும் பசுக்கள் இருக்கிறதா, ராமா?" என்று வேதியர்கள் சிலர் ஆத்திரத்தோடு வந்து கேட்டார்கள். அப்படிக் கேட்ட போது சீதையும் பக்கத்தில் நின்றாள்.

பரித்த செல்வம்
  ஒழியப் படருநாள்,
அருத்தி வேதியர்க்(கு)
  ஆன் குலம் ஈந்(து), அவர்
கருத்தின் ஆசைக்
  கரை இன்மை கண்(டு),
    இறை
சிரித்த செய்கை
  நினைந்தழும் செய்கையாள்.

[பரித்த செல்வம் ஒழிய: உரிமையோடு தன்னிடம் இருந்த ராஜ்யம் ஒழிய; படரும் நாள்: காட்டுக்குப் போகிற சந்தர்ப்பத்தில் (எவ்வளவு துக்ககரமான சந்தர்ப்பம்!); அருத்தி வேதியர்க்கு: தரித்திரத்தினால் பேராசை உண்டான வேதியர்க்கு; ஆன் குலம் ஈந்து: பசுக் கூட்டங்களை தானம் செய்து; அவர் கருத்தின்: அவர்களது கருத்திலுள்ள; ஆசைக் கரை இன்மை கண்டு: ஆசைக்கு முடிவில்லையே என்று கண்டு; இறை சிரித்த செய்கை நினைந்து: ராமன் சிரித்த செயல் நினைவுக்கு வந்தது; அழும் செய்கையாள்: அப்படியே அழுகை வந்து விட்டது சீதைக்கு.]

இதுமாதிரி நினைவுகள் இன்னும் எத்தனையோ வருகின்றன. அவற்றை அடுத்த இதழில் பார்க்கலாம்.

அகல் விளக்கு

கி. முத்துசுவாமி

"கடைசித் தடவையாச் சொல்லி விட்டேன்; உன் கேலிச் சிரிப்பும் கோமாளித் தனமும் என்கிட்டே வேண்டாம். பேசாமல் உன் அலுவலைப் பார்த்துக் கொண்டு கட. எங்க அப்பன் சொல்வதுபோல — இந்த மாதிரி மனிசனுக்குப் பெண்ணைக் கொடுப்பதைக் காட்டிலும் பாழும் கிணத்திலே தள்ளுவதே மேல்—"

தங்கம் மிடுக்குடன் மறுபுறம் திரும்பிக் கொண்டு மண் துலைத்தாள். அவள் முகத்தில் வெறுப்பு மிகுந்திருந்தது.

"அடேடே! உனக்கிருக்கிற கோபத்திலே என் வெள்ளைச் சட்டையெல்லாம் சேறாக்கி விட்டாயே—"

சம்பந்தம் பரபரப்புடன் சட்டையை உதறி விட்டுக்கொண்டான். அவன் முகத்தில் 'அசட்டுக் களை' எல்லை மீறிப் பிரதிபலித்தது.

தங்கம் வாய்விட்டு நகைத்தாள். "ஆமா! 'தாசில்' உத்தியோகம் அங்கே தடுமாறிப் போவுதில்லே, 'டவு'னிலே?"

"அது இருக்கட்டும், தங்கம்! மாமன் என்னைப் பற்றி என்னதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்? உன் இஷ்டப் படியே மாமன் நடப்பாரா?" அவன் குரல் தாழ்ந்து ஆர்வம் நிறைந்திருந்தது.

தங்கம் சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பின்பு திடீரென்று, "ஏன், அது கல்லாத்தான் உன்னைத் திட்டும்! உனக்குக் கொஞ்சமாவது ரோசம் இருந்தால்தானே? அது சொல்றதுலே என்ன பிசகைக் கண்டுவிட்டே? ஆனால், நான் மனசு வெச்சா, எங்க அப்பன் மனசையே மாத்த முடியும்"—அவள் வார்த்தையில் கர்வத்துடன், நாணமும் கலந்திருந்தது.

"ஹும், அவருக்கு இருக்கிற பிடிவாதத்துக்கும் கோபத்துக்கும்......"

சம்பந்தம் வார்த்தையை முடிக்கவில்லை. அதற்குள் கொல்லைப்புறக் கதவு திறக்கும் ஓசை கேட்டது. யாருடனோ பேசிக்கொண்டிருந்த படியே தங்கத்தின் தந்தை சாமு வந்துகொண்டிருந்தான். தங்கம் பரபரப்பாக வேலை மீது கவனம் செலுத்தினாள்.

"இனியாட்டம் வளர்த்து இந்தக் கழுதைக்குக் கட்டுவதைவிட கொன்னிடத்து மடுவிலே தள்ளிவிடுவதே மேல்—"

இந்தச் சொற்கள் சம்பந்தத்தின் காதிலும் அரை குறையாக விழுந்தன. அவன் வேகமாக மறைந்தான். தங்கம் குடத்தை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள்.

2

"தாத்தா, நீங்க எது சொன்னாலும் நான் கட்டுப்படுவேன். இந்த ஒரு



விசயத்துலே மட்டும் என்னைக் கொஞ்சம் விட்டுப்பிடியுங்க. ஏதுடா, சாமு இப்படிச் சொல்றானேன்னு நினைக்காதீங்க.''

தெரு காட்டாண்மைக்காரக் கிழவ விடம் சாமு இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் வார்த்தையில் கண்டிப்பு மிகுந்திருந்தது.

கிழவன் பெருமூச் செறிந்தான். ''தம்பி, இங்கே பார், நீ இவ்வளவு காளா என் வார்த்தையை மீறினாயா? நீ நியாயப் பிசகாய் பேசுவதாக யாரும் சொல்ல மாட்டாங்க. ஆனால், உனக்கு இருப்பது ஒரே மகள். நல்லதோ, கெட்டதோ அவளை விட்டால் வேறே யாரு மனுசான் உனக்கு? அவளும் பாவம், அழுது அழுது சாகிறான். ஏதோ முன்னேயோ பின்னேயோ அந்தப் பய மகனுக்கு உன் மகளைக் கட்டி விட்டுட்டால் ஒண்ணுக்குள் ஒண்ணு...''

''அதெல்லாம் சரிதாங்க. கொஞ்சம் யோசனை பண்ணுங்க. இந்தப் பயலுடைய நடவடிக்கையும் யோக்கிதையும் சரியா இருக்குதா? என்னமோ வெள்ளைச் சட்டையைப் போட்டுக் கொண்டு ஊரைச் சுத்துவதும், சினிமா பார்த்துவிட்டு வந்து தெய்வத்தைப் பத்தியும் கோவிலைப் பத்தியும் பேசிக்கிட்டு அக்கப்போர் பண்ணுவதும்-இதெல்லாம் எப்படியிருக்குது? தாயார் சொல்லுக்குத்தான் கட்டுப்படுகிறானா? ஏதோ, அவனுடைய அப்பன் சாவதற்குள் நான்கு காணியை வைத்து விட்டுப் போய் விட்டான். இல்லா விட்டால் இவனும் மண்ணு கொணைச்சு சட்டிபானை தானே செய்யவேணும்? இந்தக் காசு தான் எத்தனை நாளுக்குக் காணும்? என்னமோ போங்க......விட்டுத் தள்ளுங்கள்!''

காட்டாண்மைக்காரக் கிழவன் வாய் திறவாமல் அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

சாமு தொடர்ந்து, ''ஒண்ணுமில்லை, இங்கே பாருங்க. இன்னிக்குக் காலையிலே பெரிய கோயிலிலே இருந்து ஆளு வந்து 'நாளை அந்திக்குள்ளே ஐயாயிரம் அகல் விளக்கு வேணும்'னு உத்தரவு போட்டுப் போயிருக்காங்க. 'ஆலயப் பிரவேசம்' பண்ணணும்னு ஏதோ சர்க்காருலேருந்து உத்தரவு போட்டிருக்காங்களாம்; அதுக்காக, இது அவசரமா வேணும்னு கடுபிடி பண்ணிட்டுப் போயிருக்காங்க. ஊரிலே வேலை தெரிஞ்சவனெல்லாம் பக்கத்து ஊருக்குப் போயிருக்கானுவ. இப்போது இந்தப் பயல் ஒழுங்கா இருக்கிறவனாக இருந்தால், எவ்வளவு உதவியாக இருக்கும்? கோயில் மானியத்திலே குடியிருந்து கொண்டு காமெல்லாம் ஊர்க்கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கிறதா?...... என்னமோ போங்க!...... ''என்றான்.

அவன் உள்ளத்திலிருந்து நீண்ட ஆயாசமும், கவலையும் பிரதிபலித்தன.

கிழவன் எழுந்தான். ''சரி, நீ உன் அலுவலைக் கவனி. நான் சாவகாசமாக வருகிறேன்.''

சாமுவும் எழுந்தான். ''தாத்தா, நீங்க தப்பாக எதுவும் நினைக்காதீங்க. ஏதோ என் மனசுலே உள்ள குறையைச் சொன்னேன்'' என்றான்.

கிழவன் சென்றதும் சாமு மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான். பின்னாலிருந்து தங்கம் கூப்பிடுவதுகூட அவன் செவியில் விழவில்லை. அவள் மூன்றும் முறையாகக் கூப்பிட்ட பிறகுதான் அவன் திரும்பி, ''என்னம்மா?'' என்று கேட்டான் வாத்சல்யத்துடன்.

''மேலத் தெருவிலே இருந்து சின்னப் பெண் வந்துட்டுப் போச்சு. அத்தைக்கு நேத்து இராத்திரியிலிருந்து ஜூரமாம். அத்தான் கூட வீட்டிலே இல்லையாம்'' என்று தங்கம் அரை குறையாக நிறுத்தினாள்.

சாமு பரபரப்புடன், ''சரி, அப்படியானால் நீயாவது அங்கே போய் விட்டு வா'' என்றான். அவன் குரலில் கவலை மிகுந்திருந்தது.

3

அந்தி வானத்தின் செவ்வர்ணம் வானமெங்கும் பரவிக் கொண்டிருந்தது. மஞ்சள் வெய்யில் பூமியின் சகல பொருள்களையும் பொன் நிறமாக்கிக் கொண்டிருந்தது.

கொல்லைப்புறத்துக் கோடியில் சூளையருகில் சாமு அழமாட்டாக் குறையாக உட்கார்ந்திருந்தான். கோவில் அதிகாரிகளின் முகங்கள் பயங்கர ரூபத்தில் அவன் அகக் கண்களுக் கெதிரில் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருந்தன. அவன் இரவும் பகலுமாக உழைத்து, உருப்படுத்தி சூளையில் வைத்த அவ்வளவு அகல்களும் பாணம், பாணமாக உருவின்றி வெடித்துக் கிடந்தன!



அப்போது தங்கம் அவனெதிரில் வந்து கொண்டிருந்தாள். சாமு அவளைப் பார்த்துக் கொண்டே வாய் திறக்காமல் உட்கார்ந்திருந்தான்.

"அப்பா, பொழுது போன நேரத்திலே ஏன் இங்கே இருக்கிறே? எந்திருந்து உள்ளே வாயேன்."

அவன் மீண்டும் பதில் பேசாமல் துக்கத்துடன் குனையைக் காட்டியபடி தலை கவிழ்ந்து கொண்டான்.

"இதுக்காகவா இப்படி உறக்கம் பிடிச்சுப் போய் உட்கார்ந்திருக்கிறே? பெரிய கோயிலுக்குப் போய்ச் சேர வேண்டிய ஐயாயிரம் அகல் விளக்கும் பத்திரமாகப் போய்ச் சேர்ந்துவிட்டது. நீ கவலைப்பட வேண்டாம்."

சாமு ஸ்தம்பித்துப் போனான். பரபரப்புடன், "என்ன, என்ன?" என்று கேட்டான்.

"நீ அத்தானை சும்மா 'சோம்பேறி, சோம்பேறி'ன்னு சொன்னதனாலே அதுக்கு ரொம்ப ரோசம் வந்துவிட்டது. அதுக்காக, களத்து மேட்டுச் சூளை பக்கத்திலேயே இரண்டு நாளாக இருந்து எல்லாத்தையும் தானே செய்து, உனக்கு முன்னாலேபோய்சாயந்திரமேகோவிலிலே குடுத்துட்டு வீட்டுக்கு வந்து விட்டது."

சாமு திக்பிரமையுற்று நின்றான். தங்கம் தொடர்ந்து, "நீதான் அந்த அகல் விளக்கை எல்லாம் கொடுத்தனுப்பியதாக அத்தான் கோயிலிலே சொல்லியிருக்கிறார்" என்றாள்.

சாமுவுக்குத் தன் காதுகளை நம்பவே முடியவில்லை. அவனுக்கு அளவு கடந்த சந்தோஷம் உண்டாயிற்று. "இப்போ, அவன் எங்கே?" என்று கேட்டான்.

"அப்புறமா வரேன்னு சொல்லிச்சு —" இதைச் சொல்லும் பொழுது அவளது முகத்தை அவன் கவனிக்கவில்லை!

சாமு வாசற்புறத்துக் கதவைத் திறந்து கொண்டு அவசரமாகக் கோவிலுக்குக் கிளம்பினான்.

4

கொல்லைக் கதவின் தாழ்ப்பாளை அகற்றினாள் தங்கம். சம்பந்தம் அசட்டுச் சிரிப்புடன் உள்ளே நுழைந்தான்.

"இந்நேரம் வரை இங்கேயே இருந்து ஒட்டுக் கேட்டுக் கொண்டு இருந்தியா?" என்று கேட்டாள் தங்கம்.

"ஏன், நீ சொன்ன பொய்யை யெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தது தப்பா?—"

"ஆமாம், போ! உன்னைப் போல சோம்பேறி, — உன்னைப்போல ரோசம் இல்லாத மனுசன் இந்த உலகத்திலேயே கிடையாது. ஒட்டுக் கேட்பது எவ்வளவு கெட்ட பழக்கம்? ஹாம்?......"

"அது சரி தங்கம்! இதுக்காகத்தான் நான் சாயந்திரம் வந்ததும் வராததுமா நீ என்னைக் கோயிலுக்கு விரட்டி அடித்தாயா? நான் என்னமோ இரண்டு நாளா ஊரைச் சுத்திட்டு......"

"ஆமா, ரோசம் இல்லாத மனுசனுக்கு எப்படித்தான் புத்தி உண்டாகிறது? உனக்குக் கொஞ்சம்கூட வெட்கம் இல்லை?—"

சம்பந்தம் குறும்புடன், "ஏன்?" என்றான்.

"ஏனா?—"

அவள் சுற்றிலும் ஒரு முறை பார்த்துக் கொண்டாள். பின்பு தலை கவிழ்ந்து கொண்டாள். அவள் முகம் சிவந்தது. அதில் பெண்மை பிரகாசித்தது.

அவனது உள்ளத்தை ஆட்கொண்டிருந்த அகங்காரம் கணத்தில் விடை பெற்றுக் கொண்டு விட்டது. அவன் புதியவனானான்.

அவன் தங்கத்தின் அருகே சென்று அவளுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டான். "தங்கம், நீ உண்மையிலேயே தங்கம்தான்! இதுக்காக, இரண்டு இரவு கண்ணு முழிச்சு......"

அவனால் வார்த்தையை முடிக்க முடியவில்லை. காதல் மட்டற்ற கடமையையும், பொறுப்பையும் அவன்மீது சுமத்தி விட்டது அந்த ஒரு கணத்தில்.

"இனிமேல் நான் எங்கும் சுற்ற மாட்டேன். நீ சொன்ன வேலை எல்லாம் செய்து கொண்டு இங்கேயே இருப்பேன்" என்றான்.

அப்போது வாசற்புறத்திலிருந்து, "தம்பி இங்கே வந்திருக்குதா?" என்ற சாமுவின் குரல் அவன் காதில் இன்பத்தை வார்த்தது போலிருந்தது.



கைலாசத்தின் சாமர்த்தியம்

என். லக்ஷ்மி

"என்ன ஸார், பஸ்ஸில் இடமில்லையா? இந்தக் கஷ்டமெல்லாம் உங்களுக்கு என்னத்துக்கு, ஸார்? ஒரு சின்னக் காரை வாங்கிக் கொண்டு 'ஜம்'மென்று ஆபீஸுக்குப் போகாமல், இந்தக் கூட்டத்தில் ஏன் ஸார் இடி படணும்? உங்களுக்கென்ன ரூபாய்க்குக் குறைச்சலா? நான் சொல்றேன்: பேசாமல் ஒரு கார் வாங்கி விடுங்கள். அவ்வளவு தான்" என்று என் நண்பர் கைலாசம் சொன்னார்.

நான் அப்பொழுது லஸ் முனையில் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். மணி ஒன்பதரை இருக்கும். ஆபீஸுக்கும் காலேஜுக்கும் போகும் சுமார் முப்பது நாற்பது பேர் என்னைப் போல் அங்கே திண்டாடிக் கொண்டிருந்தார்கள். மைலாப்பூரிலிருந்து வரும் ஒவ்வொரு பஸ்ஸிலும் கூட்டம் நிரம்பியிருந்தது. அநேகமாய் ஒரு பஸ் கூட 'ஸ்டாண்'டில் நிற்காமலே போய்க் கொண்டிருந்தது. அப்படி ஏதாவது ஒன்றிரண்டு நின்றாலும் அவைகளில் ஒருவருக்கோ அல்லது இரண்டு பேருக்கோ தான் இடமிருக்கும். அதற்கு இத்தனை பேரும் முண்டியடித்துக் கொண்டு ஏறும் பொழுது கையிலிருக்கிற தர்மாஸ் ப்ளாஸ்க் எங்கே கீழே விழுந்து உடைந்து விடுமோ என்று பயந்து கொண்டு கொஞ்சம் நிதானமாகவே போட்டிபோட வேண்டியதாக இருக்கிறது

கடைசியில், நான் அன்று தர்மாஸ் ப்ளாஸ்கைக்கெட்டியாக மார்பில் அணைத்துக்கொண்டு கூட்டத்தில் நெருக்கியடித்து ஒரு பஸ்ஸில் ஏறி, மேலே கம்பியில் தொங்கும் தோல் பட்டையைப்பிடித்துக் கொண்டு, ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் சாதித்தவன் போல் பெரு மூச்சு விட்டுக் கொண்டு, மணியைப் பார்க்க இடது கையைத் தூக்கினேன். அவ்வளவு தான், எனக்கு 'பகீ'ரென்றது. ஏறும் பொழுது தர்மாஸ் பிளாஸ்க் என்னுடைய கடியாரத்தின் மேல் பட்டதால் அதன் கண்ணாடிக்கு தூளாக உடைந்து ஒரு முள்ளும் ஒடிந்து விட்டது. புத்தப் புது கடியாரம். வாங்கி ஒரு மாதம் கூட ஆகவில்லை. என் மச்சினன் பம்பாயிலிருந்து வரும்பொழுது வாங்கிக்கொண்டு வந்தான்.




கடியாரத்தை உடனே கையிலிருந்து கழற்றி கோட்டுப் பைக்குள் வைத்துக் கொள்ளும் பொழுது, ஆழ்வார் பேட்டை முனையில் பஸ் திரும்பவே, நான் அப்படியே சாய்ந்து பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு கிழவர் மேல் விழுந்தேன். கிழவர் சற்றுக் கோபத்துடன் 'ஏன் ஸார், மேலே பிடித்துக் கொள்ளக் கூடாதா?' என்றார். நல்ல வேளை, என் பிளாஸ்க் கீழே விழாமல் பார்த்துக் கொண்டேன். ஆனால் அதிலிருந்த காப்பி மட்டும் கொஞ்சம் வழிந்து அந்தக் கிழவருடைய கோட்டின் மேல் சிந்திவிட்டது. அவர் அதைக் கவனிக்கவில்லை.

வண்டியில் ஏறுவதற்கு முன்பே முன் ஜாக்கிரதையாக டிக்கட்டுக்காகப் பையிலிருந்து மூன்று அணா கையில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு அணா எங்கேயோ தவறி விழுந்து விட்டது. வேறு சில்லறை இல்லாததால் ஒரு ரூபாய் கோட்டைச் சட்டைப் பைக்குள்ளிருந்து கஷ்டப்பட்டு எடுத்துக் கண்டக்டரிடம் கொடுத்தேன். அவன் டிக்கட்டைக் கிழித்துக் கொடுத்து விட்டு "சில்லறை இல்லை. அப்புறம் கொடுக்கிறேன்" என்று சொல்லி விட்டான். சென்டிரல் ஸ்டேஷன் கடியாரத்தில் பத்தேமுக்கால் ஆகிவிட்டது. ஆபீஸ் பத்தரை மணிக்கு ஆரம்பிக்கிறது. நான் பிராட்வேயில் இறங்கி ஆபீஸுக்குப் போகும்போது சரியாகப் பதினொன்றேகால்.

அன்றிரவு என் மனைவியிடம் அன்றைய செலவுக் கணக்கைச் சொல்லும்பொழுது தான் கண்டக்டரிடம் சில்லறை வாங்கிக் கொள்ளாதது ஞாபகம் வந்தது.

"இப்படிக் கண்டக்டரிடம் சில்லறை கேட்டு வாங்கத் தெரியாத அசாமிகளெல்லாம் ஆபீஸிலே என்ன உத்தியோகம் பார்க்கிறார்களோ?" என்று அவள் சலித்துக் கொண்டாள். "பஸ் கம்பெனியாவது

குறித்துக் கொண்டு வந்தீர்களா? அவ்வளவு தூரம் புத்தி எங்கே இருக்கப் போகிறது?'' என்று கோபித்துக் கொண்டான்.



நான் அன்று பட்ட கஷ்டம் அவனுக்கு எங்கே தெரியப் போகிறது என்று பேசாமலிருந்து விட்டேன். படுக்கையில் படுத்துக் கொண்டு அன்று காலை கடியாரம் உடைந்தது, பஸ்ஸில் ஒரு அணா தவறி விழுந்தது, கண்டக்டரிடம் பதில் மூன்றணா 'கோட்டை' விட்டது எல்லாவற்றையும் நினைக்கும் பொழுதுதான் கைலாசம் சொன்னது வேதவாக்கு என்று புலப்பட்டது. உடனே ஏதாவது ஒரு கார் வாங்கிவிட வேண்டுமென்று தீர்மானித்து விட்டேன்.

மறுநாள் காலை அதே பஸ் ஸ்டாண்டில் வக்கீல் கைலாசம் நின்று கொண்டிருந்தார்.

அவர் என்னைப் பார்த்ததும் "நேற்று எத்தனை மணிக்கு ஆபீஸுக்குப் போனீர்கள்?'' என்று கேட்டுவிட்டு, மறுபடியும் சொந்தமாக ஒரு காரை வாங்கிக் கொள்ளும்படி உபதேசம் செய்தார். நான் உடனே அவரிடம் "ஒரு நல்ல 'செகண்ட் ஹாண்ட்' கார் இருந்தால் சொல்லுங்கோ, ஸார்! இனிமேல் என்னால் இந்த பஸ்ஸில் போக முடியாது. நேற்று நான் பட்ட கஷ்டம் ஈசுவரனுக்குத்தான் வெளிச்சம்'' என்றேன்.

"ஸார், கார் வாங்கறதுன்னா, நம்ம 'பழனிசாமி ஆட்டோமொபைல்ஸ்' கம்பெனிக்காரனிடம் சொல்லுங்கள், நல்ல காராப் பார்த்துத் தருவான்'' என்றார். நானும் பழனிசாமியிடம் போய் நல்ல 'செகண்ட் ஹாண்ட்' கார் ஒன்று பார்த்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவனும் 'சரி' யென்று ஒப்புக் கொண்டான். மறுநாள் காலை அவன் என் வீட்டுக்கு வந்து. "சாமி ஒரு நல்ல 'பேபி ஆஸ்டின்' விலைக்கு வந்திருக்கு, வாங்கிக் கொள்ளுகிறீர்களா?'' என்று கேட்டான். "விலை எவ்வளவு?'' என்று கேட்டேன் நான். "விலையைப் பத்தி என்ன சாமி? முதலில் வந்து காரைப் பாருங்க'' என்றான் பழனிசாமி.

நான் அவனுடன் போய்க் காரைப் பார்த்தேன். பின் 'ஸீட்'டில் மெத்தை கிழிந்து ஸ்பிரிங் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. 'மட் கார்டு' நான்கும் நசுங்கி, ஏற்றத் தாழ்வாக இருந்தன. வலதுபுற விளக்கில் பல்பும் இல்லை, கண்ணாடியும் இல்லை.


"விலை எவ்வளவு?'' என்று கேட்டேன்.

"எல்லா ரிப்பேர்களும் செய்து சுத்தமாக வண்டியைக் கொடுத்து விடுகிறோம். மூவாயிரம் ரூபாய் கொடுத்து விடுங்கள்'' என்றான் அவன்.

நான் யோசித்தேன். மூவாயிர ரூபாய்க்கு இப்போது எங்கே கார் கிடைக்கப் போகிறது? ஆகையால் அவன் கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்தேன்.

மறுநாட் காலை பழனிசாமியும் ஒரு ரிக்ஷாக்காரனுமாகச் சேர்ந்து அந்தக் காரை என் வீட்டுக்குத் தள்ளிக் கொண்டு வந்தார்கள். பழனிசாமி என்னிடம் "கார் நன்றாக ரிப்பேர் ஆய்விட்டது. பெட்ரோல் போட்டு நீங்க ஓட்டிப் பாருங்க; ரொம்ப ஜோரா ஓடும். இந்தாங்க காருடைய 'ரிஜிஸ்டிரேஷன்' புஸ்தகம். இதைப் பெட்ரோல் ரேஷன் ஆபீஸிலே காட்டினீங்களானால் கூபன் கொடுப்பாங்க'' என்றான்.

நல்ல கேள்வி!



"இதற்கு முன்னால் நீங்கள் வேறு எந்த சபாவிலாவது பாடியிருக்கிறீர்களா?''
"இல்லையே! — ஏன்?''
"உங்கள் முகமெல்லாம் ஒரே காயமாக இருக்கிறதே, அதனால்தான் கேட்டேன்!''

நான் அந்தப் புத்தகத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். முதல் பக்கத்தில் "ஸ்ரீ கைலாசம், நம்பர் 4. சுந்தரம் பிள்ளை தெரு, மைலாப்பூர்" என்று எழுதியிருந்தது.

நான் திடுக்கிட்டு "என்னப்பா, இது கைலாசத்தின் காரா?" என்று கேட்டேன்.

பழனிசாமியை அங்கே காணவே காணோம்!

உடனே என் மனைவி, "ஐயையோ, அது கைலாச முதலியார் காரா? அது ஓடவே ஓடாதே! அதை யாரோ ஒரு கட்சிக்காரன் அவருக்குப் பீஸ் கொடுக்க முடியாமல் அதை அவர் தலையிலே கட்டிவிட்டுப் போய்விட்டானாம். அவரும் ஒரு வருஷமா அதை விற்கணும்னு பார்த்தார், முடியவில்லை. ஆயிர ரூபாய்க்குக்கூட யாரும் அதைக் கேட்கவில்லை. அதை இப்படி யாராவது மூவாயிரம் ரூபாய் போட்டு வாங்குவார்களா? என் கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நான் வேண்டாம்னு சொல்லியிருப்பேனே" என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

• • •

நான் இப்போதும் பஸ்ஸில் தான் போய்க் கொண்டிருக்கிறேன். ஆனால், கைலாசம் என்னுடைய கண்ணில் ஒரு தடவைகூடத் தென்படுவதே இல்லை.

★ ★ ★

சாட்சி சாம்பசிவம்

என். கே. ர.

கோர்ட்டில் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது. கடனைத் திருப்பிக் கொடுக்காததற்காக ஒருவனை அடித்துவிட்டதாக வழக்கு. முதலில் நீதிபதி பிரதிவாதியை அழைத்துக் கேட்டார்.

"நீர் வாதிக்குக் கடன் கொடுத்தது உண்மையா?"

"ஆம், உண்மை."

"கடனைத் திருப்பிக் கொடுக்காததற்காக நீர் வாதி வீட்டுக்குப் போய் அவனை அடித்தது உண்மையா?"

"நான் வாதி வீட்டுக்குப் போனது உண்மை, அவனைத் திட்டியதும் உண்மை. ஆனால், அவனை நான் தொடவே இல்லை. வீணாக என் மீது பழியைச் சுமத்தப் பார்க்கிறார்கள்" என்றான் பிரதிவாதி முருகேசன்.

பிறகு நீதிபதி சாட்சியாக வந்த சாம்பசிவத்தை விசாரித்தார்.

"நீர் யார்?"

"நான் வாதி மன்னார்சாமி வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருப்பவன்."

"சரி, நீர் வாதியைப் பிரதிவாதி அவமரியாதையாகத் திட்டியதைக் கேட்டீரா?"

"ஆமாம், நன்றாகக் கேட்டேன். திட்டியதை எல்லாம் எழுதிக்கூட வைத்திருக்கிறேன்."

"அவர் வாதியை அடித்தது உண்மையா?"

"ஆம், முற்றிலும் உண்மை."

"அதை நீர் உம் கண்ணால் பார்த்தீரா?"

"இல்லை, நான் பார்க்கவில்லை. ஆனால் பிரதிவாதி, வாதியைத் திட்டிக்கொண்டே அடிக்கும் சத்தத்தைக் கேட்டேன்."

"சத்தத்தைக் கொண்டு, அவர்தான் அடித்தார் என்று சொல்லிவிட முடியுமா? உமது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. நீர் போகலாம்."

சாட்சி சாம்பசிவம் சாட்சிக் கூண்டை விட்டுக் கீழே இறங்கிப் போகும்பொழுது சற்று பலமாக இரைந்து சிரித்துக் கொண்டே போனார்.

இதைக் கேட்டு நீதிபதிக்குக் கோபம் உண்டாயிற்று. அவர் மீண்டும் சாட்சியை அழைத்து "நீர் கூண்டை விட்டு இறங்கிப் போகும்பொழுது ஏன் சிரித்தீர்?" என்று கேட்டார்.

"இல்லையே, நான் சிரிக்கவே இல்லையே!" என்றார் சாட்சி சாம்பசிவம்.

"ஏன், பொய் சொல்லுகிறீர்? நீர் சிரித்ததை நான் கேட்டேனே!" என்றார் நீதிபதி.




"கேட்டால் போதுமா? கேட்டதை வைத்துக் கொண்டு நான்தான் சிரித்தேன் என்று எப்படிச் சொல்ல முடியும்? கண்ணால் பார்க்க வேண்டாமா?" என்றார் சாம்பசிவம்.

நீதிபதி திகைத்துப் போனார்.


அவளுக்கு
அவனுக்கு
அவர்களுக்கு
விடோபெரின்


பட்டு
மைசூர் சில்க்



Edited. Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras

கல்கி



KALKI மே 16, 1948 4 அண

சரோஜா மில்ஸ் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1935)

டெலிபோன: கோயம்புத்தூர் 157

ஆபீஸ்: சிங்காநல்லூர் போஸ்டு, கோயம்புத்தூர்

★

மூலதனம்:

அதிகாரம் பெற்றது	....	ரூ. 15,00,000
வசூலானது	....	ரூ. 8,49,000

★

மொத்தம் கதிர்கள்: 13,684

★

28, 30, 32, 40, 2/42 நம்பர் ஒத்தை
இரட்டை நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

★

நிருவாக கர்த்தர்கள்:

தியாகராஜ செட்டி அன் சன்ஸ் லிமிடெட்

சிங்காநல்லூர் :: கோயம்புத்தூர்

REGD. NO. M. 4392

